769

D
V211,31 'N67
N67:5.4
65025

ASO(B)
MADRAS STATE ARCHIVES
4962 C
EGMORE, MADRAS

வெளியீடு—23—5—1968]
Issued—23—5—1968]

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை, 1967 ஜூலை 15

Saturday, 15th July 1967

தொகுதி V—எண். 4

Volume V—No. 4

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assem[illegible] [illegible]epartment
Fo[illegible] [illegible] Madras-9

211, 31 N67
N67.5.4

V211,31 N67
N67.5-4

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள், விடைகள் .. .. .. .. .. | 409–429 |
| 2 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) பலலடம் தொகுதியில் போலீஸ் நடவடிக்கையினால் உணவு தானியங்கள் கிடைக்காமை .. | 429 |
| (இ) சென்னை நகர் தீவிபத்துக்கள்பற்றி போலீஸ் துறைத தலைவரின் அறிக்கை .. .. .. | 429–431 |
| 3 கவன ஈர்ப்பு— | |
| சேலம் மாவட்டம் வெள்ளையம்பாளையம் கிராமத்தில் புளிச்சை நார் உபயோகிப்போரிடமிருந்து விற்பனை வரி வசூல் .. .. .. .. .. .. | 431–432 |
| 4 அறிவிபபுகள்— | |
| (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா .. .. .. | 432 |
| (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா .. .. .. | 433 |
| 5 அரசினர் மசோதாக்கள்— | |
| (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா .. .. .. | 432 |
| (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு இனாம்கள் (துணை) திருத்த மசோதா .. .. .. .. | 433 |
| (உ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா .. | 433 |
| (எ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா .. .. .. | 433 |
| (ஐ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) மசோதா, (சட்டப் பேரவை மசோதா எண் 14/1967) .. .. .. .. .. .. | 434-488 |
| 6 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 488 |

STATE ARCHIVES
22 JUL 1968
MADRAS
65025

## தமிழக சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1967 ஜூலை 15

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள்—விடைகள். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

வினாக்கள் **346, 347** தள்ளிவைக்கப்படுகின்றன.

### உலக வர்த்தகப் பொருட்காட்சி

*** 348 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :**
**திரு. கரு. சீமைச்சாமி :** } மதிப்பிற்குரிய கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் உலக வர்த்தகப் பொருட்காட்சி நடத்த ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) அனைத்து இந்திய உற்பத்தியாளர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் அனைத்து நாடுகள் இந்திய வர்த்தகத் தொழில் கண்காட்சி 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ம் நாள் முதல் பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் முடிய சென்னையில் நடைபெறும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், உலக வர்த்தகப் பொருட்காட்சியில் எந்தெந்த நாடுகள் கலந்துகொள்ளுகின்றன ? பொருட்காட்சி நடக்கின்ற சமயத்திலே உலகத் தமிழர் மாநாடும் அதே தேதியில் நடைபெறுவதாலே வெளி நாடுகளில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு இடநெருக்கடி ஏற்படும். ஆகையால் அவர்களுக்கு இடவசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முக்கியமான பல நாடுகள் இதில் கலந்துகொள்ளுகின்றன. இதைப்பற்றி பல நாடுகளோடு கண்காட்சிக் குழுவினர் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். மேலும் இதைப் பற்றி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைப்பெற்று வருகின்றன. இந்தக் கண்காட்சி ஜனவரி 12-ம் நாள் முதல் பிப்ரவரி 17-ம் நாள் வரை நடைபெற இருக்கிறது. ஆனால் உலகத் தமிழர் மாநாடு ஜனவரி 3-ம் நாளில் இருந்து 10-ம் நாள் வரைதான் நடைபெற இருக்கிறது. ஆகையால் இந்த 10-ம் தேதிக்குப் பிறகு கண்காட்சிக்கு வருகிறவர்களுக்கு இடவசதி செய்து கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

**THIRU K. VINAYAKAM :** May I know the salient features of this International Fair? What is the cost involved for holding such a kind of Fair and what is the contribution which the Madras Government is likely to make towards this Fair?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் கண்காட்சி அனைத்து நாடுகள் வணிகத் தொழில் கண்காட்சி என்ற பெயரால் நடைபெற இருக்கிறது. இந்த நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்களை அறிமுகப்படுத்துவற்கும் பயன்படும். வெளிநாட்டிலிருந்து வருகின்ற பொருளை தொழில் வல்லுநர்களும். தொழில் துறையினரும் ஆராய்ந்து அதை மேலும் ஆராய்ந்து பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும். உலக நாடுகள் உற்பத்தியாளர்கள் தொடர்பும் இதனால் ஏற்படும். இந்த நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்கள் மற்ற நாடுகளுக்கு தேவைப்படுமா என்று ஆராயப்படும். தமிழகத்திலே என்னென்ன தொழில்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்பதும் ஆராயப்படும். இதற்கு வேண்டிய முழு ஒத்துழைப்பை தமிழக அரசு தருவதாக அறிவித்திருக்கிறது. இட வசதிக்காக 300 ஏக்கர் பகுதி மேற்கு சென்னையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மூன்று கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரையிலும் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருகிறது. அனைத்து நாடுகள் வணிகத்தொழில் கண்காட்சியில் இந்திய அரசாங்கத்திற்கு பங்கு இருக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிற காரணத்தினால் இந்திய அரசு ஓரளவு செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. மாநில அரசு ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. இரண்டு லட்சத்து எழுபத்தையாயிரத்து ஐந்நூறு ரூபாய் இடவசதிக்காக வாடகை கொடுத்திருக்கிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த காட்சிகளையும் அங்கே வைப்பதற்கு 35 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று கருதப்படுகிறது. இந்த வகையிலே மேலும் ஒரு கோடியே 50 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அரசோ அல்லது தொழில் கண்காட்சி குழுவினரோ பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மாநில அரசு தெரிவித்திருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், இந்தக் கண்காட்சியிலே எந்தெந்த நாடுகள் கலந்துகொள்ளும் என்று கேட்டதற்கு பல நாடுகள் கலந்துகொள்ளும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இதில் எந்தெந்த நாடுகள் கலந்துகொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதைப்பற்றிய விவரங்கள் இல்லை. தொழில் வர்த்தகக் குழுவினரைக் கேட்டு விவரம் அளிக்கப்படும். குறிப்பாக இதிலே ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் கலந்துகொள்ள இசைந்திருக்கின்றன.

**Thiru K. VINAYAKAM :** Sir, may I know whether an invitation has been sent to Red China?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி அழைப்பு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை.

**திரு. என். சங்கரய்யா :** பொருட்காட்சியிலே வரக்கூடிய பல்வேறு இயந்திரங்களை பங்கு எடுத்துக்கொள்ளுகின்ற நாடுகள் அவைகளை இந்தியாவிலேயே விட்டுவிட்டுப்போவதாகச் செய்தி பிரசுரிக்கப்பட்டது. அம்மாதிரி ஏற்பாடுகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இயந்திரங்களை அந்தந்த நாடுகள் விட்டுவிட்டுச் செல்கின்ற நிலை ஏற்பட்டால் அவற்றை தமிழக அரசுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை இந்திய அரசுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு இதிலே பெரும் செலவை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால் இனமாக அவர்கள் தருகின்ற பொருள்களையும் தமிழக அரசுக்குத் தந்து விட்டால் அவற்றை பொறியியல் போன்ற துறைகளில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற கருத்து இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



**Dr. H. V. HANDE :** Last year we were told that the Government was not directly participating in this Fair and a private organisation has been given charge of the whole affair. I wish to know whether the Government of Madras is directly participating in this Fair. If the Government of Madras is in charge of this Fair, may I know the amount of work turned out so far?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கண்காட்சியை ஆல் இந்தியா மானுபாக்சரேர்ஸ் ஆர்கனைசேஷன் ஏற்றுக்கொண்டிருக்கின்ற முயற்சிக்கு இந்திய அரசும், தமிழக அரசும் உதவி செய்கிறது. சென்னை மாநகராட்சி சாலைகள் போடுதல் விளக்கொளி கொடுத்தல், போன்றவற்றை அந்தக் கண்காட்சிக்கு செல்லுகிற இடம் வரையிலும் செய்து வருகிறது. ஹவுசிங் போர்டாரால், வேறு பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு திட்டங்கள் அதாவது சாலைகள் போடுதல், ஒளிவிளக்கேற்றுதல், கழிவுநீர் ஓட்டம் போன்றவைகளை ஹவுசிங் போர்ட் செய்து வருகிறது. தமிழக அரசு, ஹவுசிங் போர்ட், சென்னை மாநகராட்சி ஆகிய இவையனைத்தும் இதிலே ஈடுபட்டிருக்கின்றன. இதில் இந்திய அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவருகிறது. இதற்காக ஒரு ஹை பவர் கமிட்டி, தலைமைச் செயலாளரை தலைவராகப் போட்டு மற்ற முக்கியமான 4, 5 இலாக்கா செயலாளர்களையும் போட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்தக் கண்காட்சி வெறும் கண்காட்சியாக இல்லாமல் வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களை எல்லாம் இங்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த முயற்சியையும் இந்திய அரசுதான் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதைப்பற்றி ஒரு சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பொருள் கொண்டுவந்தாலும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள் பல இருக்கின்றன. அந்தப் பொருள்களை அனுமதிக்கமுடியுமா என்று இந்திய அரசு கவனிக்க வேண்டும். இறக்குமதிப் பொருள்களைப் பற்றி இந்திய அரசுதான் கவனிக்கவேண்டும்.

**திரு. கி. ஜயராமன் :** பொருட்காட்சி நிர்வாகக்குழுவின் தலைவர், செயலாளர்களின் பெயர்கள் என்ன ? எந்த அரசாங்கம் நியமித்தது ? அவர்கள் எந்தத் தகுதியினால் நியமிக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆல் இண்டியா மானுபாக்சரர்ஸ் ஆர்கனைசேஷன்தான் இதை நடத்துகிறது என்று சொன்னேன். அதனுடைய தலைவர்தான் இதற்கும் தலைவராக இருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

### அற நிலையங்கள்

***349 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்விதொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அற நிலையச் சட்டம் 74-ம் பிரிவின்படி நோட்டிபிகேஷன் செய்யப்பட்ட அற நிலையங்கள் எத்தனை?

(இ) எல்லாவற்றிற்கும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஐந்து அற நிலையங்கள்.

(இ) நான்கு அறநிலையங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஐந்தாவது அறநிலையத்திற்கும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருக்கிறது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** ஐயா, ஒரு கோவிலின் பொறுப்பை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குக் கொடுத்து, இன்னும் 50 மைலுக்கு அப்பாலுள்ள ஒன்றிரண்டு கோவில்களுக்கும் பொறுப்பு கொடுப்பதால், ஊழல்களும், சிக்கல்களும் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க இந்த முறையை மாற்ற சர்க்கார் விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்து யோசனையில் எடுக்கப்படும். கேட்ட கேள்வி ஐந்து கோவில்கள் பற்றியது. அதில் நான்கு கோவில்களுக்கு நியமனம் ஆகிவிட்டது. ஐந்தாவது கோவிலுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தேன்.

*350 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலூக்காவிலுள்ள தருமபுரம் மடம், நாகப்பட்டினம் தாலூக்கா சிக்கல், நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம் இவைகளுக்கான சொத்துப் பதிவேடுகள் 1959-ம் வருடத்திய அறநிலையச் சட்டங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நாகப்பட்டினம் தாலூகாவில் சிக்கலிலுள்ள நவநீதேஸ்வரர் தேவஸ்தானம் சம்பந்தமான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஒப்புதல் பெற்றது. தருமபுரத்தில் உள்ள தருமபுரம் மடத்தைப் பொறுத்தவரையில், அதன் சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** ஐயா, சொத்துக்களின் விவரங்கள் என்ன? ஏன் ஒப்புதல் பெறவில்லை ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தர்மபுரம் ரெஜிஸ்டர் அந்த ஆதீனத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அளிக்கவேண்டும் என்று துணை கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். விரைவில் அதைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

### சுவர்ணபுரீஸ்வரர் கோயில், சித்தாய்மூர்

*351 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூக்கா, சித்தாய்மூர் சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் நிர்வாக அலுவலர் ஏராளமான நகைகளைக் கையாடல் செய்ததாக 1966-ஆம் ஆண்டில் மேற்படி கிராம மக்களிடமிருந்து வந்த புகாரின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த ஆலய நிர்வாக அதிகாரிக்கெதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குற்றங்களுக்கான விசாரணை முடிவடையும் வரை அவர் தற்காலிகமாய் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

**திரு கொ. இர. ஞானசம்பந்தன் :** ஐயா, சென்ற ஆட்சியில் அவர்களுக்கு நெருங்கியவர் என்ற காரணத்தால், குற்றம் கண்டு பிடிக்கப்பட்டும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தள்ளிவைக்கப்பட்டது. இப்பொழுது அப்படி மிஸப்ரோப்ரியேஷன் செய்த சொத்துக்களை ரெகவர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர் மேல் கிரிமினல் வழக்குத் தொடர எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிடும் விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. குறிப்பிட்டவர் ரூபாய் 13,533·94 அளவில் கணக்குகளைக் காட்டவில்லை என்று அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடக்கிறது.

### மதுரையில் மற்றும் ஒரு கல்லூரி

*352 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரத்தில் உள்ள சௌராஷ்டிரா சமூகக் கல்வி ஸ்தாபனத்தார்களிடமிருந்து மதுரை நகரில் மற்றொரு கல்லூரி ஆரம்பிக்க அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தொடங்கக் கருதியுள்ள புதிய கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் இணைப்பு வழங்கியதும் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 353, 354, 355 தள்ளிவைக்கப்படுகின்றன.

### கிணறு வெட்ட மானியம்

*356 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** } மதிப்பிற்குரிய விவசாய
**திரு டி. எஸ். ஆதிமூலம் :** }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு சப்சிடி, லோன் முதலியன எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) எந்த ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது ?

(உ) ஜில்லாவிற்கு ஜில்லா மாறுதல் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) தற்போதுள்ள ஆணைகளின்படி புதிய கிணறுகள் மானியத் திட்டத்தின் கீழ் கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூபாய் 5,000 கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்டுவதற்கு ஆன செலவில் ரூபாய் 500 க்கு மேற்படாமல் 25 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(இ) புதிய கிணறுகள் மானியத் திட்டம் 1946-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) இல்லை, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாளவாடி பிர்க்காவில் மட்டுமே, கிணறு வெட்டுவதற்கான செலவில் 50 சதவீதம் உதவித் தொகையாக (அதிக அளவு ரூபாய் 1,500-க்கு மேற்படாமல்) வழங்கப்படுகிறது.

**திரு. என். சங்கரய்யா :** மாநில அரசு 11 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற திட்டத்தைக் கொண்டு இருப்பதால், அந்த வகையில் கிணறுகளும் அதிகப்பட வேண்டும் என்று, கிணறுகளுக்கு அதிகப்படியான உதவிகள் கொடுக்க யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1967–68-ம் ஆண்டில் 300 கிணறுகள் வெட்ட அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று, கூடுதலான தொகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் ரூ. 20 கோடியளவு உதவி கேட்டிருக்கிறோம். அவர்கள் ரூ. 5 கோடி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருபது கோடி கட்டாயம் கொடுத்தால் கனம் அங்கத்தினர் யோசனையை முழுமையாகச் செயல்படுத்தலாம். இல்லாவிடில் கிணறுகள் எண்ணிக்கை குறையும்.

(இ) நான்கு அறநிலையங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஐந்தாவது அறநிலையத்திற்கும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, ஒரு கோவிலின் பொறுப்பை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குக் கொடுத்து, இன்னும் 50 மைலுக்கு அப்பாலுள்ள ஒன்றிரண்டு கோவில்களுக்கும் பொறுப்பு கொடுப்பதால் ஊழல்களும், சிக்கல்களும் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க இந்த முறையை மாற்ற சர்க்கார் விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்து யோசனையில் எடுக்கப்படும். கேட்ட கேள்வி ஐந்து கோவில்கள் பற்றியது. அதில் நான்கு கோவில்களுக்கு நியமனம் ஆகிவிட்டது. ஐந்தாவது கோவிலுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தேன்.

*350 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலூக்காவிலுள்ள தருமபுரம் மடம், நாகப்பட்டினம் தாலுக்கா சிக்கல், நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம் இவைகளுக்கான சொத்து பதிவேடுகள் 1959-ம் வருடத்திய அறநிலையச் சட்டங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நாகப்பட்டினம் தாலுக்காவில் சிக்கலிலுள்ள நவநீதேஸ்வரர் தேவஸ்தானம் சம்பந்தமான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஒப்புதல் பெற்றது. தருமபுரத்தில் உள்ள தருமபுரம் மடத்தைப் பொறுத்தவரையில், அதன் சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சொத்துக்களின் விவரங்கள் என்ன? ஏன் ஒப்புதல் பெறவில்லை ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தர்மபுரம் ரெஜிஸ்டர் அந்த ஆதீனத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அளிக்கவேண்டும் என்று துணை கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். விரைவில் அதைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

### சுவர்ணபுரீஸ்வரர் கோயில், சித்தாய்மூர்

*351 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூக்கா, சித்தாய்மூர் சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் நிர்வாக அலுவலர் ஏராளமான நகைகளைக் கையாடல் செய்ததாக 1966-ஆம் ஆண்டில் மேற்படி கிராம மக்களிடமிருந்து வந்த புகாரின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த ஆலய நிர்வாக அதிகாரிக்கெதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குற்றங்களுக்கான விசாரணை முடிவடையும் வரை அவர் தற்காலிகமாய் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சென்ற ஆட்சியில் அவர்களுக்கு நெருங்கியவர் என்ற காரணத்தால், குற்றம் கண்டு பிடிக்கப்பட்டும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது அப்படி மிஸப்ரோப்ரியேஷன் செய்த சொத்துக்களை ரெகவர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர் மேல் கிரிமினல் வழக்குத் தொடர எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிடும் விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. குறிப்பிட்டவர் ரூபாய் 13,533·94 அளவில் கணக்குகளைக் காட்டவில்லை என்று அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடக்கிறது.

### மதுரையில் மற்றும் ஒரு கல்லூரி

*352 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரத்தில் உள்ள சௌராஷ்டிரா சமூகக் கல்வி ஸ்தாபனத்தார்களிடமிருந்து மதுரை நகரில் மற்றொரு கல்லூரி ஆரம்பிக்க அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தொடங்கக் கருதியுள்ள புதிய கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் இணைப்பு வழங்கியதும் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 353, 354, 355 தள்ளிவைக்கப்படுகின்றன.

### கிணறு வெட்ட மானியம்

*356 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : } மதிப்பிற்குரிய விவசாய
திரு டி. எஸ். ஆதிமூலம் : }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு சப்சிடி, லோன் முதலியன எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) எந்த ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது ?

(உ) ஜில்லாவிற்கு ஜில்லா மாறுதல் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) தற்போதுள்ள ஆணைகளின் படி புதிய கிணறுகள் மானியத்திட்டத்தின் கீழ் கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூபாய் 5,000 கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்டுவதற்கு ஆன செலவில் ரூபாய் 500 க்கு மேற்படாமல் 25 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(இ) புதிய கிணறுகள் மானியத் திட்டம் 1946-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) இல்லை, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாளவாடி பிர்க்காவில் மட்டுமே, கிணறு வெட்டுவதற்கான செலவில் 50 சதவீதம் உதவித் தொகையாக (அதிக அளவு ரூபாய் 1,500-க்கு மேற்படாமல்) வழங்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : மாநில அரசு 11 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற திட்டத்தைக் கொண்டு இருப்பதால், அந்த வகையில் கிணறுகளும் அதிகப்பட வேண்டும் என்று, கிணறுகளுக்கு அதிகப்படியான உதவிகள் கொடுக்க யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967–68-ம் ஆண்டில் 300 கிணறுகள் வெட்ட அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று, கூடுதலான தொகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் ரூ. 20 கோடியளவு உதவி கேட்டிருக்கிறோம். அவர்கள் ரூ. 5 கோடி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருபது கோடி கட்டாயம் கொடுத்தால் கனம் அங்கத்தினர் யோசனையை முழுமையாகச் செயல்படுத்தலாம். இல்லாவிடில் கிணறுகள் எண்ணிக்கை குறையும்.

**திரு. கே. விநாயகம்:** சார், இந்த உணவு நெருக்கடியைப் பொறுத்து, கிணறுகள் வெட்டுவது என்று நம்முடைய திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வடக்கே பல ராச்சியங்களில் பஞ்சம் ஏற்பட்டதால், அவர்கள் உடனடியாக, செலவுக் குறைவில், சீக்கிரமாக கிணறுகள் வெட்ட "கச்சா வெல்ஸ்" என்று செய்து அதிகச் செலவில்லாமலும், தொல்லையில்லாமலும் செய்கிறார்களே, அப்படிப்பட்ட திட்டத்தை நம் ராச்சியத்தில் கொண்டு வர முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அங்கே கச்சா வெல்ஸ் எடுப்பது பற்றி நம்முடைய அரசுக்குத் தகவல் வரவில்லை. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட யோசனையை மேற்கொண்டு தகவல் விசாரிக்கிறோம். திட்டம் நல்லதாக இருந்தால் அமுல்படுத்த யோசிக்கலாம்.

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, கிணறு வெட்டுகிறவர்கள் கொஞ்சம் வெட்டிவிட்டு, தொகை பற்றாத காரணத்தால் தொடர்ந்து வெட்ட முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, பழைய கிணறுகளை ஆழப்படுத்த உதவியளிக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஏற்கனவே கொடுத்து வந்த தொகையை இப்பொழுது கூடுதலாக ஆக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் ரூ. 5,000 என்று கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐயாயிரமும் போதாது என்று இருக்கிறது சில இடங்களில். அங்கே சொந்தப் பணத்தைப் போட்டுத்தான் கிணறு வெட்டுகிறார்கள். தாளவாடி பிர்க்கா நீங்கலாக கூடுதல் செய்து அளிக்கப்படவில்லை. சேலம், கோவை மாவட்டங்களில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் சர்க்கார் உணருகிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** சார், இந்த கிணறு வெட்டக் கொடுக்கும் தொகை குறைவாக இருப்பதால், அதிகமாக விவசாயிகள் கிணறு வெட்ட முன் வருவதில்லை. ஆகவே, இந்த 25 சதவிகிதம் என்பதை 50 சதவிகிதம் என்று உயர்த்திக் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இன்றைய நிலையில், சர்க்காருடைய நிதிநிலையை அனுசரித்து, 25 சதவிகிதம் தான் கொடுக்க முடியும். நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, மத்திய சர்க்காருடைய நிதி உதவி பெரும் அளவு கிடைத்தால் அதைப் பற்றி யோசிக்கலாம். நாம் அவர்களிடம் கேட்டிருப்பது 20 கோடி, அவர்கள் கொடுப்பதாகச் சொல்லியிருப்பது 5 கோடி. கிடைக்கும் தொகையைப் பொருத்து நாம் யோசிக்க வேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சார், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், பழுது பார்க்கவும் லோன் கொடுக்க வழிவகை உண்டா ?

**மாண்புமிகு திரு. . ஏ. கோவிந்தசாமி:** இப்பொழுதும் பழைய கிணறுகளை ஆழப்படுத்த சர்க்கார் நிதி உதவி செய் . ..

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, தற்போது தரப்படும் கிணற்றுக் கடன்களில் கூட்டுப் பட்டா நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கும், நிலங்கள்மீது வில்லங்கங்கள் இருப்பவர்களுக்கும் கடன்கள் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன. அந்த சிரமங்களைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நேற்று விவசாய மானியத்தின் மீது இறுதியாக பதில் அளிக்கும் போது, கூட்டுப்பட்டா இருப்பதால் கடன்கள் வழங்குவதில் சங்கடங்கள் இருப்பதைப் பரிசீலனை செய்ய இரண்டு மாவட்டங்களைப் பரிட்சைக்கு எடுத்திருக்கிறது எனக் கூறினேன். அது வெற்றிகரமாக முடிந்தால் எந்த அளவுக்கு செயல் படுத்தலாம் என்று யோசிக்கலாம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** கிணறு வெட்ட கடன் கொடுப்பதை ஆர். டி. ஓ. வந்துதான் கொடுக்க வேண்டும் என்று சொல்வதால் மிக மிக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, பஞ்சாயத்துயூனியன் கமிஷனா கொடுக்கலாம் என்று செய்ய முடியுமா ?





**மாண்புமிகு திரு. ஏ . கோவிந்தசாமி:** ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ரூ. 2,000 வரை கொடுக்க உரிமை இருந்தது. அது இப்போது ரூ. 3,000 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் என்றால் ஆர். டி. ஓ. வினுடைய அனுமதி பெற்றாக வேண்டும்.

**திரு. கே. சகாதேவ கண்டர்:** புதிய கிணறுகள் வெட்ட விவசாயிகள் விண்ணப்பம் போட்டால் ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும் அவை பரிசீலனை செய்யப்படாமல் இருக்கிறதே, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் கேள்வியில் ஒரு வருஷமாகக் கவனிக்கப்படவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றே நான்கு மாதங்கள்தான் ஆகிறது. ஆகையினால்தான் இப்படிப்பட்ட குறைகளைத் தவிர்க்க ஒவ்வொரு விவசாய கருத்தரங்கிலும் இப்படிப்பட்ட மனுக்களை ஒரு மாத காலத்திற்குள் பரிசீலனை செய்து கடன் கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்படமாட்டாது என்பதை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு பதில் அளித்துத் தெரிவிக்க வேண்டும் என்கிற அளவுக்கும், கடன் தொகைகள் முழுமையாகக் கிடைக்கச் செய்யவும் ஏற்பாடுகள் செய்கிறோம். கடனைக் குறைத்துக் கொடுத்தாலும் காலத்தில் கொடுக்க வேண்டும் என்று செய்கிறோம் எங்கேயாவது காலதாமதம் இருப்பதாக தகவல் கொடுத்தால், சம்பந்தப்பட்ட கமிஷனர்களை விசாரிக்கத் தயங்க மாட்டோம். ஒரு வருஷமாக ஏதாவது மனுக்கள் பைசல் ஆகாமல் இருந்தால், அது பற்றி முழுத் தகவலும் அங்கத்தினர் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு கடன் தொகையாக, ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர்த்து அக்ரிகல்சரல் என்ஜினீயரிங் ஆபீசில், "ராக் ப்ளாக்டிங் யூனிட்" இருப்பதை உபயோகப்படுத்திக் கிணறுகளாக வெட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இன்றைய நிலையில் அரசாங்கம் கடனாகத்தான் கொடுத்து வருகிறது. அங்கத்தினரின் யோசனை நல்ல யோசனைதான். அதற்காகக் கூடுதலாக அதிகாரிகளை நியமிக்க வேண்டியிருக்கும். அந்தச் செலவு அதிகரிக்கும். உண்மையில் விவசாயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், விவசாயம் செய்பவர்கள் அந்தக் கடனை முழுமையாகப் பயன்படுத்தினால் இந்தச் சந்தேகம் வராது. சிலயிடங்களில் விவசாயிகள் கடன் பெறச் சென்று அந்தக் கடன் முழுமையாகக் கிடைக்காததால் எந்தக் காரணத்திற்காகப் பெறுகிறார்களோ அதற்குப் பயன்படுத்தாத நிலை கூட ஏற்படுகிறது. அதுபற்றிய தகவல் எல்லாம் வந்திருக்கிறது. அந்த நிலையில் எனக்கு நேரடியாகப் பல பிரச்னைகள் கூடத் தெரியும். விவசாயிகள் எதற்காக கடன் பெறுகிறார்களோ அதற்காகவே அந்தப் பணத்தை முழுக்க முழுக்க செலவழிக்க வேண்டுமென்று ஒவ்வொரு கருத்தரங்கிலும் சொல்லி வருகிறோம். விவசாயிகளுக்கு காலாகாலத்தில், கிணறு வெட்ட கேட்கிற காலத்தில்—மழைக் காலத்தில் கிணறுகள் வெட்ட முடியாது—கடன் கொடுக்க வேண்டுமென்று கமிஷனரிடம் சொல்லப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதன் மூலம், எதற்காகக் கடன் பெறுகிறார்களோ அதற்குப் பயன்படுத்த முடியும் என்று சர்க்கார் கருதித்தான், விவசாயிகளை நம்பித்தான் பணம் கொடுத்திருக்கிறது. அங்கத்தினரின் யோசனை நல்ல யோசனைதான். அதனால் சர்க்காருக்கு கூடுதலாகச் செலவாகும்.

**திரு. டி. தங்கப்பன்:** தலைவர் அவர்களே, இந்தக் கிணறு வெட்டும் திட்டம் மாகாணம் முழுவதும் அமுலாக்கப்படுகிறதா ? குறிப்பிட்ட ஜில்லாக்கள் மட்டும் ஏற்படுத்தப்படுகிறதா ?

[1967 ஜூலை 15

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க அரசாங்கம் பணத்தைச் செலவு செய்ய முடியாது. ஆனால் கிணறு வெட்ட மானியம் இன்றையத்தினம் இந்தந்த மாவட்டத்திற்கு இன்னின்ன தொகை என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். கூடுதலாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்ற கருத்தை அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பாரானால் அதுபற்றி பரிசீலிக்கலாம். இன்றுள்ள நிலையில், இப்பொழுது அரசாங்கம் குறிப்பிட்ட அளவு, இரண்டு பகுதிகளாகப் பணத்தைப் பிரித்துத் தருகிறார்கள். வேலை நடக்கும்பொழுது வேலையின் அளவை எடுத்துக் கொண்டு தொடர்ந்து வேலை நடத்த இதைத் தருகிறோம். அதிருஷ்டம் இல்லை, ஆகவே தள்ளிவிடுங்கள் என்று சொன்னால் அப்பொழுது நஷ்டக் கணக்கு அதிகமாகப் போய்விடும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஜில்லாவாரியாக எவ்வளவு லட்ச ரூபாய் கிணறுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 1966-67-ஆம் ஆண்டுக்குரியது என்று நினைக்கிறேன். தோண்டப்பட்ட கிணறுகளுக்காக இரண்டாவது தவணைப் பணத்தைக் கொடுப்பதற்குள் ஏற்கனவே கொடுத்த பாதிப் பணம் செலவழிக்கப்பட்டுவிடும். அதனால் வெட்டப்பட்ட கிணற்றைப் பூராவும் கட்ட முடியாது. ஆகவே, அதிக அளவில் தொகையை ஒதுக்கி அதிகமான கிணறுகளைக் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1967–68-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகைதான் நான் குறிப்பிட்டது. கனம் உறுப்பினர் 1966–67ம் ஆண்டுக்கான தகவல்பற்றிக் கேட்கிறார்கள். கனம் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லாத காரணத்தால் அதை நான் தரவில்லை. இப்பொழுதும் அதே பதிலைத் தான் தரவேண்டும். 1967–68-ம் ஆண்டுக்காக 300 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 357, 358, 359, 360 17—7—1967 (திங்கட்கிழமை) வரை தள்ளிவைக்கப்படுகின்றன.

### செயற்கை மழை

*361 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கை மழை வரவழைக்கும் ஆராய்ச்சிக்காக வருடா வருடம் எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறது?

(இ) அதனால் இதுவரை ஏதாவது பலன் ஏற்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) —

| | ரூபாய். |
|---|---|
| 1958–59, 1959–60 | 4,870·00 |
| 1960–61 | 5,760·00 |
| 1961–62 | 15,430·00 |
| 1962–63 | 12,330·00 |
| 1963–64, 1964–65 | 25,420·00 |
| 1965–66, 1966–67 | 26,530·00 |

(இ) இச்சோதனைகள் ஆய்வு அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இதுவரையில் கிடைத்துள்ள முடிவுகளைக் கொண்டு, அவற்றின் வெற்றியை ஐயந்திரிபற உறுதிசெய்ய இயலவில்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.



1967 ஜூலை 15]

**திரு என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து, கடந்த பல ஆண்டுகளாக சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் இதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. ஆனால், இதனுடைய பலன் என்ன என்பதை இன்னும் உறுதியாகக் கூறமுடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, உறுதியாக அதைப்பற்றித் தெரியும்வரை, இதில் வீணை மேலும் தொகை செலவழிக்காமல் இந்தத் திட்டத்தையே நிறுத்திவைக்கவேண்டும். அல்லது, அதைப்பற்றி, தீவிரமாக முயற்சி செய்து, திட்டவட்டமான முடிவிற்கு அரசாங்கம் வரவேண்டும். இதில் எதைச் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1967 பிப்ரவரி முடிய பரிசோதனை செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொன்னார்கள். அதன் பிரகாரம் பரிசோதனை நடந்திருக்கிறது. மீண்டும் இது வெற்றிகரமாக நடக்காத காரணத்தால் சர்க்கார் கைவிடலாம் என்று நினைத்தாலும், மத்திய சர்க்கார் "இன்னும் பரிசீலனை செய்யுங்கள்" என்று ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** வருடா வருடம் இதற்கான செலவு அதிகப்பட்டுக்கொண்டே வந்திருக்கிறது. அதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம். ஒரு பத்து வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகாவது இதில் ஏதாவது கொஞ்சமாவது பலன் கிடைக்கும் சூழ்நிலை தெரிகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரகாரம், இது வெற்றி பெறும் என்று நிச்சயமாக உறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. போஜன் :** இந்த ஆராய்ச்சியை நம் மாநில சர்க்கார் கைவிட நினைத்தாலுங்கூட, மத்திய சர்க்கார், திரும்பவும் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்று சொல்வதாக இருக்கிறது. அப்படியானால் இதற்காகும் செலவை மத்திய சர்க்கார் தருகிறதா? அல்லது மாநில சர்க்காரே தான் செலவழிக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்த செலவை மத்திய சர்க்கார் தான் ஏற்றுக்கொள்கிறது.

**திரு. மு. சண்முகம் :** இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் யார் யார் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதுபற்றித் தகவல் இல்லை, கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. ப. மகாதேவன் :** சென்னையில் சில ஸ்டுடியோக்களில் செயற்கை மழை பெய்கிறதே, அதுபோல, வேறு எங்காவது இந்தப் பரிசோதனையைச் செய்து பார்த்ததுண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1958-ம் ஆண்டில் கோவையிலும், குந்தாவிலும், 1961-ம் ஆண்டில் திருச்சியிலும் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். இவற்றின் விளைவாக ஒரு பலனும் ஏற்படவில்லை என்ற தகவல் தான் கிடைத்திருக்கிறது. சினிமாவில் அவர்கள் காட்சியாக ஏதாவது செய்கிறார்களா அல்லது உண்மையிலேயே செயற்கை மழை பெய்ய வைத்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. சா. மெய்யப்பன் :** இந்த ஆராய்ச்சி எந்தெந்தப் பகுதியில் நம் மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது என்று சொல்லமுடியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதற்கு முன் உள்ள கேள்விக்கு அளித்த பதிலே தான் இதற்கும்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas experimenting with artificial rain and trying to get rain by this kind of method is mostly a fantastic scheme conceived by some scientists, will this Government advise the Central Government not to waste good money after this bad business?

THE HON. THIRU C. N. ANNADURAI: Most of the experiments of the scientists are always considered by laymen as fantastic but this is not a fantastic experiment. We have not yet reached a stage where we can be certain about it. But at some future date we will certainly be very certain about it.

### மருத்துவ தேர்வுகள்.

* 362 விஞ —திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் முதல் புதிய விதியின் கீழ் மருத்துவக் கல்லூரியில் மூன்று முறை தேர்ச்சியடையாத மாணவர்கள் நான்காவது முறையும் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(இ) ஹரிஜன மாணவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு கொடுக்க உத்தேசமுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியம் :** கடைசி முறையாக இந்த விதியைத் தளர்த்தி, நான்காவது தடவை தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** விதிமுறைகள் பல்கலைக் கழகத்தால் இயற்றப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் தலையிடுவதற்கு விரும்பவில்லை.

### நடமாடும் மருத்துவ மனைகள்

* 363 விஞ—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் மருத்துவ மனைகள் எங்கெங்கு உள்ளன ?

(இ) இல்லையெனில் அவற்றை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) நடமாடும் மருத்துவ மனைகள், ஆலங்காயம், கூடலூர், உதகமண்டலம், செய்யூர், ஹரூர், ஜயங்கொண்ட சோழபுரம், சங்கரன்கோயில் ராமநாதபுரம், கொடைக்கானல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். சங்கரய்யா :** இந்த நடமாடும் மருத்துவ மனைகளை அரசாங்கம் ஏற்படுத்தும்போது, எந்த அடிப்படையில் அந்தப் பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?



THE HON. THIRU S. J. SADIQ PASHA: These Units are intended to render medical aid to those who could not get the benefits of regular Government hospitals of the Districts concerned and to those pepole such as the Hill Tribes and Scheduled Tribes.

### *Drainage Scheme for Kodambakkam*

* 364 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state:—

(*a*) whether the underground drainage scheme of Kodambakkam, Madras, would be implemented soon;

(*b*) the amount involved towards the cost of the scheme; and

(*c*) whether the Government have granted any loan to the Corporation of Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (*a*) A comprehensive Drainage Scheme for the Kodambakkan—T. Nagar areas has been sanctioned by the Government. All the works under this scheme, excepting erection of Treatment Plant, are expected to be completed within the Fourth Plan period.

(*b*) The estimated cost of scheme is Rs. 135·00 lakhs.

(*c*) The Corporation has so far been given a loan of Rs. 42·94 lakhs for the work in addition to a grant of Rs. 18·76 lakhs.

THIRU K. VINAYAKAM: Sir, as this scheme is being implemented so niggardly and slowly, how long will it take to finalise this entire scheme? Will the Government give instructions to the Corporation authorities that the moment they dig pits, they should lay pipes or whatever material that is necessary for the purpose and have them filled up with mud or rubbish or whatever stuff that is avilable?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Since the nature of work is very complicated and has to be executed at great depth in heavy sub-soil, the progress is slow. But attempts are being made to implement the scheme soon.

DR. H. V. HANDE: Sir, unfortunately Kodambakkam has been considered as the Cindrella of Madras City for the past 15 years and nobody has been bothering about it. There have been a number of complaints regarding drainage works. So, will this Government take up these drainage works in Kodambakkam on a war-footing and do something immediately?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Certainly it will be given due consideration.

**திரு. நா. காசிராமன் :** கோடம்பாக்கம் கார்ப்பரேஷனைச் சேர்ந்தது. அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, கார்ப்பரேஷனுக்கு 42·94 லட்ச ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 1967-ம் வருஷத்திய ஆடிட் ரிபோர்ட்டில் கார்ப்பரேஷனுக்கு 1964–65-ம் வருஷத்தில் கொடுக்கப்பட்ட 33 லட்சம் ரூபாயுமே உபயோகப்படுத்தப்படாமல் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 33 லட்ச ரூபாய் இந்த 42·94 லட்ச ரூபாயில் அடங்கியதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Government have so far sanctioned a loan of Rs. 42·94 lakhs and a grant of Rs. 18·76 lakhs to the Corporation of Madras for the scheme. Out of this grant and loan, works to the extent of Rs. 46·64 lakhs have been executed up to March 1967.

THIRU K. VINAYAKAM: While I differ from the statement of Dr. Hande that Kodambakkam is considered to be the Cindrella of Madras whereas it is considered to be the Hollywood of Madras the Corporation spend money, lay a road and black-top it, the next day another department of the same Corporation breaks up the road for some other purpose and relays it and as this is duplication of work and involves expenditure, will the Government issue instruction to their own party in power in the Corporation to have co-ordination in their work?

THE HON. THIRU C. N. ANNADURAI: That has been the proposal put forward by the Corporation for the past so many years. The Government at that time was not considerate or was unsympathetic. This Government proposes to act in a different manner.

### மேலவையில் ஆசிரியர் பிரதிநிதி

*346 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேலவையில் ஆசிரியர் தொகுதிக்குப் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் வகையில் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### போலீஸ் இன்ஸ்பெக்டர்கள்.

*347 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டகேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றனர் ?

(இ) இவர்கள் எல்லோருக்கும் இலவச வீடோ அல்லது வீட்டு வாடகைக்கு அலவன்ஸோ கொடுக்கப்படுகிறதா ?

(உ) இல்லையென்ருல் அது கொடுக்கப்பட சர்க்கார் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: (அ) 361.

(இ) & (உ) 144 போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அரசினர் உறைவிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 217 இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, உறைவிடம் கொடுக்கப்பட்டுள்ளவர்களிடத்தில் கூட வாடகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதாகத் தெரிகிறது. ஆகவே, அம்மாதிரி வாடகை வசூலிக்கக்கூடாது என்று தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு வாடகை வீடுகள் கொடுக்கப்பட்டால், அவர்கள் சம்பளத்திலிருந்து இன்ன சதவிகிதம் என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரிடமிருந்து வசூல் செய்வதுபோல—அவர்களிட மிருந்தும் வசூல் செய்கிருர்கள்.

### பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்

*365 வினு—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் எந்தெந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) அதற்கான காரணம் ? யார் யார்.?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 1960 முதல் 1966 வரை மல்லசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒருவர் மீது மட்டுமே 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டம், 151-வது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

(இ) சட்டத்தின்படி பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்ற முறையில் தமக்குள்ள கடமைகளை அவர் சரிவர நிறைவேற்றத் தவறியமையினுல் தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களில் எத்தனை பேர் மீது கம்ப்ளெய்ன்ட் வந்திருக்கிறது ? இன்னும் எத்தனை கம்ப்ளெயின்ட்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றி விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

### நகரவை உறுப்பினர்கள்

*366 வினு—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 டிசம்பரில் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்ட இடதுசாரி கம்யூனிஸ்டுகளில் எத்தனை பேர்கள் நகரசபை அங்கத்தினர்கள் ?

(இ) விடுதலை அடைந்தவுடனே எத்தனை பேர்கள் கவுன்ஸில் பதவியிலிருக்க அனுமதிக்கப்பட்டார்கள் ?

(உ) எத்தனை பேர்கள் அனுமதிக்கப்படவில்லை, காரணம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் 1964-ம் ஆண்டு டிசம்பரில் காவலில் வைக்கப்பட்டனர்.

(இ) விடுதலை அடைந்தவுடனே இவர்களில் 6 உறுப்பினர்கள் மீண்டும் உறுப்பினர்களாக்கப்பட்டனர்.

(உ) குடியாத்தம் நகராட்சி மனற உறுப்பினராகிய திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் (தற்போதைய சட்டசபை உறுப்பினர்) மறுபடியும் உறுப்பினராவதை நகராட்சி மன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் எதிர்த்ததால், நகராட்சி மன்றம் அவரை மறுபடியும் உறுப்பினராக எடுத்துக்கொள்ளவில்லை. நகராட்சி ஆணையர் இவ் வழக்கை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பினர். மாவட்ட நீதிபதியும் இத் தகுதியின்மையை உறுதி செய்தார்.

**திரு. என். சங்கரய்யா :** சபாநாயகர் அவர்களே, பாதுகாப்புச் சட்டப்படி காவலில் வைக்கப்பட்ட ஏழு பேர்களில் 6 பேர்கள் மட்டும் தொடர்ந்து உறுப்பினராக இருக்கத் தகுதியுடையவர்கள் என்றும், ஆனால் ஒருவர்மீது மட்டும் சட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு சில ஷரத்துக்களைக் காட்டி அவர் பதவியில் இருக்கக்கூடாது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்புச் சட்டத்தின்படி காவலில் இருந்தாலும், அவர் உண்மையான பிரஜை என்ற முறையில் அவருக்கு ஓட்டு அளிக்க உரிமை உண்டு என்பதைத் தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மற்றைய உறுப்பினர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ளலாம் என்று நகராட்சி மன்றம் முடிவு செய்திருந்தது. ஆனால் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களை மட்டும் நகராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. மாவட்ட நீதிபதி அவர்களும் இதை உறுதி செய்திருக்கிறார்கள். மீண்டும் புனராலோசனை செய்யப்பட வேண்டுமென்று ஏதாவது விண்ணப்பம் வந்தால் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பாதுகாப்பு கைதியாக இருந்தார் என்பதற்காக மட்டும் அவர் நீக்கப்பட்டார் என்பதாக இருந்தால், இந்த சர்க்கார் தக்கபடி பரிசீலனை செய்யும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, பாதுகாப்புக் கைதியாக முனிசிபல் கவுன்சில், சட்டசபை உறுப்பினர்களைப் பிடிக்கக்கூடிய காலத்தில் அவர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்வதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தால், அம்மாதிரியான உறுப்பினர்களை, நகர சபை சட்டசபை நடக்கக்கூடிய காலத்தில், அவர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமை உண்டு என்பதை அரசாங்கம் அறியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பிடித்தமாக இருக்கிறது. இதைப்பற்றி அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, நகரசபையிலே மூன்று மீட்டிங்குகளுக்கு தொடர்ந்து வராவிட்டால் உறுப்பினர்களுடைய பதவிக் காலம் தன்னாலே முடிவடைகிறது. ஆனால் பாதுகாப்பு கைதியாக இருப்பவர்கள் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராமலிருப்பது என்பது அவர்களுடைய காரணம் அல்ல. சிறையில் வைத்துவிட்டு அவர்கள் கூட்டத்திற்கு வரவில்லையென்று சொல்வது பொருத்தமாகாது. ஆகவே, நகர மன்றத்தின் சட்ட விஷயங்களில் அரசாங்கம் தகுந்த கவனம் செலுத்தி திருத்தியமைக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திருமதி ஜானகியம்மாள் கேட்ட கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இருக்கிறது. ஒருவரை பாதுகாப்பு கைதி என்று பிடித்து வைத்துவிட்டு, நகரசபை, சட்டசபை கூட்டத்திற்கு என் வரவில்லையென்று காரணம் கேட்பது எந்த நியாயத்திற்கும் ஒத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM : May I know from the Minister the nature of the judgment of the District Court and under what circumstances was this gentleman disqualified to continue to be a member of that municipal council?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அந்தத் தீர்ப்பைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் விசாரித்து தகவல் தரப்படும். ஒருவரைப் பாதுகாப்புக் கைதியாகப் பிடித்து வைத்துவிட்டு, அவர் பாதுகாப்பு கைதியாக இருப்பதாலே நகரசபைக் கூட்டத்திற்கு தொடர்ந்து வரவில்லை, ஆகவே அவர் பதவியிழந்தவராகக் கருதப்படுவார் அவர் உறுப்பினர் அல்ல' என்று சொல்வது நியாயம் இல்லையென்று கருதுகிறேன்.



THIRU K. VINAYAKAM : Whereas it is my desire that Mr. othandaraman should continue to be a member of the municipal uncil, is it not a fact that the judgment which was delivered by e District Judge was not based upon his absence from three onsecutive meetings of the council but was based upon some ther alleged offence which Mr. Kothandaraman has not taken are to take up in revision petition or appeal to the High Court.

The HON. THIRU C. N. ANNADURAI : Without being posted ith all the facts connected with the judgment, I cannot ronounce any opinion.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் பாராட்டத்தின்போது என்னோடு பத்து மாணவர்கள் சிறை வைக்கப்பட் ருந்தனர். அந்த மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுவதாக இருக்கிறது. அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றதால் எங்கும் வேலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கத்தை அணுகினால் அந்த மாணவர்களுக்கு வேலை கிடைக்க தக்க ரற்பாடு செய்து தருமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அவர்கள் எந்த மாணவர்கள் ? எந்த வேலைக்குப் போய் மறுக்கப்பட்டது என்ற தகவலை உறுப்பினர் அவர்கள் தந்தால், அதுபற்றி கவனிக்கப்படும்.

*Panchayat Board, Chinnalapatti*

367 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(a) whether it is a fact that the Town Panchayat Board, Chinnalapatti, Madurai district has resolved to raise the rate of House tax from $2\frac{1}{2}$ to $3\frac{3}{4}$ per cent of the rental value of the houses;

(b) whether it is a fact that the enhancement was effected on the advice of the Director of Rural Development ;

(c) whether the Government feel that the enhancement of the house tax up to $3\frac{3}{4}$ per cent is sufficient to run the Panchayat soundly ;

(d) what is the financial position of the Panchayat Board;

(e) whether it is true that the Panchayat Board has been forced to use Police bandobust for its collection drive ; and

(f) what action the Government have taken on such of the individuals who have instigated the tax payer to refuse payment of house taxes to the Panchayat Board, Chinnalapatti?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இது பரிசீலனையில் உள்ளது.

(எ) முதலீடுகள் உட்பட 17–4–1967 வரை ரொக்க இருப்பு ரூபாய் 25,459·19.

(ஐ) வரி வசூலிக்கச் சென்ற பணியாளர்களின் பாதுகாப்பிற்கென, பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி போலீஸ் உதவியைப் பெற்றார்.

(ஒ) சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தந்த அதிகாரிகள் தகுந்த அறிவுரைகள் வழங்கியுள்ளனர்.

[1967 ஜூலை 15

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து நிர்வாகத்தில் அங்கே இருக்கிற அங்கத்தினர்களுக்குள்ளேயே அரசியல் கட்சி வேறுபாடுகள் இருப்பதாலே, ஒரு கட்சி மெஜாரிட்டியாக இருந்து அதை உயர்த்த வேண்டுமென்று உயர்த்தி, மைனாரிட்டியாக இருப்பவர்கள் அதை உயர்த்தக் கூடாது என்று சொல்லி, அமுலுக்கு வரும்போது, இரு கட்சிக்காரர்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டு, கலவரம் ஏற்பட்டதன் பயனாக, போலீசார்கள் உதவி கொண்டு வரி வசூல் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? பஞ்சாயத்து நிர்வாகத்தில் அரசியல் கட்சி அடிப்படையில் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்ற ஒரு நல்ல நியதியை அமைச்சர் அவர்கள்—முதலமைச்சர் அவர்கள்—சில கோட்பாடுகளை உருவாக்கி, ஒரு ஆரோக்கிய அரசியல் உண்டாவதற்கு முயலுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஆரோக்கிய அரசியலில் அக்கறை ஏற்பட்டிருப்பது குறித்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன். பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமல்ல, நகராட்சி மன்றங்களுக்கும் அரசியல் கட்சி அடிப்படையில் தேர்தலுக்கு நிற்க வேண்டாமென்று நாங்கள் சொன்னபோது, கனம் உறுப்பினருடைய தலைவர்கள் தான் அதை மறுத்தார்கள்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கோடம்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த திரு. கே. விநாயகம் அவர்கள் கோடம்பாக்கத்தைப்பற்றி பார்லிமெண்ட் உப தேர்தல் வருவதனாலே கேள்விபோட்டார்கள். சின்னாளப்பட்டியில் தேர்தல் வருகிறதா ? எதன் காரணமாக இந்தக் கேள்வி போடப்படுகிறது ?

(பதில் இல்லை)

**திரு. கரு. சீமைச்சாமி:** வீட்டு வரியை உயர்த்துவதற்கு 3 வருஷத்திற்கு ஒரு முறைதான் பரிசீலிக்கவேண்டும். சின்னாளப்பட்டியில் 2 வருஷத்திற்குள்ளாகவே வீட்டு வரியை உயர்த்தியிருப்பதனால்தான் இந்த மாதிரியான குழப்பம் வந்திருக்கிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நிதி நிலை சீர்கேடாக இருந்த காரணத்தினால் தல ஆணையாளர் அதைச் சரிக்கட்ட வரிவிதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். அதை எதிர்த்துத்தான் வழக்கு மன்றத்திற்கு ஒரு சில கட்சிக்காரர்கள் சென்றிருக்கிறார்கள். அதுபற்றிய விவரம் வழக்கு மன்றத்தில் இருப்பதால் மேலும் விளக்கவேண்டாமென்று நினைக்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சின்னாளப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் காங்கிரஸ்காரராக இருப்பதால், காங்கிரஸ்காரர்களுடைய வீடுகளுக்குக் குறைவான வரியும், மாற்றுக் கட்சிக்காரர்களுடைய வீடுகளுக்கு அதிகமான வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது என்கிற புகார் வந்தது உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படிப்பட்ட கட்சிக் கண்ணோட்டத்தோடு புகார்கள் எதுவும் வரவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி:** பஞ்சாயத்துகள், நகராட்சிகளில் அரசியலைப் புகுத்தக்கூடாது என்றாலும்கூட சிதம்பரம் பக்கக் காங்கிரஸ்காரர்கள் அவற்றிலே அரசியலைப் புகுத்துவதும், மெம்பர்களையே தூக்குவதுமான காரியங்களில் ஈடுபடுவதுபற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கேள்வி சின்னாளப்பட்டியைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சின்னாளப்பட்டி பஞ்சாயத்தில் வரியை உயர்த்தக்கூடாது என்கிற தீர்மானம் வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும்கூட எக்ஸிக்யூடிவ் ஆபீசர் வரியை உயர்த்தி, போலீஸ்காரர்களின் துணைகொண்டு வரி வசூல் செய்தது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?



1967 ஜூலை 15]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நெறியாளர், ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தை மீறி செயல்பட்டதாகக் கருதமுடியாது.

Thiru K. VINAYAKAM : Sir, I rise on a point of order.

நான் கோடம்பாக்கத்தைச் சேர்ந்தவன், கோடம்பாக்கத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நான் மாநிலம் முழுவதற்குமான நன்மையை உத்தேசித்து செயல்பட வேண்டிய பிரதிநிதி இல்லையா ? நான் சின்னாளப்பட்டியைப் பற்றி கேள்வி போடக்கூடாது என்கிற விதி இருக்கிறதா ?

Sir I want your ruling.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நானும் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேறு ஒரு பக்கத்தில் குடியிருந்து கொண்டு நான் கோடம்பாக்கத்துக்காரன், நான் கோடம்பாக்கத்துக்காரன் என்று சொல்லிக்கொள்வது முறைதானா ?

**திரு. கே. விநாயகம்:** நான் கோடம்பாக்கம் தொகுதியில் இருந்து வெற்றி பெற்று வந்த சமயம்தான் முதல் அமைச்சர் அவர்கள் காஞ்சீபுரம் தொகுதியில் இருந்து வெற்றிபெற்று வந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அவருடைய திருவல்லிக்கேணி வீட்டில் நான் ஒரு நாள் விருந்தினராக இருந்தேன் என்பதை அவருக்கு நினைவுபடுத்துகிறேன். (சிரிப்பு).

### பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்து

*368 வினா.—**திரு. முனு ஆதி:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தாம்பரத்தை அடுத்த பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்துக்கான உறுப்பினர்கள் தேர்தல் இது நாள் வரை நடைபெறாமல் இருப்பதன் காரணம் என்ன ?

(இ) இத்தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) பீர்க்கன்காரணை பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்தல் 28-1-1965-ல் நடைபெற இருந்தது. ஆனால் உயர் நீதி மன்றம் விதித்த ஆணையின் காரணமாக தேர்தல் நடைபெறவில்லை. வழக்கில் உயர் நீதி மன்றம் முடிவான தீர்ப்பு வழங்கிய பின்பு நாட்டில் ஏற்பட்டிருந்த அவசர நெருக்கடி காரணமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் அங்கத்தினர்களின் தேர்தல் நடத்துவது நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஆணையை மாற்றி உடனடியாகத் தேர்தல்கள் நடத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

### தாம்பரம் நகராட்சி மன்றம்

*369. வினா.—**திரு. முனு ஆதி:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தாம்பரம் நகராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைபெறும் என்று அறிவிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ): இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1967 ஜூலை 15

### அம்பர் சர்க்கா ராட்டைகள், மாயூரம்

***370 வினு : திரு. என். கிட்டப்பா :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

மாயூரத்தில் அம்பர் சர்க்கா ராட்டை சரிவர பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பதால் அரசுக்கு ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அரசுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** கோவைக்குச் சமீபத்தில் கண்ணம்பாளையத்தில் அம்பர் சர்க்கா நிலையத்தை வைத்து, அதற்காக வேண்டி ஒரு மில்லையும் ஏற்படுத்தி, அது சும்மா இருக்கிறதே, அதனுல் ஏற்பட்டுவரும் நஷ்டத்திற்கு ஏதாவது விமோசனம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாயவரத்தில் இருக்கக்கூடிய அம்பர் சர்க்கா பற்றிய கேள்வியாகும் இது. கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாயவரம் டெப்போவில் உள்ள அம்பர் சர்க்காக்கள் விநியோகிக்கப்படாமல் இருக்கின்றனவே, அவற்றுக்கான விலை நமக்கு நஷ்டம் அல்லவா ? அம்பர் சர்க்கர் நூற்பதைவிட பயிர்த் தொழிலில்அதிக வருவாய் வருவதனுல் யாரும் அதற்கு முன்வரவில்லை. அதன் காரணமாக அம்பர் சர்க்காவை யாரும் உபயோகிக்க வில்லை என்பது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 479 அம்பர் சர்க்காக்கள் இருக் கின்றன. ஆனுல் அவற்றுக்கான விலை வசூலிக்கப்பட்டுவிட்டது. அங் குள்ளவர்களுக்கு வேளாண்மைத் துறையில் அதிக வருவாய் இருப்பதனுல் அதைத் திருப்பிக்கொடுத்துவிட்டுப் போய் இருக்கிருர்கள்.

**திரு கே. விநயகம் :** இதுபோல எந்தப் பகுதியில் அம்பர் சர்க்காவை எடுத்துக்கொள்ள யாரும் முன்வரவில்லையோ அவற்றை வேறு தேவைப் படுகிற பகுதிக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இங்குள்ள அம்பர் சர்க்காக் களுக்கு அவர்கள் விலை கொடுத்துவிட்ட காரணத்தினுல், மாற்றுவது என்ருலும் அவர்கள் சம்மதத்தைப் பெற்றுத்தான் மாற்றியாகவேண்டும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** அம்பர் சர்க்கா, சர்க்கா இவை லாபகரமாக இல்லை. ஆகவே இவற்றையே நிறுத்திவிடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அம்பர் சர்க்காவினுல் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு லாபம் குறைவாகக் கிடைக்கிறது. மாநிலம் பூராவுக்கும் இது பொருந்தாது.

**திரு. மா. பா. சாரதி :** மாயவரத்தில் மட்டும் இல்லாமல் தமிழகம் பூராவிலும் அம்பர் சர்க்கா தேங்கி இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதனுல் நன்மை இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆட்சி மாறிவிட்ட பிறகு மக்களிடத்தில் கதரைப் பற்றி உற்சாகம் இல்லை. ஆகவே அம்பர் சர்க்கா, சர்க்கா இவற்றை அடியோடு ஒழித்துக்கட்டுவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மக்களுக்கு உற்சாகம் இல்லை என்பது கனம் உறுப்பினருடைய கற்பனையாக இருக்கலாம். உடனடியாக இவற்றை ஒழிப்பதற்கான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை.



1967 ஜூலை 15]

**திரு. கே. பி. எஸ். மணி :** சாதாரண சர்க்காவைக் காட்டிலும் அம்பர் சர்க்கா பயனுடையது. அவை முறையாக விநியோகிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத காரணத்தினுல்தான் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே இதைச் சீராக விநியோகிக்கவும், மக்களுக்கு உற்சாகம் அளிக்க கட்டாயப் படுத்தாமல் விரும்பிக்கேட்கிற மக்களுக்கு இலவசமாகவே விநியோகிக்கவும் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள்—விடைகள் முடிவு அடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) பல்லடம் தொகுதியில் போலீஸ் நடவடிக்கையினுல் உணவு தானியங்கள் கிடைக்காமை.

***திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் கடந்த 1967 ஜூலை 7-ம் தேதி பல்லடம் தாலூகா சூலூர் சந்தைக்கு உணவுப் பொருள் (அரிசி, சோளம்) கொண்டு வந்த லைசென்சு பெற்ற வியாபாரிகளையும், விவசாயிகளையும் மேற்படி சந்தையில் உணவு தானியம் வாங்கிக்கொண்டு சென்றவர்கள் ½ மூட்டை, ¼ மூட்டை வாங்கி வண்டியில் போட்டுக்கொண்டு போன வண்டிக்காரர்கள் மீது போலீஸார் நடவடிக்கை எடுத்து இருக்கிருர்கள்.

பல்லடம் தாலூகா கட்டுப்பாடு நீக்கப்பட்ட பகுதி. அது குடும்பக் கார்டு உள்ள பகுதி. ஆனுல் அரிசி போடுவதில்லை. ஆனுல் அந்த மக்கள் சந்தையிலும், கடைகளிலும் தான் உணவு தானியம் வாங்க வேண்டும். இதனுல் சந்தை முதலியவற்றில் உணவு தானியம் கிடைக்கவில்லை. போலீஸ் நடவடிக்கையினுல் சந்தைக்கு வருகின்ற உணவு தானியம் தடைபட்டதினுல் உணவுப் பொருள் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிருர்கள்."

இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையை விவாதிக்க இச்சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கனவே பலமுறை சொல்லியுள்ள காரணங்களினுல், இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்காகப் பேரவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்பதால், அதற்கு எனது அனுமதியைக் கொடுப் பதற்கு மறுக்கிறேன். முற்பகல் 1-00

### (இ) சென்னை நகர் தீ விபத்துக்கள் பற்றி போலீஸ் துறைத் தலைவரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிருர்கள்.

At this stage of considering whether the adjournment motion is admissible or not, the Member should confine himself to explaining how the subject cames within the scope of an adjournmenta motion and not go into the details of the adjournment motion itself.

முன்னுல் கொடுக்கப்பட்ட சபாநாயகருடைய தீர்ப்பை இப்பொழுது வாசித்தேன். அதன்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து how this is admissible என்பதைச் சொல்லவேண்டும்.

Thiru P. G. KARUTHIRUMAN: Mr. Speaker, Sir, I wish to raise the following adjournment motion:

"That the House do stand adjourned to discuss a matter of urgent public importance namely - reported statement of the Inspector General of Police to the Press that two persons arrested for alleged complicity in the Madras fire incidents were Congress workers."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவருவதற்கான இரண்டொரு காரணங்களைமட்டும் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னையிலே ஏற்படும் தீ விபத்துக்களுக்கு அரசியல் காரணம் எதுவும் இல்லை. போலீஸ் இன்வெஸ்டிகேஷனிலே, அவர்களுடைய புலன் ஆராய்விலே இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் புலன் ஆராய்ந்ததற்குப் பிறகு கனம் முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஒரு அறிக்கையை இந்தச் சபையிலே கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கிறதா, முடிந்துவிட்டதா என்று தெரியவில்லை. அதைப் பற்றிய அறிக்கையை கனம் முதலமைச்சர் அவர்கள் சபைக்குத் தருகிறேன் என்று சொல்லும்படியான சமயத்திலே உயர்தர அதிகாரி பூர்ணமாக விசாரிப்பதற்கு முன்னாலே, அரசியல் காரணம் எதுவும் இல்லை என்று சொன்னாலும் கூட, இப்பொழுது அரசியலிலே சம்பந்தப்பட்ட காங்கிரஸிலே இருக்கும்படியான வொர்க்கர்ஸ், ஊழியர்கள் மேலே குற்றஞ்சாட்டி இருக்கிறார்கள். எந்த அடிப்படையில் அப்படிச் செய்தார்கள், அவர்கள் காங்கிரஸ்காரர்களா என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். பூரணமாக புலன் விசாரணை முடிந்ததற்குப் பிறகு தான் சொல்லவேண்டும், முதலமைச்சர் அவர்கள் இதைத் தீர அமர்ந்து யோசனை செய்யவேண்டுமென்ற நிலையில் தான் சொன்னார்கள். வெளியிலே பேசிக்கொள்வதை எல்லாம் பொறுப்பாக எடுத்துக்கொள்ளாமல் சந்தேகம் இருக்குமானால் நீதி விசாரணை உடனே நடத்தவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சொன்னோம். அப்பொழுது டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அடிதடிபட்டிருக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் வழியிலே தடுத்து நிறுத்தப்பட்டு இப்பொழுது அப்படிப்பட்ட சூழ்நிலை அடங்கியிருக்கும் நிலையிலே கனம் முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிக்கையைக் கொடுத்திருக்கிற சமயத்திலே அரசியல் காரணம் இல்லையென்று சொல்லும்படியான நிலையிலே இப்பொழுது எப்படி முடிவுக்கு வந்தார்கள். நீதி விசாரணை நடத்தித்தான் முடிவுக்கு வரவேண்டும் என்று சொல்லும்படியான நிலையிலே இதை முதலமைச்சர் அவர்கள் பரிபூரணமாக ஏற்றுக்கொள்கிறார்களா? அப்படியென்றால் எந்த அடிப்படையில் கைதுசெய்தவர்களுக்கும், அதற்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 34 பேர்கள் கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் எல்லாம் வெளியே வந்தார்கள். அவர்கள் அரசியல்வாதிகளா? இருவரும் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வதற்கு விளக்கங்கள் பெறவேண்டுமென்பதற்காக நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி போலீஸ் விசாரணை முடிவு அடையாத நிலையில் அது இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பலவிதமான காரணங்களுக்காக யாரோ இருவரைக் கைது செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி இன்னும் விசாரணை நடந்துகொண்டிருப்பதாலே சட்டமன்றத்தை ஒத்திவைத்து இந்த பிரச்னையை விவாதிப்பது போலீஸ் விசாரணைக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பேரவையிலே போலீஸாரின் அத்துமீறிய செயல்களுக்காக ஒத்திவைப்புத் தீர்மானம் கிடையாதென்றும், போலீஸாரின் அடக்கமற்ற செயல்களுக்காகவும் ஒற்றிவைப்புத் தீர்மானம் கிடையாதென்றும், போலீஸாரின் தடியடிக்காக ஒற்றிவைப்புத் தீர்மானம் கிடையாதென்றும் பலமுறை, 14, 15 முறைகள் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதன்



காரணமாக அந்தத் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு, போலீஸ் அதிகாரி பேச்சு முறையற்றது என்று வைத்துக்கொண்டாலும், பேரவையை அதற்காகத் தள்ளிவைக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு, நான் என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு

### சேலம் மாவட்டம் வெள்ளையம்பாளையம் கிராமத்தில் புளிச்சை நார் உபயோகிப்போரிடமிருந்து விற்பனை வரி வசூல்

**திரு. எஸ். ஆறுமுகம்:** சேலம் மாவட்டம், சங்கரி வட்டம் வெள்ளையம் பாளையத்தில் குடியிருப்போர் ஆந்திர மாநிலத்தில் சித்தூரிலிருந்து புளிச்சைநார் வாங்கி வந்து கையினால் கட்டில் கயிறு திரித்து விற்றுவரும் இவர்களுக்கு 7-1-1967-ல் பொது வருவாய்த் துறை புலன் அதிகாரி விற்பனைவரியும் அபராதமும் கட்டவேண்டுமென்றும், விற்பனைக் கணக்குகள் காட்டவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருப்பதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker Sir I may be permitted to make the following statement:—

In their petition, dated 10th April 1967 certain residents of Vellayampalayam village, Sankari Taluk, Salem district have represented to the Government about the asessment of tax under the Madras General Sales Tax Act, 1959 in respect of the transaction relating to the supply of Pulichainar (புளிச்சைநார்) used in the manufacture of ropes by them. They have stated that in the case of two persons tax has been assessed and penalty has also been levied as detailed below for the year 1961-62;—

| | | *Tax.* | | *Penalty.* | |
|---|---|---|---|---|---|
| | | RS. | P. | RS. | P. |
| Thiru A. Rangasamy | .. | 551 | 20 | 225 | 00 |
| Thiru P. Lakshmanan | .. | 859 | 20 | 429 | 00 |

Thiru P. Perumal and Thiru C. Vedichi Gounder have been served with pre-assessment notices by the Deputy Commercial Tax Officer (Intelligence), Salem. The petitioners have also stated that these persons have been asked to produce their accounts for the years 1962—63 to 1966—67.

The petitioners have stated that the Pulichainar has been bought in Chittoor district (Andhra Pradesh) on their behalf, but booked by rail in the names of their representatives deputed for such purchase and distributed on arrival of the consignment at the village. They have represented that the levy of sales tax on these transactions will lead to their ruin. They have therefore requested that the industry may be treated as a cottage industry and exempt from liability to tax under the Madras General Sales Tax Act, 1959, as in the case of handmade soap, handmade paper, handmade matches, etc. They have also requested stay of collection of tax already levied and the action taken by the Department for assessing tax for the years 1962-63 to 1966-67.

[Thiru. K. A. Mathialagan] [1967 ஜூலை 15

A Copy of the above representation from the residents of Vellayampalayam was addressed to Thiru S. Arumugam, M.L.A. and copies of such representations were forwarded to Government by the member with the recommendation for the consideration of the requests of the villagers, including stay of action taken for the collection of tax levied. The Government called for a report from the Board of Revenue. Pending decision by the Government on the representation, the orders of the subordinate Commercial Taxes authorities have also been stayed. In Government letter, dated 18th May 1967 the action taken on the representation has also been conveyed to Thiru S. Arumugam, M.L.A.

The Board of Revenue has reported that the dealers who have been assessed to tax, have admitted having bought the goods themselves from the Andhra Pradesh and sold them to the manufacturers of the ropes. It is not correct to say that the hemp has been purchased in Chittoor, Andhra Pradesh, on behalf of the manufacturers and then distributed as stated by the Member. The levy of tax on the dealers is quite correct and valid. It is reported that the assessees are engaged in regular buying and selling of pulichai fibre and that the volume of business of these dealers is large and as such it should have been possible for them to maintain accounts. The persons assessed are regular dealers and not the manufacturers. The Government have therefore decided that the facts of the case do not warrant any special treatment being given to the assessees in question.

## 4. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வர மேன்மைமிகு கவர்னர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இம்மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

## 5. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழன் :** இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.



### (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு இனும் (துணை) திருத்த மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

### (உ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரிவசூல் (திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

## 4 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வருவதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இம்மசோதாவைப் பேரவை முன் அறிமுகப்படுத்த மாண்புமிகு உணவு. அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

## 5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

### (எ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

## (ஐ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா, (சட்டப் பேரவை மசோதா எண் 14/1967).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. முதலில் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, நிலவரி வருமானத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பாகப் பேச விரும்புகிறேன். நில வருமான வரியை மாற்றியமைப்பதாக இங்கே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கருக்குக் குறைந்தவர்கள் எல்லோருக்குமே நில வரி எடுக்கப்பட்டு விட்டதால் ஐந்து ஏக்கருக்கு மேலுள்ளவர்களுக்கு அந்த வரியைப் போடுவதாக ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே இதிலே பெரிய சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இதைப் பற்றி யோசிக்க வேண்டிய காரணம் இருக்கிறது. நமது நாட்டில் புஞ்சை நிலங்களுக்கான வரியை நீக்கிவிட்டு வருமான வரியாக ஐந்து ஏக்கருக்கு மேல் இருப்பவர்களிடமிருந்து அதையும் சேர்த்து வசூலிப்பது என்றால், 100-க்கு 90 சதவிகிதம் உள்ள நிலங்கள் வருமான வரி விலக்கிலே சேர்ந்து விடுவதால் மீதி உள்ள 10 சதவிகிதம் பூமியின் மேல் 90 சதவிகிதம் பூமியின் மேல் இருந்த வரிகளையும் சேர்த்துக் கட்டுவதாக இருக்கிறது. இதிலே எப்படிக் கணக்கு வைத்துக் கொள்வது, எப்படி வசூல் செய்வது என்றெல்லாம் சிந்திக்க வேண்டிய விஷயம் ஆகும்.

நஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே, அவர்கள் குறைந்த விலைக்குத் தங்களுடைய நெல்லையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வரி விலக்கும் கொடுக்காமல் புஞ்சை நிலங்களின் சுமையையும் அவர்களே தாங்க வேண்டிய காரணத்தால் மிக மிகச் சிரமமாக இருக்கும். இதனால், வெள்ளாமை, நெல் விவசாயம் மிக மிகப் பாதிக்கப்படும் என்று அஞ்சுகிறேன். நெல் உற்பத்தியாளருக்கு ஊக்கம் மிகக் கொடுக்க வேண்டிய இன்றியமையாத நேரம் இது. அப்படி இருக்க பல துறையில் அவர்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சிறு நிலச்சுவான்தார்கள் 3, 4, 5 ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடியவர்கள் தங்களுடைய பூமியைப் பிறருக்குக் குத்தகைக்குக் கொடுத்து விட்டு குத்தகையும் வாங்க முடியாமல், சாப்பாட்டுக்கும் நெல் இல்லாமல் சிரமப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. பூமியைத் திருப்பிக் கேட்கவோ, குத்தகையை வசூல் செய்யவோ இயலாத நிலையில் நிலவரி மட்டும் கட்டும் நிலைமையில் பூமிக்குச் சொந்தக்காரர் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் பாவத்திற்கு எந்த விதமான வரம்பும் இல்லாமல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் நிச்சயமான விமோசனம் தேடியாகவேண்டும். நிலத்திற்கு வருமான வரியாக விதிப்பதில் என்ன திட்டத்தில் இந்த மாதிரி ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலுள்ளவர்களுக்கு விதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது எப்படிக் கணக்கிட்டாலும் சிரமமான காரியங்களாக இருப்பதால் மிகத் தெளிவாக ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலே இப்போது ஸ்டாச்சுடரி ரேஷனிங் ஏரியா—கட்டாய விநியோக முறை இருக்கின்ற இடங்களைத் தவிர பிற இடங்களில் எல்லாம் உணவுப் பொருள் கிடைப்பதிலே எந்த விதமான



நிச்சயமும் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம், காங்கிரஸ்காரர்கள் காலத்தில் மட்டும் அல்ல புது ஆட்சி வந்த பிறகும் உணவுப் பொருள் ஒரு நாள் கூட விநியோகிக்கப்படாத இடங்கள் எத்தனையோ இருக்கின்றன. சந்தையில் விற்க அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால் இரண்டு மூட்டை எடுத்துக்கொண்டு போனாலும் பிடித்துக்கொள்ளுகிறார்கள். எந்த விதமான உத்தரவும் இல்லை. அவர்கள் எப்படி வாழ்வார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குச் சிரமமாக இருக்கிறது.

கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் பலவிடங்களில், இன்பார்மல் ரேஷனில் உள்ள பகுதிகளில், ஒரு நாள் கூட விநியோகிக்கப்படாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதைக் கவனித்து ஆவன செய்யவேண்டும். அடுத்தப்படியாக, எங்கள் பகுதியில் விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் கிடைப்பதேயில்லை. நேற்று அதிகமாக பேச முடியாமல் சுருக்கமாக சொல்லவேண்டியிருந்தது. பளாக் டெவலப்மெண்ட் மூலம் இந்த வியாபாரம் செய்யப்படுவதால் அவர்கள் ஏதோ கொஞ்சம் குறைந்த விலைக்கு, சகாய விலைக்கு கொடுப்பதால் பிற வியாபாரிகளும் விற்க முடியாத அளவிற்கு தரம் குறைந்த மருந்துகளைக் கொடுப்பதால் விவசாயம் செய்ய மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இவர்கள் அந்த வியாபாரத்தைச் செய்யாமல் தனிப்பட்ட வியாபாரிகளிடம் விட்டிருந்தால் அந்த மருந்துகள் பிரயோஜனப்படும். அப்படி அது பயன்படவில்லை என்று தெரிந்தால் அவர்கள் வியாபாரம் நின்றுவிடும். அதற்காக வேண்டியாவது அவர்கள் நல்ல மருந்துகளை விற்பார்கள். ஆகவே, அந்த வியாபாரத்தை பிறருக்கும் விடாமல் இவர்களும் நல்ல மருந்தைக் கொடுக்காமல் விவசாயம் பாழடைகிறது. ஆசவே நல்ல மருந்துகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. முளைப்பதற்கு தகுதி இல்லாத தானியங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. சுமார் 30 லட்சம் ரூபாய் செலவு செய்து வீரிய விதைகள் என்று சோளத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி வைத்திருக்கிறார்கள். இந்த விதைகள் வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கும், அது தேவை இல்லை என்றிருப்பவர்களுக்கும் வற்புறுத்திக் கொடுக்கப்பட்டு வருகிறது. பூச்சிமருந்தோ அல்லது வேறு கட்டுப்பாடு சாதனங்களோ வாங்க வேண்டுமென்றால் அவர்கள் கையில் இதைக் கட்டாயப்படுத்திக் கொடுக்கிறார்கள். அந்த விதைகள் முளைப்பதும் இல்லை, விலையும் அதிகமாக இருக்கிறது. ஒரு கிலோவிற்கு பத்து ரூபாய் என்றிருக்கிறது. அதில் பூச்சி மருந்து கலக்கப்பட்டிருப்பதால் உண்பதற்கும் லாயக்கில்லை. விதைப்பதற்கும் லாயக்கில்லை என்ற நிலை இருக்கிறது. அதையெல்லாம் கவனிக்கவேண்டும். விவசாய உபகரணங்களும் லாயக்கில்லாததாக இருக்கிறது. அவற்றையும் திணித்து விவசாயிகளுக்கு தொந்தரவு கொடுக்கிறார்கள்.

### (திரு. பெ. மலைச்சாமி தலைமை)

விவசாயம் விருத்தி அடைய ஒரு முக்கியமான கருத்தை நேற்று சொல்ல நேரம் இல்லாததால், இன்று அதை ஒழுங்காகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தானிய உற்பத்தி செய்வதற்குள்ள நல்ல வாய்ப்புகளை தவற விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாதவரம் பால் பண்ணைக்கு சென்று பார்த்ததில், அது பற்றிய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே 800 ஏக்கர் பூமி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அங்கு மாடுகளுக்கு வேண்டிய தீவனங்களை ஏராளமாக உற்பத்தி செய்ய வாய்ப்பிருக்கிறது. அதற்கு வேண்டிய எருவுக்கு குறைவில்லை. வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதுபோல் என்ற ஒரு பழமொழி உண்டு. அங்கு குறைவில்லாத அளவில் எரு இருக்கிறது. 4,000, 5,000 கால் நடைகளின் சாணத்தைக் கொட்டி விற்பதில் நஷ்டக் கணக்கை பார்க்கிறோம். அந்த சாணத்தை நல்ல முறையில் சேகரித்து வைத்து அதிலிருந்து காஸ் உற்பத்தி செய்தால் அந்த யூனிட் நடப்பதற்கு வேண்டிய மின்சார சக்தியை நாம் பெற முடியும் என்பதோடு கூட அங்கு குடியிருப்பவர்களுக்கும் சமையல் செய்வதற்கு காஸ் சப்ளை செய்ய முடியும். ஆகவே அங்குள்ள சாணம், மாட்டு மூத்திரம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து பம்ப் மூலம் பாய்ச்சுகிற தண்ணீரில் கலக்கி அதை வேளாண்மைக்கு பயன்படுத்தினால் ஏராளமான தானிய உற்பத்தி செய்வதோடு மாட்டு

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1967 ஜூலை 15

தீவனத்திற்கு வேண்டிய கினி க்ராஸ், ஃபப்பலோ கிராஸ் இவைகளையும் உற்பத்தி செய்து லாபகரமாக அதை நடத்துவதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது. இதற்கு வேண்டிய ஒரு வாய்ப்பை அளித்தால் அரிய காரியங்களைச் செய்து காட்ட முடியும். இம்மாதிரி நல்ல காரியங்களைச் செய்ய திறமையான விவசாயிகளுக்கு அனுமதி தந்து நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்பளிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அங்கத்தினர் அவர்கள் பேசும் போது வீரிய சோள விதையைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே வாங்கி வைத்த சோளம் மோசமாக இருக்கிறது என்பது உண்மையே. பழைய சோளத்தை மீண்டும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். அதனால் சர்க்காருக்கு நிறைய நஷ்டம் கூட ஏற்படுகிறது. புதிதாக வாங்கப்படுகிற சோளத்தை வழங்கவேண்டும், இனி விவசாயிகளுக்கு பழைய சோளம், மக்கிப் போன சோளம் வழங்கப்படமாட்டாது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** எங்கள் பகுதியில், கொடுத்தது பழைய சோளமா, புதிய சோளமா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. எங்களைப் போன்ற உற்பத்தியாளர்களுக்கு, வீரிய விதை உற்பத்தியாளர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து வாங்காமல் வேறு மாநிலங்களில் இருந்து வாங்கி தேவையில்லாதவர்களுக்கு வேண்டாதவர்களுக்கு வற்புறுத்தப்பட்டு கொடுக்கப்படுகிறது, நல்லவை கிடைக்க காண்ட்ராக்ட் போட்டு வாங்காமல் வெளியிலிருந்து வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வெளி மாநிலங்களில் இருந்து வாங்கிய சோளம் மோசமான சோளம் என்பதை நேற்றைய தினம் கூட பதில் சொல்லும்போது சொல்லியிருக்க வேண்டும். நேரமில்லாததால் அதற்குப் பதில் சொல்லாமல் விட்டு விட்டேன். அது ஏற்கனவே வாங்கிய சோளம். மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அது மோசமானது என்பதால் அது கைவிடப்பட்டது. மாதிரிச் சோளம் கூட அங்கத்தினர் இங்கு கொண்டு வந்து தந்தார்கள். அதைப் பார்வையிட்டு மக்கிப்போனது, அதைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். அதை வற்புறுத்தி வாங்கிக் கொள்ளவேண்டுமென்று எந்த இடத்திலாவது வற்புறுத்துவார்களானால் அதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கே. விநாயகம் :** அவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டு நிதி ஒதுக்கிடு மசோதாவின் மீது பேசும்போது கடந்த வருடங்களில் இப்பேர்ப்பட்ட மசோதாக்கள் ஆண்டுதோறும் வருவது என் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போதெல்லாம் ஆட்சி நடத்தியவர்கள் என் கட்சியைச் சார்ந்தவர்கள். அப்போது நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவோம். ஆங்கிலத்தில் இதற்கு அப்ரோப்பியேஷன் பில் என்று சொல்வார்கள். அப்போது எதிர்கட்சியில் இருந்தவர்கள் இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் எல்லாம், எங்களைப் பார்த்து அரசியல் கிண்டலுக்காக மிஸப்ரோப்ரியேஷன் பில் என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எந்த நேரத்திலாவது எந்த அங்கத்தினராவது எதிர்தரப்பில் இருப்பவர்கள் மிஸப்ரோப்ரியேஷன் பில் என்று சொல்லியிருந்தால் அங்கத்தினரைப் போன்றவர்கள் சும்மா இருந்திருக்கமாட்டார்கள். ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பியிருப்பார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் முழுத் தகவலையும் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மு.ப. 3-30 **திரு. கே. விநாயகம் :** அது மாதிரி நான் சொல்ல விரும்பவில்லை இப்போது. (சிரிப்பு.) ஏனென்றால், இது நமது நாடு நமது, ஆட்சி நடப்பதற்கு வேண்டிய பொருளாதாரம் தேவைப்படுவதாலே இதற்கு அப்ரோப்ரியேஷன் பில் என்று சொல்லப்படுகிறது. இந்த விவாதத்திலே குறைபாடுகள் ஓரிரண்டு எனக்கு ஞாபகத்திற்கு வந்தவைகளைச் சொல்லுகிறேன்.



1967 ஜூலை 15] [திரு. கே. விநாயகம்]

தலைவர் அவர்களே, புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கட்சியின் கொள்கையை நடைமுறையிலே கொண்டுவர முயற்சிப்பது நியாயம்தான். அப்படி ஏற்கனவே இருந்த கட்சிக்கும், இப்போது ஆட்சியில் இருக்கிற கட்சிக்கும் ஏதாவது அதிகமான வித்தியாசம், அல்லது நடைமுறையில் அவர்கள் செய்து காட்டுகிற திறமையான வேலை ஏதாவது இருக்கிறதா என்று சொன்னால், ஒன்று குறிப்பிடத் தக்கது. அதுவும் என் அறை குறையாகச் செய்தார்கள் என்பதுதான் என் கவலை. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதை வரவேற்கலாம். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசியை ஒரு சிலருக்கு தந்து மற்றவர்களுக்குத் தராமல் இருப்பது சரியான காரியமா என்று யோசிக்க வேண்டும். அதைப் பரவலாகத் தருவதற்கு, மாநிலத்தில் இருக்கிற எல்லா மனிதர்களுக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட வேண்டுமென்றால் எனக்குத் தெரியும் அதிக நஷ்டம் ஏற்படும், பொருள் குறைவு நம்மிடம் அதைச் சரிகட்டுவது சாத்தியமல்ல. இதைத் தைரியமாக பொது மக்களிடம் ஒத்துக்கொள்ளவேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு இன்னும் கொண்டுவருகிறோம், கொண்டு வருகிறோம் என்று சொல்லுவது சரியல்ல. ***பசி உள்ளவர்களிடம் இதைக் கொடுக்கிறேன் இதைக் கொடுக்கிறேன்என்று சொல்லி, கொடுக்காமலேயே செய்து, அதுவும் நழுவி, இதுவும் நழுவிக்கொண்டே போகும். அந்த மாதிரி சொல்லாமல் மக்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். "இருக்கிற நிதி இவ்வளவு தான்; இவ்வளவு மக்கள் இருக்கிறீர்கள்; இவ்வளவு உணவு உற்பத்தி ஆகிறது. இதற்கு மேல் கொடுக்க முடியாது. தேர்தல் காலத்தில் ஏதோ சொன்னோம். அதற்காகப் பரீட்சார்த்தமாக இரண்டு ஊர்களில் செய்திருக்கிறோமே தவிர, எல்லா இடத்திற்கும் அந்த மாதிரிக் கொடுக்க முடியாது. அதற்கு நிறைய நிதி வேண்டும்" என்று சொல்ல வேண்டும். முடியாத காரியங்களை—'Impossible to execute'—அப்பேர்ப்பட்ட காரியங்களை விட்டு விடுவது நியாயம். வீராப்புக்காக வேணும் அதையே செய்வது எவ்வளவு அரசியல் விவேகமோ ? அதை ஆட்சியாளர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

இந்த பட்ஜெட்டையெல்லாம் பார்த்தால், நாங்கள் ஒரு வேளை ஆட்சிக்கு வந்திருந்தால் என்ன செய்திருப்போமோ, அதைவிட அதிகமாக ஒன்றும் செய்திருப்பதாகப் புலப்படவில்லை. அங்கங்கே பாதிப் பாதி செய்திருக்கிறார்கள். நாங்கள் "ஃப்ரீ எஜுகேஷன் அப்டு யுனிவர்ஸிட்டி லெவல்" என்று சொன்னோம். இதிலே "நாங்களும் கொடுக்கிறோம். ஆனால் 1,200 ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் இருந்தால் சம்பளம் வாங்குகிறோம்" என்று சொல்லிவிட்டு 'taking a bit here and there' எங்கள் கொள்கையிலிருந்து ஆங்காங்கு கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுவதாகத் தான் கருதுகிறோம்.

வரி வசூல் செய்வது இல்லை என்று நாங்கள் வைத்திருந்தோம்—இரு தரப்பாருக்கும்—நன்செய்க்கும், புன்செய்க்கும், இப்போது ஆட்சியில் இருக்கிற கட்சிக்காரர்கள் புன்செய்க்கு எடுத்து விடுகிறோம், நன்செய்க்கு அப்படியே வைத்திருக்கிறோம் 'still borrowing the tenets and policies of the Congress Party' பாதிப் பாதி அங்கங்கே எங்களிடமிருந்து எடுத்து நடைமுறையில் செயலுக்குக்கொண்டு வருவது. இதிலே கூட, இன்னும் காங்கிரஸ் ஆட்சி நடப்பதாகத்தான் படுகிறதே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் வந்து ஆட்சி செய்வதாகப் புலப்படவில்லை. அவர்களுக்கென்று கொள்கையில் பிடிப்பு இருக்கிறதே, அப்படி ஏதாவது கொண்டுவந்து அதை நடைமுறையில் பயன்படுத்தவேண்டும். கலப்பு மணத்திற்குத் தங்கப் பதக்கம் தரப்போகிறோமே ? என்று சொல்லலாம். நாங்களும் தங்கப் பதக்கம் கொடுக்க மறுத்தோமா ? ஹரிஜன முன்னேற்றத்தில், தீண்டாமையை ஒழிக்க யார் யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு ஆண்டுதோறும் நாங்கள் தங்கப் பதக்கம் கொடுத்தோம். கலப்புத் திருமணத்தை அனுமதிக்கத் தங்கப் பதக்கம் கொடுப்பதைவிட, நாங்கள் கொடுத்ததன் நோக்கம் இதைவிட முக்கியத்துவம் வாய்ந்தது. தங்கக் கட்டுப்பாடு வந்த பிறகு அதை நிறுத்தினோம். இப்போது அதைத் திரும்பக் கொண்டு வருவதை, புதிய, பிரமாத மாறுதலாக யான் கருதவில்லை.

*** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அமைச்சர்களெல்லாம் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்று சொல்லுவதில் எனக்கு ஐயப்பாடு இல்லை. ஆயினும் அந்த அளவுக்கு பதில்களை நிரம்ப, நேராக, தட்டிக் கழிக்காமல், எவேஸிவ் ரிப்ளைஸ் எல்லாம் சொல்லாமல், "இருக்கிறது இந்தக் கஷ்டம்", "இருக்கிறது இந்தத்தொல்லை" "இதைத் தீர்க்க முடியும்", "இதைத் தீர்க்க முடியாது" என்று அங்கத்தினர்களுக்கு பதில் சொல்ல வேண்டுமே தவிர, அதிலும் நம் முதலமைச்சரைப்போல உள்ளவர்கள் பதிலைச் சொல்லும்போது நழுவி விடுவதில் சாமர்த்தியசாலி. அவர் இருந்தால் நன்றாக இருந்திருக்கும்—இதை அவரிடம் சொல்லவேண்டும்; அவருக்குச் சொல்லுங்கள் தயவு செய்து. பதில் எப்படி இருக்கவேண்டுமென்றால் 'when a Member puts a question, he puts it in all seriousness. He wants a straight answer on the floor of the House. Say 'Yes' or 'No'. அதை விட்டுவிட்டு வேடிக்கையாகப் பதில் சொல்லுவது, "நானும் அவரும் ஒன்றாகப் படித்தவர்கள்", "என் வீட்டுக்கு அவர் விருந்தினர்; அவர் வீட்டுக்கு நான் விருந்தினர்" என்று சொல்லுவது 'diverting the issue to a different angle in which he is an adept'.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப்போன்றே கேள்வி கேட்பவர்களும் வளைந்து வளைந்து கேள்விகளைக் கேட்பது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : What a resourceful Minister we have got in the Hon. the Leader of the House—கெட்டிக்காரர்.

இந்தப் புதிதாக வந்த ஆட்சி, அரசாங்கத்திலே மாறுதல்களை அதிகமாகச் செய்ய விரும்புகிறோம் என்று சொல்லி, ஒரே வேலையை நான்கு பேர்கள் செய்கிறார்கள் என்று அவர்களைக் குறைத்து விடுகிறோம் என்று சொல்லி, இப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. அந்த பயத்தோடு, "இவர்களுக்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டு ஆட்சியில் கொண்டு வைக்க இல்லாதது, பொல்லாதது எல்லாம் செய்தோம் ?" என்று அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நினைக்கிறார்கள், ஆசிரியர்களும் நினைக்கிறார்கள். இந்த பீதி அவர்கள் மனதில் இருப்பதை அகற்றவேண்டும்.

இந்த என்.ஜீ.ஓ-க்களுக்கு நீங்கள் செய்த சாதனை என்ன ? நாங்கள் இருந்தபோது இரண்டு தடவைகள் டியர்னெஸ் அலவன்ஸ் கொடுத்தோம் ஒரு ஆண்டில். இப்போது அவர்கள் "கொடுப்பார்களா ?" என்று ஏங்கியிருக்கிறார்கள். நீங்களும் கொடுக்க மறுக்கிறீர்கள். அவர்கள் யாரிடமும் சொல்ல முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். வேடிக்கையாகச் சொல்லுவார்கள்—திருடனைத் தேள் கொட்டிய மாதிரி.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** என்.ஜீ.ஓ.-க்களைத் திருடர்களுக்கு ஒப்பிட்டுப்பேசுவது சரியா என்று கேட்கிறேன்.

THIRU K. VINAYAKAM : No, no, I am quoting an example and putting it in a jocular way. பார்லிமெண்ட்டரி ப்ரொஸீஜர் இதுதான். சொல்லவும் மாட்டார்கள். சொல்லவும் சொல்லுவார்கள். ஒன்றும் சொல்ல முடியாத அவல நிலையில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் என்ன என்னவோ கோட்டைகளைக் கட்டினார்கள். 'நம் ஆட்சி வந்தால் என்ன ஊதியம் கிடைக்கும் ? என்ன உயர்வு கிடைக்கும் ? என்ன பதவி உயர்வு கிடைக்கும் ? எல்லாப் பதவிகளும் கிடைக்கும்"—என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் பட்டை நாமம் தீட்டினீர்களே ? தயவு செய்து அதையும் ஆட்சியாளர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** "பட்டை நாமம் தீட்டினீர்களே" என்பது அரசாங்கத்தைக் குறை சொல்லுகிற ஒன்றாக இருக்கிறது. கவனிக்கப்படுகிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, நாமம் குழைக்கப்படுகிற நிலையும் இல்லை, பட்டையாகத் தீட்டப்படுகிற நிலையும் இல்லை.





**திரு. கே. விநாயகம் :** Sir, I take the explanation of the Hon. Minister in the right sense. அதுமாதிரி நம் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மன நிம்மதி ஏற்படவேண்டும், அதற்குண்டான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருப்பது எனக்கு இஷ்டம்தான். பொறுப்பில் இருந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். எதை எடுத்தாலும் "அஜிடேஷனல் அப்ரோச்" —கிளர்ச்சி செய்து சாதிக்கப் போகிறோம் என்று சொல்லுவது அவ்வளவு சரியா ? ஆட்சியில் இல்லாதபோது கிளர்ச்சி செய்ததில் பொருள் இருக்கலாம், அர்த்தம் இருக்கலாம். ஆட்சிக்கு வந்த பிறகும், "எஃகுத் தொழிற்சாலை கிடைக்கவேண்டும்; அது கிடைக்கவில்லை என்றால் எழுச்சி நாள் கொண்டாடப்போகிறோம். அதிலே சேராது, காங்கிரஸ்காரர்கள் இப்படி இருக்கலாமா ? நீங்களும் சேரவேண்டும்"—இது அனுமதிக்கத்தகாத ப்ரொஸீஜர். The *modus operandi* which, I would suggest, is to press the Central Government for the redressal of our grievances by all legitimate methods. I lay emphasis on the word 'legitimate'. நியாயமான சட்ட ரீதியான முறைகளைத்தான் நாம் கையாளவேண்டும். ஆட்சிக்கு வந்தபிறகு பொறுப்புள்ளவர்கள், பெரும்பான்மை மக்களால் ஆதரிக்கப்பட்ட கட்சியினர்கள் "நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடப்போகிறோம், கிளர்ச்சியில் வெறும் கூட்டம்தான் இருக்கும், வெறும் சொற்பொழிவுகள்தான் இருக்கும், வெறும் ஊர்வலம், அதுவும் அமைதியாக இருக்கும்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் எழுந்திருந்தார்.)

THIRU K. VINAYAKAM : I am not yielding.

THIRU V. S. GOVINDARAJAN : On a point of order.

THIRU K. VINAYAKAM : It should not be a point of disorder.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** நடக்க இருப்பது எழுச்சி நாளே தவிர, கிளர்ச்சி நாளல்ல. கனம் உறுப்பினர் அதை மாற்றிச்சொல்வது முறையா ?

**திரு கே. விநாயகம் :** நான் சொன்னேனே கேட்டீர்களா இப்பொழுது பாருங்கள் எழுச்சி நாளென்று சொல்லி அது கிளர்ச்சி நாளாக மாறக் கூடாது என்று உங்களிடத்திலுள்ள அனுதாபத்தைக்கொண்டு நான் சொல்கிறேன்; எச்சரிக்கை செய்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சொல்கிறார்கள். எந்தத் தொல்லையும் ஏற்படாது, எந்த அமைதிக் குறைவும் ஏற்படாது என்று சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பெரிய மாநிலத்தில் 4 கோடி மக்கள் பரவலாக இருக்கக்கூடிய மாநிலத்தில் எங்கெங்கே என்ன நடக்கும், எப்படி நடக்கும் என்று யாரும் யூகித்துச் சொல்ல முடியாது. நிலைமை ஒரு வேளை கட்டுக்கு அடங்காமல் போய்விட்டால், அதை ஒடுக்குவதற்கு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இருந்தபோதிலும்கூட, அமைதியாக நடத்த முடியுமா என்று ஆட்சியாளர்கள் கவனிக்கவேண்டும் என்று நான் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், எங்களுக்கு நிலைமை தெரிகிறது. நாங்கள் திட்ட வட்டமாகச் சொல்லி விட்டோம். நாங்கள் எழுச்சி நாளில் கலந்துகொள்ள மாட்டோம். எங்களுக்குத் தெரியும் எப்படிச் சாதிக்கவேண்டுமென்று. விட்டுவிடவா போகிறோம். நாங்கள் செய்ய வில்லையா? ஆங்கிலத்தில் சொன்னால் "நோட் ஆப் வார்னிங்" என்று சொல்லவேண்டும். அந்த முறையில் தான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். எழுச்சி நாளில் கலந்துகொள்ளுங்கள் என்று இப்பொழுது எங்களை அழைக்கிறீர்கள். எங்களுக்கு நிலைமை தெரியும். நீங்கள் விலைவாசிப் போராட்டம் நடத்தினீர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினீர்கள், மற்றும் எத்தனையோ போராட்டங்கள் நடத்தினீர்கள். நிலைமை எங்களுக்குத் தெரியும். நிலைமை கட்டுக்கடங்காமல் போய் விட்டால், எங்கள் ஆட்கள் இல்லை, யாரோ காலிகள் செய்து விட்டார்கள் என்று பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுவீர்கள். இன்றைய

தினம் நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறீர்ககள். (திரு. எஸ். முருகையன் : நாங்கள் 138 பேர்கள் வந்திருக்கிறோம், மக்கள் வோட்டு வாங்கி வந்திருக்கிறோம்), ஏமாற்றிவிட்டு. . . . . . . . . . . . . . . . .
(குறுக்கீடு) (ஒரு எதிர்க் கட்சி அங்கத்தினர்: ஏமாற்றம் இல்லை). I object to this kind of interruption, Sir. The reply will be in the same spirit in which the objections come. I will pay him in the same coin. நாங்கள் என்ன விரும்புகிறோம் என்றால், நாட்டு மக்களுக்கு ஒரு அமைதி ஏற்பட, ஒரு சரியான நிலைமை ஏற்படுவதற்கு, ஆட்சியாளர்கள் வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். நாட்டிலே சில்லரைத் தகராறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு, பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு, கலவரம் உண்டாகாமல் இருப்பதற்கு வேண்டிய நிலைமைகளை உண்டாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன். தமிழகத்தினுடைய வரவுசெலவுத் திட்டத்தில் வேண்டிய துறைகளுக்கு மிகச் செம்மையான முறையிலே நிதி ஒதுக்கம் செய்து, இன்றைய தினம் நிதி ஒதுக்க மசோதாவை இந்த மாமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறோம். தமிழகத்து மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்ய வேண்டும், அவர்களுடைய அபிலாஷைகள் அத்தனையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில், இன்னும் ஏராளமான பணத்தை ஒதுக்கியிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். நாம் நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்லும்பொழுது, நம்முடைய தமிழக அரசு இன்றைய தினம் இந்த நாட்டிலே இருக்கிற திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமையிலே இருக்கிறது. தமிழக சர்க்கார் எவ்வளவோ நல்லெண்ணத்தைக் கொண்டிருந்தாலும், எவ்வளவோ நல்ல கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், நல்ல திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்று அக்கறை கொண்டிருந்தாலும், இன்றைய தினம் அவற்றைச் செயல்படுத்த முடியாத அளவுக்கு பெரும்பாலான மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு நிதி நிலைமையில் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நேற்றைய தினம் இந்துப் பத்திரிகையில் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். மத்திய சர்க்கார் ரூ. 3,000 கோடிக்கு ஏற்கெனவே நோட்டு அடித்திருக்கிறார்கள். 3,000 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்தது மட்டுமல்ல. நேற்றைய தினம் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். மேலும் 20 கோடி ரூபாய்க்கு இந்த வாரம்மட்டும் நோட்டு அடிக்க இருக்கிறார்கள். இந்த நிலைமையில் நோட்டு அடிப்பு நடந்துகொண்டே போனால், இந்த நிலைமையில் பணப் புழக்கத்தைத் தூக்கி ஆகாயத்திலே விடுவோமானால், எந்த நல்வாழ்வுக்கான திட்டங்களையும், எந்த நல்ல திட்டங்களையும் நிறைவேற்ற முடியாத நிலைமை மாநில சர்க்காருக்குக் கட்டாயம் ஏற்படுகிறது. விலைவாசியைக் குறைப்போம் என்றோம். விலைவாசியைக் குறைப்பதற்காக எழுச்சி நடத்தி சிறை சென்றவர்கள் இன்றைய தினம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். விலைவாசியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறபொழுது, உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபொழுது, மத்திய சர்க்கார் இத்தகைய கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்குமானால், இத்தகைய பணவீக்கக் கொள்கை தொடர்ந்து நீடிக்கப்படுமானால், எந்த நல்வாழ்வுத் திட்டத்தையும் இந்தத் தாயகத்தில் நல்ல முறையில் நிறைவேற்ற முடியுமா என்பதை இந்த மாமன்றம் சிந்திக்க வேண்டும்.

தமிழக மக்கள் திருப்திப்படுகிற அளவுக்கு, தமிழக மக்களின் நல்வாழ்வின் அடிப்படையில் இன்றைய தினம் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். தமிழகத்தில் இருக்கிற தேயிலைத் தோட்டங்களிலிருந்து வருகின்ற வருமானம், காப்பித் தோட்டத்திலிருந்து வருகின்ற வருமானம், கமுகுத் தோட்டத்திலிருந்து வருகின்ற வருமானம், ரப்பர் தோட்டத்திலிருந்து வருகின்ற வருமானம், நீண்ட கடற்கரையைக்கொண்ட நெடிய தமிழகத்தில் காய்ச்சுகின்ற உப்பிலிருந்து





வருகின்ற வருமானம், அதுமாத்திரமல்ல, அன்னிய நாடுகளில் வியாபாரத்தை ஏற்று நடத்துகின்ற அந்த வருவாய், இவை அத்தனையையும் வசூலிக்கின்ற அதிகாரம், வருவாய் துறை அத்தனையும் மத்திய சர்க்காரிடத்தில்தான் இருக்கிறது. ஆகவே, நம்மிடத்தில் எதை விட்டுவைத்திருக்கிறார்கள் என்று பார்த்தீர்களானால், விற்பனை வரியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இந்த அரசினுடைய நிர்வாகச் செலவை ஏற்று நடத்துவதற்குக்கூட, சாதாரணமாக சமூகக்கட்டுப்பாடுத் திட்டங்களை ஏற்று நடத்துவதற்குக்கூட இந்த அரசாங்கத்திற்குப் போதிய நிதி வசதி இல்லை, அந்தச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்குத் தமிழக சர்க்கார் வரி போடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு வளம் இருந்தும், நல்ல மேற்குத் தொடர்ச்சி மலை இருந்தும், அங்கிருந்து புறப்பட்டு கம்பீரமாக வங்காள விரிகுடாக்கடல் நோக்கி வருகின்ற ஆறுகள் இருந்தும், ஆற்றின் இருபுறமும் பசுமையான நெல் வயல்கள் இருந்தும், இந்த நாட்டில் உணவுப் பஞ்சம். அதுமட்டுமல்ல. இவ்வளவு துறைகளிலேயிருந்தும் வருகின்ற வருவாய் தமிழக மக்களுக்கு வருகின்றதா என்றால், இல்லை.

நான் இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் வருகின்ற வருவாய் அனைத்தையும் ஏற்று, தமிழகத்திற்கு வருகின்ற வருவாய்த் துறை அனைத்தையும் இந்த மாமன்றமே எடுத்து, தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைப் போட்டு, அதைச் செலவு செய்கின்ற உரிமை இந்த மாமன்றத்திற்குக் கிடையாது. இந்த மாமன்றத்தில் இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே நம்முடைய தமிழக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு மானியத்தில் பேசுகிறபொழுது, இந்த மாநில அரசாங்கங்கள் கிராண்டு ரிஸீவிங் கார்ப்பரேஷன், டெல்லியிலிருந்து கிராண்டுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், நன்கொடைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், கூட்டுறவு சொஸைடிகள்போல இந்த அரசாங்கங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நாட்டினுடைய நல் வாழ்வுக்காக அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற இந்த மாமன்றம் அடிப்படையில் நல்ல திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி நிலைமை போதுமானதல்ல. இன்றல்ல, 20, 30 ஆண்டுகள் ஆனாலும் சரி, 40, 50 ஆண்டுகள் ஆனாலும்சரி, இதே நிலைமையில் தொடர்ந்து செல்வோமானால், தமிழகம் ஒரு இருண்ட எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்குமே தவிர, சமதர்ம பாதையை நோக்கியோ, வளம் வாய்ந்த பாதையை நோக்கியோ செல்லக்கூடிய நிலைமை இருக்காது என்பதை இந்த மாமன்றத்திற்கு நினைவுப்படுத்துகிறேன்.

மேலும், மத்திய சர்க்கார் பணம் ஒதுக்குகிறபொழுது நம்முடைய மாநிலத்தின் தேவைக்கேற்ற முறையில் ஒதுக்குகின்றார்களா என்றால் இல்லை. திட்ட அடிப்படையிலே ஒதுக்குகிறோம் என்று சொல்லப்படுகிறது, மாநில அடிப்படையிலே இல்லை. அவர்கள் கருத்துக்கு ஒப்ப அரசியல் சட்டமும் இடம் கொடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பக்ராநங்கல் திட்டத்தை எடுத்து நடத்துகிறார்கள். சேலம் உருக்கு ஆலைத் திட்டம் எடுத்து நடத்தப்படவில்லை. பக்ராநங்கலுக்கு நான் சென்று பார்த்தேன். இந்தத் திட்டத்தின் இரு கோடிகளிலுமுள்ள இரு மலைகள் மிகவும் மோசமானவை. அஸ்திவாரத்தைக்கூடத் தாங்காதவை. அந்த மலைகளுக்குள்ளே சிமெண்டை இன்ஜெக்ஷன் செய்து, அங்கு அவர்கள் இம்மாதிரியான திட்டங்களைத் தீட்டி, மக்களுடைய ஏராளமான பணத்தை வடநாட்டில் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கும் நல்ல திட்டங்கள், பொருளாதாரத் துறையில் லாபம் வரும் நியாயமான திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த மாமன்றத்தின்மூலம் நான் தெரிவிப்பது என்னவென்றால் மத்திய சர்க்கார் தன்னுடைய நிதிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். தொகைகள் ஒதுக்கக்கூடிய தன்மைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும். மாநிலத்தில் வருவாய் வரும் துறைகளை மேற்கொண்டு இருப்பதால் மாநிலத்தின் திட்டங்களை நிறைவேற்ற நல்ல வழி செய்யப்படவேண்டும். அந்த வகையில் நிதிகளைப் பிரித்தளிக்கும் நிலைகள் ஏற்படவேண்டும்.

என். ஜி. ஓ. களுடைய சம்பளம்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாங்கள் கொடுக்கவில்லை, மத்திய சர்க்கார் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நோட்டு அச்சடிக்கும் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் ஏராளமாக அச்சடித்து தங்கள் சிப்பந்திகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அதனால் பண வீக்கம் ஏற்படுகிறது. அதனால் நாம், நம்முடைய சிப்பந்திகள், மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவேதான் நாம் சொல்லுகிறோம், எங்களுக்கும் அச்சடிக்கும் அதிகாரத்தைக் கொடுங்கள் என்று, மத்திய சர்க்கார் அச்சடித்துத் தங்கள் சிப்பந்திகளுக்கு அதிகச் சம்பளம், படி கொடுக்கும் போது, மாநில சர்க்கார்களைக் கலந்து கொண்டு செய்வதில்லை. ஆகவே, அந்த வகையில் "ஃபைனான்ஷியல் பாலிஸி" தெளிவாக்கப்படவில்லை என்றால், நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவது என்பதே மிக மிகக் கடினமாக இருக்கும். நம்முடைய நிர்வாகச் செலவுகளுக்காக, ஆண்டுக்காண்டு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து, வரவுசெலவுகளை நிர்வாகம் பொறுத்தவரையில் செய்து கொண்டிருக்கலாம். மற்றபடி திட்டங்கள் எதையும் நிறைவேற்ற முடியாது. மத்திய சர்க்காரிடம் அரிசி விலையைக் குறைக்க வேண்டும் என்று பணம் கேட்டோம்; அதுவும் தரப்படவில்லை. கோதுமைக்கு ஏராளமாகப் பணம் கொடுக்கிறார்கள். நீர்பாசனத் திட்டங்களுக்கு பத்து கோடி ரூபாய் கேட்டோம், கொடுக்கவில்லை. அப்படித் தாருங்கள், நாட்டு மக்களுக்கு உதவுகிறோம், மக்கள் பசிப்பிணியைப் போக்குகிறோம் என்றோம். அதுவும் கிடையாது. அதைத்தான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். வருமான வரி கொடுக்கும் செல்வந்தர்களிடம் கண்டிப்பாக இல்லாமல் எவ்வளவோ தொகைகள் வசூலிக்காமல் இருக்கின்றன. எத்தனையோ கோடிக்கணக்கில் அப்படிப்பட்ட தொகைகளை விட்டு வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் கேட்கும் 5 கோடி ரூபாயைக்கூட கொடுக்க மறுக்கிறார்கள். அதைப்பற்றிச் சொன்னால், திராவிட நாடு பேசுகிறோம் என்கிறார்கள். அதைப்பற்றி தமிழக முதல் அமைச்சரவர்களே விளக்கியிருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் திராவிட நாட்டுத் தத்துவத்தை விட்டு விட்டபோதிலும், திராவிடர் புறக்கணிக்கப்படுவதையோ, அவர்களுடைய நன்மைகளைச் செய்யாமல் இருப்பதையோ பார்த்துக்கொண்டு இருக்க மாட்டோம். அவர்களுடைய கலை, கலாச்சாரம், பண்பு இவற்றைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டுதான் இருப்போம். அதை மத்திய சர்க்காருக்கு உணர்த்தி, அவசியமானால், அரசியல் சட்டத்தை மாற்றி, மாநில சர்க்காரின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்திய நாட்டின் ஒற்றுமை நீடித்து நிலைத்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***திரு. வீ. மலைக்கண்ணன் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சமர்ப்பித்திருக்கும் நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து நடந்து கொண்டிருக்கும் இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் சொன்னார்கள், நடந்து கொண்டிருக்கும் ஆட்சி காங்கிரஸ் ஆட்சியைப்போல இருக்கிறது என்று. காங்கிரஸ் ஆட்சி 20 ஆண்டுக் காலத்தில், அந்தப் பெருமக்கள் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று பேசிக்கொண்டு இருந்தார்களேயல்லாது, கொள்கையளவில் பேசிக் கொண்டிருந்தார்களே அன்றி, காந்தீயக் கொள்கையை நிலை நாட்டப் போகிறோம் என்றார்களேயல்லாது, அனைத்தையும் வாயளவில் பேசிக்கொண்டிருந்தார்களேயன்றி, செயலளவில் எதையும் சாதிக்கவில்லை. காந்தியடிகள் அமைச்சர்கள் ரூ. 500-கு மேல் வாங்கக் கூடாது என்றார்கள். இந்த 20 ஆண்டுக் காலமாக ஆட்சியில் இருந்து எந்தக் காங்கிரஸ் அமைச்சர் அதை நிறைவேற்ற வந்தார்கள்? ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி துவங்கியதுமே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறது. அவர்கள், தேசியமயமாக்கப் போகிறோம் தேசியமயமாக்கப் போகிறோம் என்று வாயளவில் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆனால் செயலில் எதையும் செய்யவில்லை. ஆனால் இந்த அரசு இப்பொழுது 75 மைலுக்கு அப்பாலுள்ள பஸ் போக்குவரத்து அனைத்தையும் அரசாங்கமே எடுக்கப் போகிறது என்று துணிச்சலோடு தெரிவித்திருக்கிறது. ஆகவே, காந்தீயவாதிகளுக்கும், காங்கிரஸ் உறுப்



பினரான திரு. விநாயகத்திற்கும் இது காங்கிரஸ் ஆட்சியோ என்கிற எண்ணம் தோன்றினால் அதில் தப்பில்லை. அந்த எண்ணம் அவர்கள் எல்லோருக்கும் தோன்றவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

வட்டார வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது, அதிகமான பணம் பல துறைகளிலும் வீணாகச் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மாதர் நல சங்கம், வில்லேஜ் சஹாயக் ஸ்கீம் என்றெல்லாம் வைத்து பணத்தை விரயம் செய்கிறார்கள். அந்தப் பணத்தையெல்லாம் பின் தங்கிய பகுதிகளில் சாலைகள் அமைக்க, நீர்பாசன வசதிகள் செய்து கொடுக்க உபயோகிக்கலாம். அப்படிச் செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அமைச்சரவைக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். கிழக்கு ராமநாதபுரத்தில் பிளாக்குகள், பி, ஏ, என்று பிரிவுகளாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் "டி" பிளாக்குகளாகச் செய்யவேண்டும். அங்கே கிடைக்கும் நில வரியை வைத்தும், மக்கள் தொகையை அடிபபடையாகக் கொண்டும பிளாக் பி, சி, எனாபிரிக்கபபடுவதாக அறிகிறேன். அதை மாற்றி அது பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை மனதில் கொண்டு திட்டங்கள் நிறைவேற்றினால், பயனுள்ளதாக இருக்கும். அந்தப் பகுதிக்கு வேண்டியதெல்லாம், நீர்பாசன வசதிகள், பாதை வசதிகள் இவைதான் தீவிரமாகச் செய்யப் படவேண்டும். மாதர் நல சங்கமோ, கிராம சஹாயக்குகளோ அவசியம் இல்லை. தேனீ வளர்த்தல்' கோழி வளர்த்தல் போன்றவைகள் தேவையில்லாதவை.

விவசாயிகளுக்கு பல திட்டங்களிலும் கடன் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கடுமையான முறைகளும், விதிகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இன்னும் எளிதாக்கவேண்டும். ஏனெனில் ஆங்கிலேயர்கள் எப்படிப் போட்டுவிட்டுப் போனார்களோ அதே நிலையில் அவை இன்னும் இருப்பதால், விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட முறைகளைத் தளர்த்தி, இந்த "ரெட் டேப்" சிவப்பு நாடா கொள்கை அகற்றப் பட்டு விதி முறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும். கடன்களும் அவ்வப்பொழுது கிடைக்க முறைகளை எளிதாக்கவேண்டும்.

கிழக்கு ராமநாதபுரம் மிகவும் பின் தங்கிய பகுதி என்பதால் அந்த பிளாக்குகளை "டி" பிளாக்குகளாக்கி, அதிகப்படியான தொகைகளை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, ராமநாதபுரம் போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகள் என்று பிரிக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றத்திலும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. 1962-ல் திட்டக் கமிஷனிலிருந்து ஒரு ஸ்டடி டீம் வந்து அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்பொழுது மத்திய சர்க்கார் அந்த அந்த மாநிலத்திலுள்ள பின் தங்கிய பகுதிகளைப்பற்றி அறிக்கை கொடுத்தது. ஆனால் அந்த வகையில் தொகைகள் தரப்படவில்லை. இப்பொழுது மேலும் ஸ்டடி டீம் ராமநாதபுரம் பகுதிகளுக்கு அதிகம் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அமைச்சர்கள், கிழக்கு ராமநாதபுரம், அறந்தாங்கி, போன்ற பகுதிகளை ஈவு இரக்கம் காட்டி, பின்தங்கிய பகுதி என்று அதற்கு அதிகமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***திரு. என். சங்கரய்யா :** மன்றத் தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு முற்
மசோதாவின்மீது பேசும் நேரத்தில் எங்களுடைய கட்சியின் சார்பிலே பகல் 11-00
பின்வரும் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் ஏமாற்றப்பட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இது ஜனநாயகத்திற்குப் புறம்பான ஒரு கருத்து. மக்கள் அவ்வாறு ஏமாற்றப்படக் கூடியவர்கள் அல்லர். அவர்கள் பழம்பெரும் அரசியல்வாதிகளையும்கூட தேவையான தருணம் வந்தால் ஏமாற்றிவிடுவார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் 1967-ஆம் வருஷத் தேர்தல் நடந்தது. இதை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் நினைத்துக்கொண்டார்கள் என்றால் அது அவர்களுக்கும் நல்லது, மற்றவர்களுக்கும் நல்லது என்று கருதுகிறேன். இன்றைய

தினம் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றிருக்கிறது. இருபது ஆண்டுகால காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராகத்தான், மக்களின் எழுச்சியின் காரணமாகத்தான் இப்பொழுது புதிய அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலுள்ள காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் ஏற்படுவதற்கும் இதுதான் அடிப்படைக் காரணம்.

இன்று என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன? மத்திய அரசாங்கம் தன்னுடைய ஆயத் தீர்வைகளை அதிகரித்துக்கொண்டே போகும் காரணத்தினால் விலைவாசிகள் கட்டுப்படாமல் உயரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் விலைவாசிகள் உயரக்கூடிய சூழ்நிலையில் மிகவும் முக்கியமான பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது. அதே நேரத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் ஏற்படக்கூடிய பஞ்சப்படியைக் கொடுங்கள் என்றால் அதற்கு "நாங்கள் கொடுக்க முடியாது" என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய வாதத்தை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ள முடியாது. ஒன்று, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்றால் அதைக் கவனிக்கத் தயாராயில்லை அல்லது விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்ட மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் பஞ்சப்படியை அதிகமாகக் கொடுக்கப் பணம் ஒதுக்குதல் வேண்டும், அதற்கும் முடியாது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்கள் இருக்கும் மாநிலங்களில் உள்ள காங்கிரஸ்காரர்கள் மக்களிடத்திலே இப்பொழுதுள்ள ஆட்சி இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்று அவர்கள் தங்களுடைய பிரச்சாரத்தை நடத்துகிறார்கள். இன்று இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. உண்மையிலேயே இன்று அவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருப்பார்களேயானால், அவ்வாறு அக்கறைகொண்டு செயல்பட விரும்புவார்களேயானால், அவர்கள் நிச்சயமாகத் தங்களுடைய பொறுப்பில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தை, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்கவேண்டும். மத்திய சர்க்காரும், உணவுப் பொருள்களுக்கும், இதர பொருள்களுக்கும் உள்ள விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மாநில அரசாங்கங்கள் சிரமப்படும் நேரத்தில் அவர்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும்.

இந்தச் சிரமங்களை நீக்க, மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் உதவ வேண்டுமென்றால், இந்த நாட்டில் ஏகபோகமாக ஒருசில முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கும் தொழில்களை நாட்டுடைமையாக்குவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு ஆக்குவதனால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள பெரு முதலாளிகளும், உள்நாட்டு முதலாளிகளும் எடுத்துச் செல்லும் ஏராளமான லாபத்தை இந்திய அரசாங்கம் பெறமுடியும். அவ்வாறு பெறும் லாபத்தை மாநிலங்களுக்கு அளித்து உதவ மத்திய சர்க்காருக்கு வசதியாக இருக்கும்.

நாம் இன்றைக்குப் பெரிய சிக்கலில் இருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரப் பின்னணியில் மாநில அரசாங்கங்கள் செயல்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் பல சிரமங்கள் உண்டாகின்றன. உதாரணமாக, மத்திய அரசாங்கத்திடம் நமது விவசாய அமைச்சர் அவர்களும், ரெவின்யூ அமைச்சர் அவர்களும் " நீங்கள் 20 கோடி ரூபாய் சிறு நீர்ப்பாசனத்திற்காக எங்களுக்கு ஒதுக்கினீர்களானால், நாங்கள் இன்றைக்குப் பக்கத்திலே உள்ள மாநிலங்களுக்குச் சில லட்சக்கணக்கான டன் உணவைக் கொடுக்க முடியும் " என்று கேட்டதற்கு, அவர்கள் 5 கோடி ரூபாய் தருகிறோம் என்று கூறியதைப் பார்க்கிறோம். இவ்வாறிருந்தாலும் இங்கு இருக்கக்கூடிய இந்த அரசாங்கம் நல்ல முறையில் செயல்பட்டு இன்றைக்கு இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எதிர்க்கட்சியிலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், மக்களுக்கு ஏதாவது அதிருப்தி ஏற்பட வேண்டும். அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவ்வாறு அதிருப்தி ஏற்படாதவகையில் இந்த அரசாங்கம் பார்த்துக்கொள்ள



வேண்டும். குறிப்பாக மாநிலத்தில் இருக்கக்கூடிய உணவுப்பொருள் விநியோக முறைபற்றி உணவு அமைச்சரவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். இன்றிருக்கக்கூடிய ரேஷனை இன்னும் சில கிராமங்களுக்கும் விஸ்தரிக்க மாவட்ட கலெக்டர்களை நடவடிக்கை எடுக்கக் கோரியிருப்பதாகவும், அதிகமான கிராமங்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காத நிலைமையிருந்தால், அங்கு கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே பல கிராமப்புறங்களில் குடும்பக் கார்டு முறை அமலில் இல்லை. அவர்கள் விவசாயத்திலும் ஈடுபட்டவர்கள் அல்ல. எனவே அப்படிப்பட்ட கிராமங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து விற்பனை வரி விலக்கு அளிப்பது பற்றி கடலை. ப்பிண்ணாக்குக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும். அதேபோன்று மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்காத அளவிற்குக் குறிப்பிட்ட பண்டங்களின் விற்பனை வரியை நீக்கவேண்டும். விற்பனை வரியின் அளவைக் குறைத்து, மாநில அரசாங்கம் தன்னுடைய அதிகார வரம்புக்குட்பட்ட விலைவாசிகளைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் ஆட்சியில் நிலவுடைமைக்கு வரம்பு கட்டக்கூடிய சட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் கணக்குப்படி இந்தப் பரந்த மாநிலத்தில் 25,000 ஏக்கர் உபரி நிலம்தான் இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதிலும் 16,000 ஏக்கர்தான் அரசாங்கத்தின் வசம் வந்திருக்கிறது. பிரம்மாண்டமாகச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன் விளைவு என்னவென்று பார்த்தால் 25,000 ஏக்கர் தான் உபரியாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது எவ்வளவு உண்மையற்றது என்று சொல்லத்தேவையில்லை. எனவே இந்த சட்டத்தைப்பற்றி அடிப்படையில் சிந்தித்து நல்லமுறையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றத் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குத்தகைக்கும், வாரத்திற்கும் வேலை செய்யும் விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். குறிப்பாகப் பல கிராமங்களில் நிலப்பிரபுக்கள் பெரும் அதிகாரிகளைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு ஹரிஜனங்களைப் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றச் செய்கிறார்கள். ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்வதைத் தடுத்து மேய்ச்சல் நிலத்திற்கு வேண்டுமென்று கூறி தங்கள் தேவைக்குப் பயன்படுத்தி அவர்களை வெளியேற்றுகிறார்கள். அதை அரசாங்கம் உறுதியுடன் தடுக்கவேண்டும். ஏழை விவசாயிகள் சாகுபடி செய்தால் அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்று ரெவின்யூ இலாக்கா அதிகாரிகளுக்கும், கலெக்டர்களுக்கும் உத்தரவுகள் போடவேண்டும். விவசாய அமைச்சரவர்கள் சுமார் 50,000 ஏக்கர் காட்டு இலாக்கா நிலங்களைச் சாகுபடிக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில நிலங்களை ஒதுக்கப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக நகர்ப்புறங்களில் தொழிலாளர்கள் குடிசைகள் அமைக்கிறார்கள். நகராட்சிக்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் அவர்கள் குடிசைகள் அமைக்கிறார்கள். அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். உதாரணமாக மதுரையிலே ரோடு போடவேண்டுமென்று அங்கு குடியிருக்கிறவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இம்மாதிரிப் பொதுக்காரியங்களுக்காக அவர்கள் வெளியேற்றப்படும்பொழுது, அவர்களுக்கு மாற்று இடங்களுக்கு வசதி செய்துதரவேண்டும். எனவே, முனிசிபல் அதிகாரிகளுக்கு, மாவட்ட அதிகாரிகளுக்கு, இது போன்று ஏழை எளிய மக்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மாற்று இடங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தால் அது சரியான கொள்கையாக இருக்கும், மக்களுக்குக் குறைகள் ஏற்படாமலும் இருக்கும்.

போலீஸ் இலாக்காவைப்பற்றி நாம் ஏற்கெனவே பேசியிருக்கிருேம். கண்டிப்பாக அதிகாரிகளுக்கு உத்திரவிட்டு கேஸ்கள், குற்றங்கள் வராமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தடுப்புக் குற்றங்களுக்காகப் பிடிக்கக்கூடியவர்களை மரியாதையாக நடத்தவேண்டும். அவர்களை அடிப்பது, துன்புறுத்துவதுபோன்ற முறைகளைக் கையாளக்கூடாது. விஞ்ஞான ரீதியில் புலனுய்வு செய்து குற்றங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். அடுத்து, சந்தேகக் கேஸ்கள் போட வேண்டாம் என்று மெம்பர்கள் வற்புறுத்தியிருக்கிருர்கள். அதையும் நீக்கிவிட்டால் போலீஸ் துறையிலிருந்து சிரமங்கள் இல்லாமல் சாதாரண மக்கள் எல்லோரும் அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்பதை இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன். போலீஸ் அதிகாரிகள் மாநாட்டைக் கூட்டி, வேதனை தரத்தக்க, இம்சிக்கத்தக்க நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு கண்டிப்பாக எடுத்துச் சொல்லிவிடவேண்டும். அந்த வகையில் அவர்கள் கண்டிப்பாகச் செயல்பட, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பெரும் பணம் படைத்தவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு, சாதாரண ஏழை எளிய மக்களைக் கேஸ்களில் கொண்டுவர முயற்சிக்கிருர்களே, அதை விடுத்து, அவர்கள் நேர்மையாக, சட்டத்தின்படி உண்மையின்படி நடந்து கொண்டாலே போதுமானது என்று கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பிக்கவேண்டும் என்று இந்த மாநில அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்கள்பற்றிய கொள்கையை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். நேற்றுகூட, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். சமீபகாலத்தில் அவர்கள் பேசும்போது, "கெரோ" என்ற வார்த்தையைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய பிரச்சினையைக் கிளப்புவதற்காக முயற்சித்தார்கள். மாநிலத்தில் உள்ள பெருமுதலாளிகள், ஏதோ ஒரு பெரிய தீங்கு நேர்ந்துவிடப் போகிறது என்று கருதிக்கொண்டு, சில கம்பெனிகளை சேர்ந்தவர்கள் பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரப்படுத்திஞர்கள். அவர்களுடைய இத்தகைய முயற்சி எதைக் காட்டுகிறது? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்குக் கம்யூனிஸ்டை ஒரு பூச்சாண்டியாகக் காட்டி, தொழிலாளர்களுக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்க இவ்விதமாக முயற்சி செய்தால், அத்தகைய பிரசாரம் எதற்கும் இன்றைக்கு இந்த அரசாங்கத்திலேயுள்ள பழுத்த அரசியல்வாதிகளோ, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமோ அதனுடைய தொழிலாளர் இலாக்கா மந்திரியோ இடங்கொடுக்கமாட்டார்கள் என்று நிச்சயமாக எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று பேசும்போது "சட்டபூர்வமான கெரோ" என்று குறிப்பிட்டார்கள். அதற்காக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஔவையாருக்கு முருகப்பெருமான் சுட்ட பழம் எது, சுடாத பழம் எது என்று சொன்னதைப்போல, "சட்டபூர்வமான கெரோ" என்று அவர்கள் குறிப்பிட்டது இருக்கிறது. "கெரோ"வே சட்டபூர்வமானதுதான் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் விளங்கும். காந்தியார் கையாண்ட "சத்தியாக்கிரகம்", "மறியல்" போன்ற ஒரு வகைப்பட்டதுதான், இந்த "கெரோ" என்பதும். அவர்கள் சீரான முறையில் சிந்தித்துப்பார்த்தால் தெரியும். அதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அங்கே நடக்கிறது என்பதற்காக அல்ல. தொழிலாளர்கள், முதலாளிகள் இவர்களுக்கிடையே பிரச்சினை வரும்போது என் அந்த பிரச்சினை ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்து, அவர்களுடைய குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தால், இங்குள்ள தொழிலாளர் இயக்கம் எந்த ஒரு மாநிலத்திலிருந்தும் எந்த ஒரு முறையையும் கடன் வாங்கவேண்டிய நிலைமையில் இல்லை. முப்பது, நாற்பது ஆண்டுக் காலமாக, நீண்ட காலமாகத் தொழிற் சங்கங்களை நடத்தும் இந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை எவ்வாறு தீர்த்துக்கொள்ளவேண்டும், தங்களுடைய குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்துக்கொள்ளவேண்டும் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். தொழிலாளர் கொள்கையில் நாம் எந்த விதமான முதலாளிகளுடைய [illegible] சகல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கக்



கூடியவர்களுடைய கோரிக்கைகளைக் கவனித்து, அவர்களுக்கு ஆவன செய்தால், தொழிலாளர்களுடைய உறுதியான நம்பிக்கையைப்பெற்ற இந்த மாநில அரசாங்கம் எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும், எதிர்ச் சக்திகளுக்குக் கிஞ்சிற்றும் இடம் ஏற்படாத நிலைமை இந்த மாநிலத்தில் ஏற்படும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேரம் போதாத காரணத்தால் நான் இன்னும் விரிவாகப் பேச முடியவில்லை. சட்ட மன்றத்தில் பொது விவாதம் நடந்த போது, முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். ஒவ்வொரு இலாக்காவிற்கும் ஆலோசனைக் குழு ஏற்படுத்தி, சட்ட மன்ற உறுப்பினர்களையும், பல்வேறு இலாக்காக்களைச் சேர்ந்த அதிகாரிகளையும் அதில் உறுப்பினர்களாகப் போடவேண்டும். இப்படி ஆலோசனைக் கமிட்டி என்ற முறையில் ஒவ்வொரு இலாக்காவிலும் அமைத்து, அதிலே விரிவாகப் பேச ஏற்பாடு செய்தால், அது மிகவும் உபயோகமான காரியமாக இருக்கும். இந்தியப் பாராளுமன்றத்திலும் அத்தகைய ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை இந்த மாநில அரசாங்கம் பின்பற்றி, நிர்வாகத்தை நடத்தி, சாதாரண ஏழை மக்களுக்கு நல்ல முறையில் காரியங்கள் செய்தால் நிச்சயமாக எந்த ஒரு எதிர்ச்சக்தியும், இந்த மாநிலத்தில் பல்வேறு ஜனநாயக சக்திகளின் கூட்டு முயற்சியினுல் ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசாங்கம் நல்ல முறையில் செயல்படுவதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்துக்கொண்டு, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது என்னைப்பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் நான் ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். "எதிர்க்கட்சித் தலைவர் 'கெரோ' பற்றிக் குறிப்பிட்டார்கள், சட்ட பூர்வமானது என்று குறிப்பிட்டார்கள், மகாத்மா காந்தியே குறிப்பிட்டார்கள்" என்ற முறையில் கனம் உறுப்பினர் தெரிவித்தார்கள். மகாத்மா காந்தியிடம் ஒருவர் சென்று "கம்யூனிஸ்டு என்ருல் என்ன?" என்று கேட்டதற்கு, "அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டு, பலாத்காரம் இல்லாமல், அண்டர்க்ரௌண்டு வேலை இல்லையென்ருல், அதையும் கூட ஆதரிக்கிறேன்" என்று அவர்கள் சொன்னதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. க. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதித்ததற்காகத் தங்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் நடித்துக் காட்டி, ஏதோ மக்களெல்லாம் ஏமாற்றத்தின் காரணமாக எங்கள் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்ததாகக் குறிப்பிட்டார்கள். சென்ற இருபதாண்டுக் காலமாக, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, அவர்கள் மக்களுக்குச் செய்த காரியங்களினுல், இன்றைக்கு மக்கள் என்ன நிலைமையில் இருக்கிருர்கள் என்று பார்த்தால், மக்கள் அத்தனை பேரும் ஆண்டிகளாகியிருக்கிருர்கள், அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள் மடங்களாகி இருக்கின்றன, துர்ப்பாக்கியவசமாக இரண்டையும் சேர்த்து என்னுடைய தொகுதியையும் ஆக்கியிருக்கிருர்கள். இப்படியெல்லாம் செய்த காங்கிரஸ், தாங்கள் ஏதோ மக்களுடைய வாழ்க்கையை வளப் படுத்தி விட்டதைப்போன்றும், மக்கள் தவறிப்போய் எங்களிடத்தில் பொறுப்பை ஒப்படைத்திருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவார்களானுல், அது அவருடைய உள்ளத்திற்கு மாருகவும், அவருடைய நெஞ்சமே விரும்பாத ஒன்ருகவும்தான் இருக்கமுடியும். எதிர்க்கட்சியில் வந்துவிட்ட காரணத்தால், இப்படிச் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காக வலிந்து அத்தகைய கருத்தை இங்கே பேச ஆரம்பித்தார்கள். ஆனுல், நல்ல அரசியல் தெரிந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினரை மிக அதிகமாக மதிக்கக்கூடியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவர்கள்

எடுத்துக்கொண்டிருக்கும் பல அரிய திட்டங்களை எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் பாராட்ட விருப்பம் இல்லையென்றாலும்கூட, சேலம் இரும்பாலைத் திட்டம் நம் மாநிலத்தில் ஏற்பட வேண்டும் என்கிற முயற்சியையாவது பாராட்ட வேண்டும். சேலம் இரும்பாலைத் திட்டம் காங்கிரசார் பெற்ற குழந்தை. தாயே தன்னுடைய குழந்தையைக் கவனிக்கத் தவறிவிட்ட நிலையில், கவனிப்பாள், கவனிப்பாள் என்று நெடு நாளைக்கு, பக்கத்தில் இருக்கும் செவிலித்தாய் அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம், செவிலித்தாய் போல, அந்தத் திட்டத்தை எப்படியாவது கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று எழுச்சி நாள் கொண்டாட வேண்டும் என்று முயற்சிக்கிறதேதவிர, ஏதோ தாய் மறந்தால், எல்லோருமே மறந்துவிட வேண்டும் என்ற மாற்றாந்தாய் மனப்பான்மையில், அவர்களைப்போன்ற நிலையில் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை ; பச்சாதாபப்படும் நிலையில் பார்க்கவேண்டும், இல்லாவிட்டால் மக்கள் பரிகசிப்பார்கள். ஆதரிக்காவிட்டால், அனுதாபத்தோடு எப்படியாவது நீங்கள் செய்யுங்கள் என்று ஆசியாவது வழங்கவேண்டும் என்று காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு செய்த சாதனைகள் என்ன என்று கேட்டார்கள். அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். நம்முடைய அமைச்சர்கள் அத்தனை பேரும், அவரவர்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதே முதல் சாதனை. அடுத்து, முன்பு இருந்த அமைச்சர்கள் பெற்றிருந்த கார்களுக்கும், இப்பொழுது நம்முடைய அமைச்சர்கள் பெற்று வருகின்ற கார்களுக்கும் வித்தியாசம் தெரியும். சாதாரண நடுத்தர வர்க்கத்தினர் வைத்திருக்கும் காரையே இப்பொழுதுள்ள அமைச்சர்கள் பயன்படுத்துகிறார்கள். அதுவும், தொழிற் துறைக்கு, சென்ற அரசைவிட நம்முடைய அரசு 17 கோடி ரூபாய் அதிகமாக வழங்கியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, தொழிலாளர்களிடத்தில் நம்முடைய அரசுக்கு இருக்கும் ஈடுபாட்டுக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை.

ஒரு படி அரிசித் திட்டத்தைப்பற்றி அவர்கள் கிண்டலாகவும் கேலியாகவும் பேசினார்கள். ஒருவன் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருக்கிறான், கண் மூடியிருக்கிறது, கை, கால் எதையும் அசைக்க முடியாமல் நினைவு அற்றுப் படுத்திருக்கிறான். அந்த நிலையில் டாக்டர் வந்து, இன்ஜெக்ஷன் போட்டதன் விளைவாக, அந்த நோயாளி கை, காலை அசைக்க முடிகிறது. கோவை கால் ; சென்னை கை. முழுமையும் நோய்வாய்ப்பட்டிருந்த நோயாளி ஒருவன், டாக்டர் இன்ஜெக்ஷன் போட்டதன் விளைவாகக் கையையும், காலையும் அசைக்க முடிந்ததைப் போல, இன்றைய அரசு, உடனடியாகச் சில நடவடிக்கைகளை எடுத்து, கோவையிலும், சென்னையிலும் இந்த படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. நோயாளி முழுமையும் குணம் பெற்று, படிப்படியாக அவன் நடக்கவேண்டும். அதற்கு மாறாக உடனேயே கையையும் காலையும், உடம்பையும் ஆட்ட வேண்டும் என்றால், அப்படி அவசரப்பட்டு, ஊசியை மாற்றி மாற்றிப் போட்டு, உயிருக்கு உலை வைக்கும் டாக்டர் அல்ல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஒரு படி அரிசித் திட்டத்தை முதல் பணியாகக் கோவையிலும், சென்னையிலும் கொண்டு வந்திருந்தாலும், படிப்படியாகத் தமிழகம் முழுவதும் கொண்டு வர அவர்கள் காத்திருக்கிறார்கள்.

தூய தமிழில், எழுதவேண்டும் என்று அப்போதிருந்த அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நல்ல தமிழ்ப்பற்று உள்ளவர்—பல முறை சொல்லியும் செய்யாத நிலையில் இருந்து விட்டார். அதை இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கும் நமது அரசு, தூய தமிழில் பேருந்து வண்டிகளில் எழுதச் செய்திருக்கிறது. எழுதியதோடு மட்டுமல்லாமல், கட்டணத்தையும் குறைத்திருக்கிறது. இதற்கு முன்பெல்லாம் அரசாங்க பஸ்களில், அதிலுள்ள கட்டண உயர்வின் காரணமாக, சவாரி செய்பவர்களை, அதிகமாகப் பார்க்க முடியாது. ஆனால், இன்றைக்கு பஸ் கட்டணத்தைக் குறைத்ததன் விளைவாகவும் மற்ற நடவடிக்கைகள் காரணமாக



65825

வும், அரசாங்க பஸ் நிலையங்களில் பெரிய க்யூ வரிசை நின்றுகொண்டு, நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். அந்த நிலையில், எம்.எல்.ஏ., எம்.எல்.சி. என்று சொல்லிக்கொண்டுதான் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட இடம் பிடிக்கவேண்டிய நிலைக்கு அரசாங்க பஸ்களில் பயணம் செய்ய மக்கள் பேராவலோடு இருக்கின்றார்கள். இந்த நிலையை ஏற்படுத்தியதற்கு நம்முடைய அமைச்சர்கள்தான் காரணம். கட்டணத்தைக் குறைத்த ஒரு செயலையாவது அவர்கள் பாராட்டியிருக்கவேண்டும்.

தூத்துக்குடி-சேதுசமுத்திரத் திட்டத்தை மிகத் தீவிரமாக, எப்படியும் அது வந்தே தீரவேண்டும், அதைக் கண்டிப்பாக முடிக்கவேண்டும் என்பதற்காக நாம் அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிறோம். அதையும் அவர்கள் பாராட்டத்தான் வேண்டும். விவசாய வருமான வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினையாயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள வியாபாரிகளுக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறார்கள். இதுவும் நம்முடைய அரசாங்கத்தின் சாதனைதான். விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்பதற்காகப் பல அரிய திட்டங்களைத் தீட்டி, ஆங்காங்கு கருத்தரங்குகளை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் எங்கெங்கு, எந்தெந்த முறையில் மக்கள் தங்களுடைய வாழ்க்கை வசதியை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும், உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரிய திட்டத்தையும் தீட்டியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் மிக அதிகமாக உள்ள புறம்போக்கு நிலங்களையும் கறம்பாக இருக்கும் நிலங்களையும் பயன்படுத்தாதிருக்கும் காட்சியைப் பார்த்த பிறகு, விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு துளி இடம் கூட விவசாயம் செய்யப்படாமல் விடப்படக்கூடாது என்ற வகையில் அரிய திட்டத்தைத் தீட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலை நாட்டில் நிலம் குறைவாக இருக்கும் காரணத்தால், கடல் பரப்பில் ரப்பர் ஷீட்டைப் போட்டு, அதன் மீது மணலைப் பரப்பி, அதற்கு மேல் எருவிட்டுப் பயிர் செய்வதாகப் பத்திரிகையில் படித்தேன். போதிய நிலமில்லாத காரணத்தால் அத்தகைய முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுப் பயிர் செய்கிறார்களாம். அதுவும் சிறப்பாக, ஜப்பான் நாட்டு விவசாயிகள் அதி தீவிரமாக இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகிறார்களாம்.

(திரு. கா. வேழவேந்தன் தலைமை)

ஆனால், சென்ற இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகும் பல மாநிலங்களில் இருப்பதைப் போன்றே நமது மாநிலத்திலும் கறம்பு நிலங்கள் விவசாயத்திற்குக் கொண்டுவரப்படாத நிலையிலேயே இருக்கின்றன. அத்தகைய நிலங்களைப் பயன்படுத்துவதற்காக வேண்டித்தான், அரியதொரு திட்டத்தைக் கொண்டு வந்து, விவசாயிகளுக்குப் பல சலுகைகளை அளித்து, ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கும் முறையிலே, ஆதித்திராவிட மக்களுக்கும், பிற்பட்ட இனங்களைச் சார்ந்த மக்களுக்கும் புறம்போக்கு நிலங்களைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களை விவசாயத்திலே முன்னேற்றுவதற்காக வேண்டி, அரசு நல்ல திட்டத்தை வழங்கியிருக்கிறது. தேவையில்லாத இலாக்காக்களை நீக்கி, தேவையான வகையில் அவர்களுக்கும் வேலை வாய்ப்புத் தந்திருக்கும் காரணத்தால், நம்முடைய அரசாங்கத்தை எந்த அரசாங்க அலுவலரும் எந்த விதமான ஒரு மனக்கசப்போடு பார்க்கவும் இல்லை ; போற்றித்தான் இருக்கிறார்கள். ஆனால், மேடையில் கட்சிக்கு வலுத்தேடுவதற்காகச் சொல்லவேண்டிய காரணத்தால், உறுப்பினருக்கு இயற்கையாக இருக்கும் சாதுரியத்தின் காரணமாக, இங்கே சொல்ல முயன்றிருக்கிறார்கள்.

ஐந்து ஏக்கர் வரை நில வரியை ரத்து செய்திருக்கிறது, புஞ்சை நிலங்களுக்கு. இதுவும் ஒரு சாதனைதான். ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, வட்டியாக 14 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு இந்த மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டியிருப்பதைக் கொஞ்சம் காலதாமதமாகக் கொடுக்க அனுமதிக்க வேண்டும், கெடுவைத் தள்ளிப் போட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்தார்களா என்றால், அதையும் மறுத்திருக்கிறார்கள். அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்—மத்திய அரசாங்கம் டாக்டர் நிலையில் இருக்கிறது. சென்னை அரசாங்

கம் கம்பவுண்டர் நிலையில் இருக்கிறது. கம்பவுண்டர் நிலையில் இருக்கிறவருக்கு, வருகின்ற நோயாளிகளினுடைய தரம் தெரிகிறது, தன்மை தெரிகிறது, எவ்வளவு கஷ்டத்தோடு, இடுக்கண்ணோடு நோயாளி நிற்கிறார் என்ற காட்சி தெரிகிறது. ஆனால், மருந்து எழுதித்தரும் அதிகாரம் டாக்டர் கையில் இருப்பதால், அவர் என்ன மருந்தை எழுதிக் கொடுக்கிறாரோ, அதைத்தான் அந்த கம்பவுண்டர் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைப் போன்ற கம்பவுண்டராக இருக்கக்கூடிய சென்னை அரசாங்கத்திற்கு நல்ல டாக்டராக ஆகக்கூடிய திறன் இருக்கிறதென்பது காங்கிரஸ் நண்பர்களுக்கும், திறம் படைத்தவர்களுக்கும், சாதுரியம் படைத்தவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். மத்திய அரசாங்கம், ஒரு வரி வஜாவைத் தள்ளிக் கொடுப்பதுபோல், நமக்கு ஒரு 14 கோடி ரூபாய் கொடுத்தால், நம்முடைய திட்டங்கள் மேலும் மேலும் பயனளிக்கத் தக்க விதத்தில் அமைத்துப் பலன் அடைய முடியும்.

அடுத்தபடியாக, சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகியும்கூட நம் மாநிலத்திற்கு 15 விழுக்காடுதான் தருகின்ற அதிகாரம் மத்திய அரசிடத்தில் இருக்கிறது. எஞ்சியுள்ள சர்க்கரை அமெரிக்க நாட்டுக்கோ, அல்லது வேறு நாட்டுக்கோ அவர்களுடைய பிரபல்யத்தை உலகத்தில் வெளிப்படுத்த, மற்ற நாடுகளுக்கு அனுப்பும் அதிகாரம் மத்திய அரசிடத்தில் இருக்கிறது. மாநில அரசாங்கங்கள் வெறும் ஏஜெண்டுகளாக இருக்கிற காரணத்தால் தான். போடுகின்ற திட்டத்தையே அமுல் நடத்தாத நிலையில், ஏழைகளுடைய கண்ணீரைத் துடைக்க முடியாமல் இருக்கின்ற நிலையும் ஏற்படுகிறது. நம்முடைய கருத்தினை எடுத்துச் சொல்லத்தான் எழுச்சி நாளைக் கொண்டாடுகின்றோம். இதுவரை ஒரு சின்ன உயிருக்குக்கூட வேதனை விளைவிக்காதவரும், தீங்கு செய்யாதவருமான நமது அறிஞர் அண்ணா அவர்கள் இந்த எழுச்சி நாளில் எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு—எவ்விதத் தீங்கும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வார்கள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் உடையார்பாளையம் மிக பிற்போக்கான இடம். மாநில அரசு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ஒரு மருத்துவமனையைக் கட்ட 2 3/4 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரு திட்டம் தீட்டியிருந்தார்கள். அங்கே எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வெற்றி பெற்ற காரணத்தால், அந்தத் திட்டம் செயல் படுத்தப்படாமல் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். இது இவர்களுடைய பரந்த நோக்கத்திற்கு எடுத்துக்காட்டா என்பதை காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் திட்டத்திற்காக கொள்ளிடத்திலிருந்து ஜெயங்கொண்டபுரத்திற்கும், உடையார் பாளையத்திற்கும் நீர் கொண்டுவர ஒரு திட்டம் இருந்தது. அந்தப் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தவரே வெற்றி பெற்றுள்ளார் என்ற காரணத்திற்காக, அந்தத் திட்டம் இன்னும் அமுல் படுத்தப்படவில்லை. தமிழகத்தைச் சோழ மன்னன், ராஜேந்திர சோழன் ஆண்டபொழுது, தூர் எடுத்து, கரைகள் உயர்த்தப்பட்ட ஏரிகள் எல்லாம் இன்றைக்குத் தூர்ந்துபோய், கரைகள் உயர்த்தப்படாமல், கலிங்கல் ஒழுங்கு படுத்தப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இன்றைய சர்க்கார் எல்லா ஏரிகளையும் பழுது பார்த்து, தூர் எடுத்துக் கரைகளை உயர்த்தி, கலிங்கலை ஒழுங்கு படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கூறி, இவ்வளவு நேரம் வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. க. ர. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, இன்னும் சில வாரங்களிலே நம்முடைய தமிழகத்திற்குள் இலங்கைவாழ் இந்தியர்கள் வர இருக்கிறார்கள். மத்திய அரசு அதற்கான திட்டத்தை வகுத்து இலங்கை அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஐந்தரை லட்சம் பேரிலிருந்து, 6 லட்சம் பேர் வரையில் பத்தாண்டுக் காலத்திற்குள் இங்கு வர இருக்கிறார்கள். இப்போதிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம், பர்மாவிலிருந்து இங்கே வந்திருக்கக்கூடிய அகதிகள் பிரச்சினை. உள்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளைப் பார்க்கும்போது, இலங்கைவாழ் இந்தியர்கள் வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் பேர் என்ற



N67-5-4
65025



வீதத்தில் வந்தாலும் கூட அவர்களை வைத்துக் காப்ப[illegible] அரசுக்கு ஒரு பெரும் பாரமாகவே இருக்கும். இ[illegible] உதவி செய்யப்போவதாகத் தகவல் வந்திருக்கிற[illegible] உதவி [illegible] அளவுக்கு இருக்குமென்பதில் சந்தேகம்தான் ஏற்[illegible].

தமிழக அரசு இலங்கைவாழ் இந்தியர்களை[illegible] பொறுத்தவரையில் தேசம் பூராவும் பரவலாக—எங்கெங்கு புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் குடியேற்றப்[illegible]களோ, அம்மாதிரி—நில வசதி உள்ள இடங்களிலும் குடியேற்ற மு[illegible] செய்ய வேண்டும். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் $2\frac{1}{2}$ [illegible]ட்சம் [illegible]பேர், 3 [illegible] பேர் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பெய[illegible]ரப் [illegible] கொண்டிருக்கிறார்கள். இன்னும் கல்லூரியிலிருந்து [illegible]வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும்போது [illegible]க அரசுக்கு இது பெரும் பிரச்சினையாக இருக்கும். ஆகவே, இப்போதே திட்டமிட்டு, மத்திய அரசாங்கத்தோடு பேசி இலங்கை வாழ் இந்தியர்களை நிலம் அதிகமாக இருக்கக்கூடிய உத்திரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் குடியேற்றுவதற்கான வழி வகைகள் செய்வேண்டும். அந்த முயற்சியை இப்பொழுதே ஆரம்பிக்கவேண்டும். நாம் சும்மாயிருந்துவிட்டால், பர்மாவிலிருந்து வந்த அகதிகளைப்போல் தமிழ் நாட்டுக்கு அனுப்பிவிட்டால் அது தமிழக அரசுக்குப் பெரும் பாரமாகப் போய்விடும். ஆகவே, இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு வீடு இல்லாத பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது, ஹரிஜனங்களும், மற்றவர்களும் இன்று சுடுகாட்டிலும், இடுகாட்டிலும், ரோடு ஓரத்திலும், ஜனப் போக்குவரத்துத் தொல்லை கொடுக்கக் கூடிய இடத்திலும் கூட வாழ்ந்துகொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். முதலாவதாக, வீட்டுக்குத் தேவையான இடத்தை இந்த அரசாங்கம் கொடுப்பதற்கு ஒரு திட்டவட்டமான வரையறையை வைத்துக்கொண்டு ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஒன்று, ஹரிஜனங்கள், இரண்டாவது ஹரிஜனங்களல்லாத ஏழைகள். இவர்களுக்கு ஒரு வருட காலத்தில், இரண்டு வருட காலத்திற்குள் நாங்கள் வீடு கட்ட நிலம் கொடுக்கப்போகிறோம் என்று அறிவித்து அதற்கான விசேஷ பிரிவை ஏற்படுத்தி, குடியேற்றுவதற்கு இப்போதே ஏற்பாடு செய்வது நல்லது என்று கருதுகிறேன். இன்று கிராமங்களிலும், நகரங்களைப் போல வீடு இல்லாதவர்களின் பிரச்சினை மிகப் பயங்கரமாக வளர்ந்துகொண்டு வருகிறது. ஒரு வருட காலத்தில், இரண்டு வருட காலத்தில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள நிலம் பட்டா செய்து கொடுக்கப்படும் என்ற வாக்குறுதியும் கொடுக்க வேண்டும்.

சென்னை போன்ற நகரங்களில் வீடு கட்டுவதற்குத் தேவையான இடத்திற்கு என்ன செய்வது என்ற கேள்வி இருக்கிறது. வீடுகள் ஒன்றன்மேல் ஒன்றாகவும், பக்கவாட்டிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் கீழிருந்து மேலாக ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஒரு பத்து மைல், பதினைந்து மைல்களுக்கு அப்பால்தான் இடம் தேடிக் கொடுக்க வேண்டும். சென்னையிலேயே வீடு வேண்டும் என்று சிலர் விரும்புகிறார்கள். அவைகளை கட்டுவதற்கு இடம் இல்லாதது ஒரு குறை. இருந்தாலும் நாம் ஒரு சில இடங்களைத் தேடிப் பிடிக்கலாம். குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. அது சுமார் 100 ஏக்கர் இருக்கும். அடுத்தாற்போல் காஸ்மாபாலிடன் கிளப்—போலோ கிளப் என்று சுமார் 30 ஏக்கர் அளவு இருக்கும் என்று நினைக்கிறேன். வசதியுள்ளவர்கள் விளையாடுவதற்கும் பொழுதுபோக்குவதற்கும் இந்த நகரத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குதிரைப் பந்தயம் வேண்டாம்—காலத்திற்கு ஒவ்வாதது—தேவையில்லாத ஓட்டப் பந்தயத்திற்காக இருக்கும் நிலத்தை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து, ஜனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்,

அடுத்தாற்போல், இந்தக் கொள்முதலிலே ஒரே மாதிரியான முறையை அரசாங்கம் கையாண்டு வருகிறது. இதற்குப் பதிலாக எந்த அடிப்படையிலே நீர்ப்பாசனம் இருக்கிறதோ, அதையனுசரித்துக் கொள்முதல் செய்ய வேண்டும். தஞ்சாவூரிலே ஒரு ஏகரிலிருந்து மூன்று ஏகர் வரை 5 மூட்டை 3 முதல் 5 ஏகர் வரை 6 மூட்டை ; 6 முதல் 10 ஏகர் வரை 7 மூட்டை ; பத்து ஏகருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு அவர்களுடைய தேவை போக மீதி தானியம் எல்லாம் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு விதியை அனுசரிக்க வேண்டும். நீர்ப்பாசன வசதியைப் பொறுத்துக் கொள்முதல் இருக்க வேண்டும். கிணற்றின் மூலமாகவும், ஏரி குளங்களின் மூலமாகவும் நீர்ப்பாசனம் நடைபெறும் இடங்களில் கொஞ்சமாகவும், ஆற்றுப் பாய்ச்சல் இருக்கும் இடங்களில் கொஞ்சம் அதிகமாகவும் கொள்முதல் செய்வதில் பாகுபாடு இருக்க வேண்டும்.

(திரு எஸ். முருகையன் தலைமை)

மு. ப. 11-30 எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக, தஞ்சாவூர் ஜில்லாவில் இருப்பது போல் கோவை ஜில்லாவில் இருக்ககூடாது ; கோவையில் இருப்பதுபோல் சேலம் ஜில்லாவில் இருக்கக் கூடாது. காரணம், தஞ்சாவூரில் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமென்று சொன்னால், ஒரு ஆளை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யலாம். அதே சமயத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவில் கீழ் பவானி பகுதியை எடுத்துக்கொண்டால், ஒரு ஆளை வைத்துக்கொண்டு தண்ணீர் பாய்ச்ச முடியாது. குறைந்தது 3 ஆட்கள் தேவை. தண்ணீர் பாய்ச்சுகிற தலைமாட்டில் ஒருவர், மத்தியில் கால்கள் உடையாது பார்த்துக்கொள்ள ஒருவர், பாத்தியைத் திறந்து விட்டு மூட ஒரு ஆள் தேவை. ஆக மூன்று ஆட்கள் இல்லாமல் அங்கே வேலை நடக்காது. இதுபோன்று இங்கே அதிகச் செலவு ஆகிறது. ஆகவே அந்த அந்த இடத்திற்கு ஏற்ற அடிப்படையில் கொள்முதல் முறை இருக்க வேண்டும். இப்போது கொடுக்கிற விலையை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், ஒன்று, இன்றைக்கு விவசாயி நெல் மட்டும் பயிரிடுகிறான் என்றால், லாபத்தைப் பார்க்க முடியாது. ஆகவே நாம் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டாம். அவனுக்குத் தேவைப்படுகிற மற்றப் பொருள்களை ஒன்று குறைந்த விலையில் வாங்கிக் கொடுக்க வேண்டும் அல்லது அதற்கு மானியமாகக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை இந்தப் புதிய அரசாங்கம் செய்தாக வேண்டும். வேறு வழி கிடையாது.

அடுத்தபடியாக, ஜில்லாக்களில்—எப்படி ஓரிரு ஜில்லாக்கள் மிகப் பெரிய அளவில் இருக்கின்றன என்பது இங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம் போன்ற ஜில்லாக்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று முந்திய சர்க்கார் பரிசீலனை செய்தது. ஆனால் சேலத்தை மட்டும்தான் பிரித்தார்கள். மற்ற ஜில்லாக்களைப் பிரிக்கவில்லை. கோயம்புத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், என் ஊரில் இருந்து 100 மைல்கள் தாண்டி கோவைக்குப் போக வேண்டும். இன்றைக்கு மாவட்ட கலெக்டர்களுடைய நிர்வாகப் பொறுப்புகளும் அதிகமாக இருக்கின்றன. இப்போதே கோயம்புத்தூரை கிழக்கு, மேற்கு என்பதாக இரண்டு பகுதியாக நிர்வாக சௌகர்யத்தை உத்தேசித்துப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஆகவே கோயம்புத்தூர் மேற்குப் பகுதியை கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு ஜில்லாவாக்க வேண்டும். கோயம்புத்தூர் கிழக்கு பகுதியை ஈரோடு நகரைத் தலைநகராகக் கொண்டு ஒரு தனி ஜில்லாவாக்க வேண்டும். ஆக இப்படி கோயம் புத்தூர் ஜில்லாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக அந்தச் சட்டத்தை நல்ல முறையில் சீர்திருத்தி அமைக்கிறோமா, அவ்வளவுக்கவ்வளவு நிச்சயமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். புதிய அரசு ஜனங்களிடத்திலும் தங்கள் செல்வாக்கை அழுத்தம் திருத்தமாக பெற முடியும். பல இடங்கள் இன்றைக்குத் தரிசாகக் கிடப்பதைப் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி, பத்து அல்லது பதினைந்து



ஏக்கர் என்ற அடிப்படையில் புரட்சிகரமான ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, அதன் மூலம் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. வி, எஸ். கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் மொத்தத்தில் உங்களுக்கும் சேர்த்து, ஒரு படி திட்டத்தை ஏன் எல்லோருக்கும் கொடுக்கவில்லை என்பதாகக் கேட்டார்கள். அது ப்ற்றி பல முறை கேட்டிருக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் சொன்ன பிறகும் அதைப் பற்றியே மீண்டும், மீண்டும் அரைத்த மாவையே அரைப்பது போல் அந்தத் திட்டத்தை ஏன் பரவலாக்கவில்லை என்று கேட்கிறார்கள். அண்மையில் கூட சென்னையை ஒட்டிய வட்டாரங்களுக்கும், கோயம்புத்தூரை ஒட்டிய வட்டாரங்களுக்கும் அத்திட்டம் பரவாலக்கப்படும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் சொல்லிய பிறகும் அதை எடுத்துக் கேட்பது பொருத்தமாக இல்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காங்கிரஸ் ஆட்சியைப் போலத்தான் இருக்கிறது, அதை விடத் திறமையாக இல்லை என்று சொன்னார்கள். இதற்கு இரண்டு வகையில் பதில் சொல்ல முடியும். நண்பர் காங்கிரஸ் ஆட்சியைப்போல இன்றைய ஆட்சியும் இருக்கிறது என்று கூறுவார்களானால், அவர்கள் கட்சி ஆட்சி சிறந்தது அல்ல என்று மறுக்க மாட்டார்கள். அந்த வகையில் இந்தக் கட்சியின் ஆட்சியும் சிறந்ததுதான் என்பதை மறைமுகமாக ஒத்துக் கொள்வதாகத்தான் ஆகும். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் இன்றைய ஆட்சி காங்கிரஸ் ஆட்சியைப் போன்றதுதான் என்பதை ஒத்துக் கொள்ளத் தயாராய் இல்லை. முற்றிலும் மாறுபட்டது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலைமைகளுக்கும், இப்போதுள்ள நிலைமைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்துகொள்ள முடிகிறது. காங்கிரஸ் ஆட்சியில் தேசீயமயமாக்குவது பற்றிப் பேசப்பட்டது. பஸ்களைத் தேசீயமாக்கினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகும், இப்போது பஸ்ஸை தேசீயமாக்கியிருப்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பக்கம் தேசீயமாக்குவது என்றும், இன்னொரு பக்கம் லாபம் வரக்கூடிய பஸ் ரூட்டுகளை எல்லாம் தனியார்களுக்குக் கொடுத்ததும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட போக்கில் தான் சென்றார்கள் என்பது தெளிவாகிறது. வெறும் பேச்சில் இது எங்கள் கொள்கை என்று சொல்லிவிட்டால் போதாது. அது நடைமுறைக்கு வரச் செயல்பட்டாக வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் தேசீயமாக்கும் திட்டம் அரசாங்கத்திற்கு நட்டத்தையே கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. தி.மு.க ஆட்சி நட்ட ஈடு எதுவும் இன்றி நாட்டுடமையாக்க முடிவு செய்துள்ளது. எனவே காங்கிரஸ் தேசீயமயம் போலியானது, தி.மு.க. தேசீயம் உண்மையானது.

அடுத்து, அவர்கள் எல்லோருக்கும் பி.யு.சி. வகுப்பில் இலவசப் படிப்பை எல்லா மாணவர்களுக்கும் அளிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு நல்ல பலன் தரத்தக்க வகையில் ரூ. 1,500 வருமான வரம்புக்கு உட்பட்டு அளிப்பது என்று இந்த சர்க்கார் செய்துள்ளது. இலவசப் படிப்பு என்பது எல்லோருக்கும் என்பதை மேலெழுந்த வாரியாக ஜனநாயக வாதத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர, உண்மையான பயனை அது அளிக்காது. யாருக்கு அவசியமோ, யாருக்குத் தேவையோ அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்தாக வேண்டும். யாருக்கு நோயோ அவர்களுக்குத்தான் மருந்து தரப்படும். யார் பலகீனமாக இருக்கிறாரோ, அவருக்குத்தான் டானிக் தரப்பட வேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்த அரசு வருமான வரம்பை வைத்து அதற்கும், கீழே உள்ளவர்களுக்கும் சலுகை அளிப்பது என்பதாக முடிவு செய்திருக்கிறது. ஆக காங்கிரஸ் ஆட்சியை எடுத்துக்கொண்டால், அது வட துருவம்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தென் துருவம்தான். இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்டது என்பதை திரு. விநாயகம் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, எழுச்சி நாளைப் பற்றிக் கிளர்ச்சி நாள் என்று சொன்னார்கள். சேலம் இரும்பாலைத் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஒரு எழுச்சி நாளைக் கொண்டாடுவது என்பதாக ஆளும் கட்சியினர் நடத்தக் கூடாது என்று சொல்லுவது பொது இலக்கணம் அல்ல. பொது மரபு அல்ல. நியாயம் எதுவோ அதை வற்புறுத்த வேண்டியது ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் கடமை. நம்முடைய நியாயத்தை நிலை நாட்டுவதற்காக, நம்முடைய உரிமையைப் பெறுவதற்காக எந்த இடத்தில் இருந்தாலும், யாரிடத்தில் இருந்தாலும் ஜனநாயக முறைகளுக்குட்பட்டு கேட்பது எந்த வகையிலும் குந்தகம் அல்ல. தவறும் அல்ல.

சேலம் உருக்காலைத் திட்டமும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் இன்று நேற்று வந்ததல்ல. மதிப்பிற்குரிய திரு, சி. சுப்பிரமணியம் அவர்கள் இரும்பு மந்திரியாக இருந்த காலத்திலேயே உருவான பிரச்சினை. அதற்குப்பிறகு திரு. சஞ்சீவிரெட்டியார் அவர்கள் காலத்தில், அது வேறு உருவம் எடுத்தது. தென் மாநிலங்களில் உள்ள மூன்று மாநிலங்களுக்கிடையே ஒரு போட்டி உணர்வை வளர்க்கும் வகையில் உருவம் எடுத்து, பிறகு பொக்காரோ திட்டத்தை நான்கு பங்காகப் பிரித்து, மூன்று பங்குகளை தென் மாநிலங்களுக்குத் தந்துவிட்டு, ஒன்றை பொக்காரோவிற்கு வைத்துக்கொள்ளலாம் என்ற சமரச திட்டத்தைக் கொடுத்த பிறகும், மத்திய சர்க்கார் மந்தப் போக்கு காட்டுகிறதென்றால், அக்கறையற்ற தன்மையைக் காட்டுகிறதென்றால், தட்டிக் கேட்கும் பொறுப்பு, அவர்களுடைய கடமையை உணர்த்தும் பொறுப்பு, நம் உரிமையைக் கோரும் பொறுப்பு நிச்சயமாக இந்த மாநில சர்க்காருக்கு உண்டு. ஆகையினால்தான், ஆளும் கட்சியே இந்தப் பிரச்சினையை எடுத்து, ஒரு எழுச்சி நாள் கொண்டாட இருக்கிறது. எழுச்சி என்பது வேறு. கிளர்ச்சி என்பது வேறு. நீண்ட காலமாக மக்கள் மன்றத்தில் எழுச்சி என்பது இருக்கும் ஒரு பிரச்சினை இது. அவர்கள் அதைக் கொஞ்சம் இடையிலே மறந்துவிட்டிருக்கிற காரணத்தினால், கடந்த கால அரசு அடிக்கடி வாக்குறுதியைக் கொடுத்துக்கொண்டே காலம் கடத்திய காரணத்தினால், இடைக்கும், கிடைக்கும் என்று எண்ணி, அந்த எண்ணத்தைச் சாதாரணமாக ஆக்கிக்கொண்ட காரணத்தினால், அந்த எண்ணத்தை மீண்டும் உள்ளத்திலே எழுப்பி, அந்த உணர்ச்சியை ஊட்டி, அவர்களிடத்தில் எழுச்சியை ஏற்படுத்துவதுதான் இதனுடைய நோக்கம். எழுச்சியென்றால் கட்டுக்கடங்காமல் போய்விடும், ஏதேதோ நடந்துவிடும் என்பது கனம் உறுப்பினருடைய கற்பனை எண்ணங்களாக இருக்கலாமே தவிர, நாட்டின் நடைமுறை அல்ல.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் ஒரு சீரிய தலைமையில்—அறிவும் ஆற்றலும் திறமையும் பெருந்தன்மையும் ஒருங்கே பெற்றுள்ள ஒரு மாபெரும் தலைவராக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில்—இயங்குகிறது. இந்த இயக்கம் நிச்சயமாக, எங்கும், எந்த விதத் தொல்லையும் இல்லாமல், எந்தவித இடையூறும் இல்லாமல் நடைபெறும். அது மாத்திரமல்ல. எங்களோடு சார்ந்திருக்கிற கூட்டணிக் கட்சிகள் அத்தனையும் ஒத்துழைப்பு தருகின்றன. காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் "கலந்துகொள்ள மாட்டோம்" என்கிறார்கள். அதை நண்பர், உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். யார் கலந்துகொள்ளுகிறார்கள், யார் கலந்து கொள்ளவில்லை என்பது பற்றி கழகம் கவலைப்படவில்லை. அது அவரவருடைய விருப்பம். ஆனால், மக்கள் கணக்குப் போட்டுக் கொள்ளுவார்கள். நமக்குத் தேவையான சேலம் இரும்பு உருக்காலையை மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்காக இந்த நாட்டிலிருக்கும் எல்லாக் கட்சிகளும் போராடியபோது, எடுத்துக் கேட்டபோது, ஒதுங்கியிருந்த ஒரே ஒரு கட்சி—தமிழகத்திற்குத் துரோகக் கட்சி—எது என்று மக்கள் மன்றத்திலே அவர்கள் தீர்ப்பளிப்பார்கள். அது எதிர்காலத்தில் அவர்களுக்குத் தெரியும். ஆகவே "ஒத்துழைக்கமாட்டோம்"; "கலக்கமாட்டோம்" என்பதைப்பற்றிக் கழகம் கவலைப்படவில்லை. ஆனால், எங்களுடைய கடமையை அதற்காகச் செய்யாமல் இருக்க முடியாது. நிச்சயம் அது நடந்தே தீரும். சேலம் இரும்பு உருக்காலையைப் பெற்றே ஆகவேண்டும்.





அந்த எழுச்சி நாள் எல்லா வகையிலும் நியாயமானது என்பதை இன்றைய தினம் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புஞ்சைக்குவரி விலக்கு செய்திருப்பதைப்பற்றி அவர்கள் சொன்னார்கள், அதுவும் எங்கள் கட்சியிலே தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொன்னதுதான் ஆகையால், இவர்களும் சொல்லுகிறார்கள்" என்கிறார்கள். இருக்கும் காங்கிரஸ் இயக்கத்தை சேர்தவர்கள் அதற்கு மாறுபட்ட அந்தப் புஞ்சை நில வரி விலக்கு கூட, வட மாநிலங்களில் கருத்துக்கள் தெரிவித்து, அதிலே கூட சிக்கல் இருந்து, இன்னும் திட்டவட்டமாக அவர்கள் முடிவு எடுக்கவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது 1964-ம் ஆண்டிலேயே, மதுரையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதை முன்மொழிந்தவர் இங்கேயுள்ள சட்ட மன்ற உறுப்பினர் திரு. வி. எஸ். எஸ். மணி ஆவார். நான் அதை வழிமொழிந்திருக்கிறேன். முன்னேற்றக் கழகம் காங்கிரஸைப் பார்த்து அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்ததாகச் சொல்லுவது, தங்களைத் தாங்களே கற்பனையில் உயர்த்திக்கொள்ளுவதாக ஆகுமே தவிர, முன்னேற்றக் கழகம் அப்படியல்ல. தங்களுக்குச் சரி என்று எதை நினைக்கிறதோ, மக்களுக்கு நன்மை எது என்று தோன்றுகிறதோ, அத்தனை காரியங்களையும் திட்டவட்டமாகச் செய்யவேண்டும் என்ற கடமையுணர்ச்சியோடுதான் இந்த நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதைக் கூறி, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. பி. எஸ். எல்லப்பன் :** கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். எப்படிப் பேசினாலும், எதைப் பேசினாலும் இது பாஸ் ஆகிவிடும். அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில விஷயங்களை நான் இங்கே சொல்லியாகவேண்டும்.

முக்கியமாக, அடுத்த வருஷத்திலே மூன்று படி அரிசி இந்த சர்க்கார் கொடுக்கவேண்டும் என்ற திட்டம் இருந்தால், நான் சொல்லுகிற படி செய்யலாம். மூன்று படி அரிசி ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும். என்ன, ஐயா, அப்படித் திட்டம் கண்டுபிடுத்துவிட்டாய் ? என்று நீங்கள் நினைக்கலாம். கேட்கவும் கேட்கலாம். என்னுடைய திட்டத்தை நான் சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியாகிய மதுராந்தகத்தில் சர்க்காருக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு இருக்கிறது, அந்த நிலத்தில் முதலாளிகள் எவ்வளவு வைத்துக்கொண்டிருக்கிறார்கள், மிச்சம் எவ்வளவு இருக்கிறது என்பதையெல்லாம் ரெவினியூ அதிகாரிகளைக் கொண்டு கணக்கிட வேண்டும். தாலூகா அளவில் உடனே ஒரு கமிட்டி போட்டாவது இதைச் செய்யவேண்டும். ஒவ்வொரு தாலூகாவிலும், நிலம் எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு கொடுக்கலாம் என்பதைக் கணக்கெடுத்தால் திட்டம் போட்டால், எல்லா நிலங்களும் விவசாயத்திற்கு லாயக்குள்ளதாகவே இருக்கும். அத்தகைய நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். அப்படியெல்லாம் செய்யாமல், புத்தகத்தில் லட்சம், ஆயிரம் என்று எழுதி வைத்துவிட்டு, அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்லிவிட்டால் போதாது. சொன்னால் போதுமா ? செய்தால் தீருமா ? என்பது பழமொழி. முன்பு இருந்தவர்கள், "ஆகட்டும் பார்க்கலாம்". "ஆகட்டும் பார்க்கலாம்" என்றார்கள். இப்பொழுது இருக்கிறவர்கள், "ஆய்ப் போச்சு, அடுத்த பிளாக்குக்கு வாங்க" என்கிற மாதிரி காரியத்தை நடத்தவேண்டும். (சிரிப்பு)

என்னுடைய தொகுதியில் $24\frac{1}{2}$ கிராமங்கள்–இடைக்கழி நாடு–புயலால் பாதிக்கப்பட்டு, மரங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அந்த நாடே நாசமாகப் பாழாய் போய்விட்டது. இதை அமைச்சரும் வந்து பார்த்தார்கள். அந்த நாட்டிலே ஏரி கிடையாது. மடு கிடையாது பெரிய குளம் கிடையாது. எல்லாம் வாஞ்சி—குட்டை குட்டையாக—இருக்கும். வாஞ்சியினுடைய தண்ணீரைக் கொண்டுதான் சிறிய சிறிய விவசாயிகள் எல்லாம் பிழைக்க வேண்டும். நவம்பரில் அடித்த புயலி

னால் வாஞ்சி பூராவும் தூர்ந்து போய்விட்டது. எக்ஸிக்யூடிவ் இன்ஜினீரோ, யாரோ என்று சொல்லுவார்கள் —பெயர் கூட வாயில் நுழையவில்லை— அந்த இன்ஜினீர்களை தனியாக அந்த $24\frac{1}{2}$ கிராமங்களுக்காகவே போட்டு, அங்குள்ள வாஞ்சிகளையெல்லாம் தூர் எடுத்து, விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், விவசாயம் அங்கே நடக்கும். அதை அவசியம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

616 ஏக்கர் கரும்பாக்கத்தில் அருமையான நஞ்சை நிலம் இருக்கிறது. அதில் தைலக் கன்றுகளை நட்டு வைத்திருக்கிறார்கள். தைல மரம் அங்கே எதற்கு ? நீலகிரி ஜில்லா பூராவும் தைல மரம். கோடைக் கானல் பூராவும் தைல மரம். கோயம்புத்தூர் பார்டரில் தைல மரம். எதற்காக மதுராந்தகத்தில் தைல மரம் ? தைலமா வயிற்றுக்குச் சோறு போடும் ? அதுவா வயிற்றுப் பசியை ஓட்டும் ? அங்கே 616 ஏக்கர் நஞ்சை நிலத்தில் தைல மரத்தைப் போட்டிருக்கிறார்கள். அமைச்சர் கூட காரில் வருகிறபோது பார்த்திருக்கிறார். இதே மாதிரி நமக்கு நஷ்டம் வருவதெல்லாம் சர்க்காரால்தான். சர்க்கார் சரிவர நிர்வாகத்தை நடத்த வில்லை. நிலத்தைச் சரியாக விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. அவனுக்கு வேண்டிய உதவி செய்யவில்லை. ஆகையால்தான் இந்தப் பஞ்சம் இப்படி வருகிறது. எந்த எந்த இடத்தில், எதை எதைச் செய்யவேண்டுமோ, எதை எதைச் சம்சாரிக்கு முதலில் செய்யவேண்டுமோ, அதைச் செய்யவில்லை.

ஒரு விவசாயி ஒரு நிலத்தில் பயிரிட்டான் என்றால், உடனே தாசில்தார் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன் என்றெல்லாம் புகார் போகிறது. ஏதாவது ஒரு நிலத்தில், அதுவும் சும்மா கிடக்கும் நிலத்தில், ஒருவன் விவசாயம் செய்துவிட்டான் என்றால், அவனை முதலில் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுவந்து ஸ்தாபிதம் பண்ணுவது என்ற நிலை இருக்கிறது. முதலாளி என்ன சொல்லுகிறார் ? பட்டா நிலம், சமுதாயத்திலே இருக் கிற நிலம். அதை இவன் உழுகிறான் என்று சொல்லிவிட்டால் போதும். உடனே, அவனுக்கு எத்தனையோ கஷ்டங்கள். நிலத்தில் பாடுபடக்கூடிய விவசாயியை, அதில் பயிரிடக்கூடாது என்று தடுத்தால், அவன் மகசூலை எப்படி அபிவிருத்தி பண்ண முடியும்? மகசூலை அபிவிருத்தி பண்ணவேண்டுமே, பஞ்சம் வந்திருக்கிறதே, அன்னிய நாட்டைக் கேட்டுப் பிச்சை வாங்குகிறோமே, நம் நாட்டில் இருக்கும் பொருளை நாமே அபிவிருத்தி செய்யலாமே என்ற எண்ணம் இல்லாமல், அங்கே போய் முதலாளி ஏதாவது சொன்னால் போதும், உடனே விவசாயி மீது கேஸ் போடுவது என்ற நிலைதான் நடந்துகொண்டிருக்கிறது.

சூணாம்பேட்டில் ஏழு கிராமங்கள். அது தரும சொத்தாம். யாரோ நவாப் கொடுத்துவிட்டானும் இனாமாக. 52 ராஜாக்கள் இருந்தார்கள், அவர்களையே போகச் சொல்லிவிட்டோம். அவர்களுடைய நிலங்களெல்லாம் கூட யூனியனுக்கு வந்தாச்சி. ஆனால், மேற்படி கிராமத்தில், காலி நிலத்தை விவசாயம் செய்தார்கள் என்பதற்காக 13 பேர்களை ஜெயிலில் போட்டிருக்கிறார்கள். விவசாயிக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய் கிறோம் என்றெல்லாம் எல்லோரும் பேசுகிறோம். உழவேண்டும், இதைப் பண்ண வேண்டும், அதைப் பண்ணவேண்டும் என்றெல்லாம் இங்கே பேசுகிறோம். ஆனால், அங்கே போய்ப் பார்த்தால், விவசாயம் செய்தவர் கள் எல்லாரும் ஜெயிலில் இருக்கிறார்கள். அங்கே போய்ப் பேச ஆள் இல்லை. தாசில்தார், கலெக்டர் எல்லாம் ஆட்சியின் கையில்தானே இருக்கிறது. இவர்கள் எல்லாம் என்ன பண்ணுகிறார்கள் ? விவசாயம் பண்ணுகிறவர்களைப் பிடித்துக்கொண்டு போய், ஜெயிலில் கொண்டு போடு கிறார்களே. இதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர, கேட்க ஆள் இல்லை. எனக்கு ரொம்பக் கோபம் வருகிறது. என்ன செய்வது ? அந்தமாதிரி சமாசாரம் எல்லாம் நடக்கிறது. கவனிப்பதில்லை. ஆகை யால், இதில் எல்லாம் அரசு கண்டிப்பாகக் கவனம் செலுத்தவேண்டும்.

தேவஸ்தான நிலமாம். கடவுள் பொதுவானவர். மக்கள்தான் அயோக்கியத்தனம் பண்ணுகிறான் என்றால், கடவுள் என்ன பண்ணுவார்? கடவுளுக்கு எல்லாரும் குழந்தைகள்தான், அவருக்கு எல்லாரும் ஒன்று



என்றுதான் புராணத்தில் சொல்லுகிறார்கள். வள்ளலார் என்ன சொன் னார் ? " பெரிய புராணத்தைப் படிக்காதே, இராமாயணத்தைப் படிக்காதே, பசியாய் இருக்கிறவன் முகத்தைப் பார் " என்று சொன்னார். "பசித்தவன் முகத்தைப் பார், அவனுக்கு வேண்டியதைச் செய்" என்று சொன்னார். அவர் சொன்னார். என்ன ஆயிற்று ? (சிரிப்பு) சுவாமி விவேகானந்தர் கோடீசுவரனைப் பார்த்து, "உனக்கு எது தேவையோ அதை வைத்துக் கொள், அதற்கு மேலும் கொஞ்சம் வைத்துக்கொள், மிச்சத்தை வேண்டிய வனுக்குக் கொடடா, வாரி இறைடா" என்று சொன்னார். யார் கேட்கிறான் ? (சிரிப்பு).

சர்க்காருக்குச் 'சொந்தமான நிலத்தையே விடமாட்டேன் என்கிறார் களே, கையில் இருந்தா மற்றவர்கள் கொடுப்பார்கள் ? கனம் அமைச்சர் களாகிய உங்களை நான் கையெடுத்துக் கும்பிடுகிறேன். ஒரு கமிட்டி போட்டு, இருக்கும் நிலத்தை உடனடியாக வரவு செலவு செய்து, ஏழை களுக்குக் கொடுத்துவிட்டு மறு வேலை பாருங்கள். அடுத்த வருஷமே ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியும் என்று நான் சொல்லு கிறேன். இப்பொழுது மூன்று மாதங்களுக்கு ஒரு மழை பெய்கிறது. உங்கள் அதிர்ஷ்டம் (சிரிப்பு) முன்பெல்லாம் சொல்லுவார்கள், மாதத் திற்கு மூன்று மழை என்று. இப்பொழுது என்னவென்றால், மூன்று மாதத்திற்கு ஒரு மழை பெய்கிறது. அதிர்ஷ்டம் அடிக்கிறது. (சிரிப்பு) ஆனால், நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இதைச் செய்தால், அவர்கள் என்ன சொல்லுவார்களோ, அதைச் செய்தால் இவர்கள் என்ன சொல்லுவார்களோ என்று நினைக்காதீர்கள்.

அவர்கள் ஏதோ சொல்லுகிறார்கள். அவர்கள் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒருவன், இதோ இந்த வீட்டில்தான் நான் வாழ்ந்தேனப்பா, என்னுடைய பெரிய பையன் இந்த வீட்டில்தான் பிறந்தான், என்றெல்லாம் சொல்லத்தான் செய்வான். அவன் நன்றாக வாழ்ந்தவன். அப்படித்தான் சொல்லுவான். ஆகவே அவர்களும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆகவே என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், சாண் நிலம் கூட சும்மா கிடக்கக்கூடாது. தாசில்தார்களுக்கு எல்லாம் தண்ணீர் காட்டவேண்டும். சவுக்கு ஒன்று வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் சொல்வதால் அடிக்கவேண்டு மென்று சொல்லவில்லை, அதை வைத்துக்கொண்டு அவர்களை நல்ல முறையில் வேலை வாங்கவேண்டும். தாசில்தாரிடம் போய், ஒரு மனுப் போட்டிருக்கிறேன் என்று கேட்க ஆரம்பித்தால், போய்யா, என்று சொல்லக் கூடிய அளவிலே நம்மைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டேன் என்கிறார்கள். ஆகவே அந்தமாதிரி எல்லாம் இருப்பதை மாற்ற வேண்டும். இந்த அமைச்சரவை எல்லாவற்றிலும் தீவிரமாக இருக்கிறார்கள். இந்த ராஜ் யத்தை நல்லவிதமாக நடத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மாற்றிச் சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நாம் அதைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. மக்கள் ஆதரவு நமக்கு இருக்கிறது. ஆகவே நிலத்தை சும்மா போடக்கூடாது. ஏழைகளுக்கு $\frac{1}{4}$ காணி என்று கொடுத்தால்கூட போதும், 5 ஏக்கர்கள் என்ற அளவிலே கூட கொடுக்க வேண்டாம். ஆளொன்றுக்கு $\frac{1}{4}$ காணி என்ற அளவிலே கொடுத்தால், நமக்கு க்ஷேமம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது புயலால் பாதிக்கப்பட்ட ஏரிகளை எல்லாம் என்ஜினியர்கள் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எந்த ஏரிகள் அப்படிக் கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்று விவரமாகத் தகவல் சொன்னால்—நம்முடைய நீர்ப்பாசன இலாகா அமைச்சர் அவர்கள் இது விஷயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடுமையான உத்திரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே தாமதம் அதிலே இருந்தால், அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் தலைவர் அவர்களே, பொதுவாக நாட்டிலே இருக்கிற வறுமை தீரவேண்டுமானால், நாட்டிலே பொருள் உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல் நாட்டிலே பொருளாதார

சமத்துவம் ஏற்படுவதற்கு நல்ல வழிமுறைகளைக் கையாளவேண்டும். அதுதான் உண்மையான சோஷலிஸம். அந்த சோஷலிஸத் தத்துவம் தான் வறுமையைப் போக்கும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் பல வருடங்களாக சோஷலிஸம்தான் லட்சியம் என்று பல்வேறுகப் பேசினலும்கூட அவர்களுடைய போக்கு நாட்டிலே உணவுப் பெருக்கத்தை ஏற்படுத்தி நாட்டிலே உள்ள சாதாரண மக்களுக்கு கிடைக்காத நிலை இருந்தது என்ற உண்மை உணரப்படுகிறது. நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எவ்வளவு பெரிய திட்டங்களைப் போட்டாலும், அதன்மூலம் உற்பத்தியாகிற செல்வம் சாதாரண மக்கள் கைகளுக்குக் கிடைக்கச்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக இந்த நாடு விவசாய நாடு, இந்திய நாடு விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய நாடு. இந்நாட்டிலே பெரும்பாலான பேர்களுக்கு நிலம் கிடையாது. அம்மாதிரி நிலம் இல்லாத தொழிலாளர்களுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இன்று நாட்டிலே சுதந்திரமாக ஒவ்வோரு மனிதனும் இருக்கவேண்டும். ஆனல் அப்படியில்லாமல் கொஞ்சம் கூட சுதந்திரமில்லாத நிலைமையில் விவசாயிகள் இந்த நாட்டில் இருக்கிருர்கள். கடந்த கால அரசாங்கத்தில் இருந்தவர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்க திட்டத்தை வைத்திருந்தார்கள். ஆனல் எந்த அளவுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதனல் எவ்வளவு பேர்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப பார்த்தால், மிகக் குறைந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. மீதியிருக்கக்கூடியப் பெரும்பாலான ஹரிஜன மக்களுக்கு இன்னும் மனைக்கட்டுகள் கிடைக்கவில்லை என்ற அவலமான நிலைதான் இருக்கிறது. ஹரிஜனங்கள் அல்லாத விவசாயத் தொழிலாளர்கள் நிலைமையைப்பற்றி கவலைப்படுவது கிடையாது. இந்த ஆட்சியை ஏற்படுத்துவதற்குப் பெரும்பங்கு எடுத்துக்கொண்ட இந்த நாட்டு மன்னர்களாக இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சம் மனைக்கட்டுகள் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஹரிஜனங்களுக்கு மட்டுமலாமல், நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மனைக்கட்டுகள் கொடுக்கவேண்டும். அப்படிப் போடப்படுகின்றபொழுது 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்ற அதிக கால அளவிலே திட்டம் போடாமல், குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றக் கூடிய அளவிலே திட்டம் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறுநில விவசாயிகளை எடுத்துக்கொண்டால், கட்டுப்படியாகாத நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக நிறையப்பேர்கள் இருக்கிருர்கள். அவர்கள் ஒரு விவசாயத் தொழிலாளருடைய நிலையிலே இல்லாமலும், தேவையான வருவாயைப் பெறுகிற நிலையிலே இல்லாமலும், ஒரு இரண்டுங்கெட்டான் நிலையிலே இருக்கிற நிலையிலே, அப்படிபபட்ட குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்குத் திட்டமிட வேண்டும். அவர்களுக்கு வேலை இல்லாத காலத்தில் சிறு தொழில்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே இப்படிப்பட்ட திட்டம் இருந்தாலும் அதுபோதுமான அளவுக்கு இல்லை. ஆகவே கிராமங்களிலே சிறு தொழில்கள் பயிற்றுவிப்பதற்கு அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை போன்ற ஜில்லாக்களில் விவசாயம் அதிகமாக உள்ள ஜில்லாக்களிலே சாகுபடியாகின்ற நேரத்திலே அறுவடைக் காலங்களிலே போதுமான ஆட்கள் கிடைக்க வசதியில்லை. இப்பொழுது நமக்கு ஆர்கானிக் மேன்யூர் கிடையாது. அதாவது இயற்கை உரங்கள் கிடையாது. எல்லாம் கெமிக்கல் மேன்யூர்தான், இரசாயன உரங்கள், செயற்கை உரங்கள்தான். இதைமட்டும் வைத்துக்கொண்டு விவசாயத்தை பெருக்கமுடியாது. இயற்கை உரங்கள், தழை போன்ற உரங்களைத் தயாரிப்பதற்கு பல இடங்களில் ஏற்பாடு செய்ய வேண்டும். உழுதுதான் விதைக்க வேண்டும். அப்பொழுதுதான் ஈரமிருக்கும்பொழுதே, விதைக்கமுடியும். அப்படிச் செய்வதற்கு அந்த காலத்திலே ஆட்கள் கிடைப்பது கிடையாது. ஆகவே காலத்தோடு உழுவதற்குவேண்டிய வசதி



கள் இல்லாத காரணத்தாலே, டிராக்டர்கள் போன்ற இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்யவேண்டியது அவசியம். பெரிய டிராக்டர்கள் வைத்துக் கொள்வதற்கு சிறு விவசாயிகளுக்குப் போதுமான பண வசதி இல்லை. ஆகவே பவர் டில்லர்களை உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். பெரிய டிராக்டர்கள் உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலைகள் இருந்தாலும் கூட, சிறிய விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய வகையில் பவர் டில்லர்களை அவர்களுக்குக் கொடுபபதற்கு தொழிற்சாலையை அரசாங்கமே ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, இரிகேஷனை எடுத்துக்கொண்டால், நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொண்டால் நமக்கு இருந்த பெரிய நீர்ப்பாசன வசதிகளை நாம் பூர்த்திசெய்துவிட்டோம். இனிமேல் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரைத்தான் நாம் நம்பித் திட்டங்கள் போடவேண்டிய நிலையில் இருக்கிறோம். எங்கெங்கே பூமிக்கடியில் அதிகமாகத் தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க மத்திய அரசிலே ஒரு செல் வைத்திருக்கிருர்கள். அவர்கள் எல்லா ராஜ்யங்களிலும் அந்த ஆராய்ச்சியை நடத்தவேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) கட்சித் தலைவர் என்ற முறையில் எனக்கு அதிகமாக நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே நம்முடைய ராஜ்யத்திற்குத் தனியாக ஒரு செல் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளைப் பொறுத்தவரையில் இன்ஷூரன்ஸ் மிக மிக அவசியம். அதைச் செய்தால்தான் நல்லது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், நோய் கண்டு ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துவிட்டன. அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே 220 கால்நடைகள் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்கள். அவர்களுக்குத் தவறுன தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, உண்மையிலே ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்திருக்கின்றன. கால்நடைகள் இப்பொழுது போதுமான அளவு கிடையாது, எப்படி உழவு செய்யமுடியும் ? ஆகவே கால்நடைகள் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு கடன் வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். இப்பொழுது விதைகாலம் வந்துவிட்டது, தண்ணீர் வந்துவிட்டது, மாடு வேண்டும், ஆகவே மாடுகளுக்காக உடனே கடன்வசதிகள் கொடுக்கவேண்டும். பொறுக்கு விதைகளைப் பொறுத்தவரையில் அவை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு மிகமிக அவசியம். அரசாங்கப் பண்ணைகளிலே இருந்து கொடுத்த விதைகள் பிரைமரி விதைகளாக இருந்தன. ஆனல் தனியார்கள் கொடுத்த விதைகள் எல்லாம் நல்லவையாக இல்லை, செகண்டரியாக இருந்தன. ஆகவே அப்படியில்லாமல் அரசாங்கமே பண்ணைகளை வைத்து விதைகளை விவசாயிக்கு நல்லதரமான முறையில் கொடுக்க வேண்டும். கிராம சகாயக்குகள் என்று இருப்பவர்கள் தேவையில்லாமல் இருக்கிருர்கள். அதனல் பணவிரயம் ஏற்படுகிறது. ஆகவே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டும். அதற்குப் பதிலாக ஒரு சீட் கார்ப்பரேஷன் அரசாங்கமே ஏற்படுத்தி நல்ல விதைகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு, பிரைமரி சீட்ஸ் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். இதைச் சர்க்கார் ஒரு கார்ப்பரேஷன் மூலம் செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, பிரைமரி சீட்ஸ்-ஐ சர்க்கார், கார்ப்பரேஷன் மூலமாக வழங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல் விலை 26 ரூபாயாக இருக்கும்போது சர்க்கார் விற்கக்கூடிய விதை
நெல் 39 ரூபாயாக இருக்கிறது. 13 ரூபாய் அதிகமாக விற்க வேண்டிய
காரணம் என்ன ? இதை இன்னும் குறைந்த விலையில் கொடுக்க அர 2 00
சாங்கம் முயற்சிக்க வேண்டும். ஏன் அவ்வாறு விலை நிர்ணயிக்கப் பி ப
பட்டிருக்கிறது, என்ன தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

உரத்தை எடுத்துக் கொண்டால், சூபர் பாஸ்பேட் 44 ரூபாய்க்கு விற்கச் சொல்லியிருக்கிருர்கள். தனிப்பட்ட வியாபாரிகள் 39, 40 ரூபாய் அளவில் விற்கிருர்கள் ; ஆனல் கூட்டுறவுச் சங்கங்களில் 44 ரூபாய்க்கு

விற்கிறார்கள். இது கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருக்கக்கூடிய நிலைமை. ஏன் இந்த மாதிரி அதிகமான விலையில் கூட்டுறவு சொசைட்டியில் விற்கப்படுகிறது என்பதற்கான காரணத்தைக் கேட்கும்போது மூன்று விதமான ஏஜண்டுகள் கை மாறி வர வேண்டியிருப்பதால், ஜில்லா லெவல் சொசைடி, மார்க்கெட்டிங் சொசைடி, ரூரல் சொசைடி என்று கை மாறி வருகிறபோது, டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் எல்லாம் சேர்த்து மிக அதிகமான விலைக்கு வருகிறது. சொசைட்டியிலே கடன் கொடுக்கிறார்கள் என்பதற்காக ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டியது அவசியந்தானா? ஆகவே, நியாயமான விலையில் கொடுக்க நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் கால்நடைகள் சாகும்போது அவற்றின் எலும்புகள் வீணாக்கப்படுகின்றன. "போன் மீல்" ரொம்ப அவசியமானது. அவற்றையும் பயன்படுத்தி நல்ல முறையில் உரம் அளிப்பதிலே கவனம் செலுத்த வேண்டும்.

புறம்போக்கு நிலங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். பெரிய மிராசுதார்களிடத்தில் எல்லாம் நிறைய புறம்போக்கு நிலங்கள் இருப்பதாக அறிகிறேன். அப்படி உள்ள புறம்போக்கு நிலங்களை எல்லாம் எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவில் பாப்பாநாடு என்ற பகுதியில் போராட்டம் நடத்தி இந்த மாதிரிப் புறம்போக்கு நிலங்களை மீட்டு இருக்கிறோம். ஐந்து ஆண்டுகள் ஆகியும் விவசாயிகளுக்கு அசைன்மெண்ட் செய்து கொடுக்கப்படவில்லை. கடந்த அரசாங்கத்தின் நடப்பு அது. இந்த அரசாங்கம் உடனடியாக நிலம் இல்லாத ஏழைகளுக்கு அசைன்மெண்ட் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்....................(மணி அடிக்கப்பட்டது.)

***திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தின் வருமானம் ஆண்டுக்கு 216 கோடி ரூபாய். அதிலே 56 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து நமக்கு வருகிறது. 100-க்கு 25 சதவிகிதம், கால் பங்கு மத்திய சர்க்காரிடத்தில் இருந்து உதவித் தொகையாகவோ, வரிப் பங்காகவோ வருகிறது. நிதி ஒதுக்க மசோதாவின் மீது மேலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொற்கொல்லர்களுக்கு "**Loans to four Industrial Co.operative Societies for Goldsmiths at Madras, Madurai, Tiruchirappalli and Coimbatore**" இந்த இனங்களுக்குச் சென்ற வருஷத்தில் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த வருஷம் எதும் ஒதுக்கப்படவில்லை. பொற்கொல்லர்களுக்கு 17 லட்சம் ரூபாய் சென்ற வருஷம் ஒதுக்கப்பட்டு இருந்தும் இந்த வருஷம் 100 ரூபாய் டோக்கனை ஒதுக்கியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய கடன் வசதிகள் குறைக்கப்பட்டால் அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள் தடைப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

டோபி கானாவுக்காகச் சென்ற ஆண்டு 80,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது 2,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சலவைத் தொழிலாளர்கள் கஷ்டப்படுவார்கள். "**Advances to the Madras State Handloom Weavers' Co-operative Societies for procurement of handloom cloth from Primary Weavers' Co-operative Societies**". சிறிய கூட்டுறவு கைத்தறியாளர்கள் நெய்யும் உடைகளை வாங்குவதற்காகப் பெரிய கோவாப்பரேடிவ் சொசைட்டிகளுக்குச் சென்ற வருஷம் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தோம்; இப்போது ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. இதனால் நெசவுத் தொழில் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படும். இது கைத்தறியாளர்களுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியம் அல்ல. "**Loans to Industrial Co-operative Societies for running a gold refinery at Madras**".





முன்பு இரண்டு லட்சம் ரூபாயாக இருந்தது; இப்போது ஒரு லட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பர்மாவில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்குக் கொடுக்கக் கூடிய கடனுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சென்ற ஆண்டு 53 லட்சம்; இந்த வருஷம் 20 லட்சம் தான். 33 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது; இதுவும் நல்லதல்ல.

சேலம் ஜில்லாவில் "**Reclamation of waste land**" என்பதற்காக 1,80,000 ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது; இந்த ஆண்டு 100 ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. "**Loans to Co-operative Labour Contract Societies**". 1,55,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது; இந்த ஆண்டு எதுவும் ஒதுக்கப்படவில்லை.

"**Loans to Co-operative Societies for Barbers**" அதாவது நாவிதர்கள் என்று தமிழிலே சொல்லப்படுபவர்களுக்காக சென்ற ஆண்டு ஒரு லட்சம் ரூபாய் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது; இந்த ஆண்டு ஒதுக்கப்படவில்லை.

"**Loans to Tamil Writers' Societies**" தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்திற்காகச் சென்ற ஆண்டு 10,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு எதுவும் ஒதுக்கப்படவில்லை. தமிழுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும், ஆக்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலையில் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு 10,000 ரூபாய் ஒதுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

"**Loans to Consumers' Co-operative stores for stabilisation of prices**" என்பதற்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 28,87,000; இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய்தான். இதனால் 21 லட்சம் ரூபாய் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளுக்குக் கிடைக்கக்கூடிய பணம் கிடைக்காமல் போய்விடுகிறது.

"**Loans to Madras State Co-operative Bank to strengthen its Agricultural Credit Stabilisation Fund**" என்பதற்கு சென்ற ஆண்டு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது இந்த ஆண்டு 18 லட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 11 லட்சம் வெட்டப்பட்டிருக்கிறது.

"**Loans under the control of Fisheries Department**" கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

மீனவர்கள் நைலான் நெட்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 6 லட்சம ரூபாயாக இருந்தது. 100 ரூபாயாக, ஒரு டோக்கன் ஆக ஒதுக்கியிருக்கிறார்கள்

கிராமங்களில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 4 லட்சம் ரூபாய்; இந்த வருஷம் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. சென்னை அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்காகக் கொடுக்கப்படும் கடன் தொகையும் 32 லட்சம் ரூபாயிலிருந்து இந்த ஆண்டு 30 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை கார்ப்பரேஷனுக்கு சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் 60 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். வாட்டர் சப்ளை, டிரெய்னேஜ் போன்ற காரியங்களைச் செய்வதற்குத் தேவைதான். அதே சமயத்தில் 1967-ம் வருஷத்து ஆடிட் ரிபோர்ட்டைப் பார்க்கும்போது கடந்த பத்து வருஷ காலமாக சென்னை கார்ப்பரேஷன் 98 லட்சம் ரூபாயை மானியமாகவோ கடனாகவோ பெற்றிருந்தும் கூட சரியாக செலவழிக்காமல் இருக்கிறது என்பதைப் பற்றி அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, கொடுக்கப்படும் தொகையைக் கார்ப்பரேஷன் காலா காலத்தில் நல்ல விதமாக உபயோகப்படுத்துகிறதா என்பதைச் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

போலீஸ் இலாகாவில் அதிகமான வண்டிகள் வாங்குவதற்காக ஒதுக்கி இருந்த பணத்தை, சென்ற ஆண்டு 25 லட்சமாக இருந்ததைக் குறைத்திருக்கிறார்கள். கள்ளக்கடத்தல் செய்கிறவர்கள் புதிய புதிய வாகனங்களை வைத்துக் கொண்டு போகும்போது அவர்களைத் துரத்திப் பிடிக்க நல்ல வாகனங்கள் போலீஸ் இலாகாவுக்கு இருந்தால்தான் குற்றவாளிகளைப்

பிடிக்க வசதியாக இருக்கும். போலீஸ்காரர்களுடைய பயணப்படியிலும் கணிசமான அளவுக்கு வெட்டு செய்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 82 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 80 லட்சம் என்ற அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் போலீஸ்காரர்கள் ஊக்கத்தோடு வேலை செய்வதிலே இடைஞ்சல் ஏற்படும். அதற்கு அதிகப்படியான தொகை ஒதுக்கியிருக்க வேண்டும்.

நெய்வேலி நிலக்கரித் திட்டமும், பெரம்பூர் ரயில் பெட்டித் திட்டமும் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன. ஆனால் அதிலிருந்து வரக்கூடிய வருமானம் மத்திய சர்க்காருக்குப் போய்விடுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது சேலம் திட்டத்தை நாமே ஏற்று நடத்தினால் அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் நமக்கே கிடைக்கும். அந்த வகையில் செய்வதாக இருந்தால், கிளர்ச்சி இல்லாமல் நாமே அதனை மேற்கொண்டால் அதற்கு மத்திய சார்க்கார் கூட ஆதரவு கொடுக்கும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதைச் செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதன் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், முதல் முதல் இந்த மந்திரிசபையின் அமைப்பைப் பொறுத்தவரையில் நான் பாராட்டுகிறேன். முந்திய மந்திரி சபையையும் இந்த மந்திரி சபையையும்—நான் முகஸ்துதி செய்வதாக யாரும் நினைத்துக் கொள்ளாதீர்கள்—ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது பிரமாதமான முறையில் அமைந்திருக்கிறது. அந்தந்த இலாக்காக்களுக்கு ரொம்பவும் பொருத்தமான முறையில் அமைச்சர்கள் அமைந்திருக்கிறார்கள். உணவு இலாகாவை எடுத்துக் கொண்டால் நம் கனம் மதியழகன் அவர்கள் இடத்தில் மாதவன் அவர்களை வைத்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்காது. அவர் அன்னிய நாட்டிற்குப் போனால் இந்தியாவின் உணவு நிலையை அது பிரதிபலிக்கும். ஆகவே அந்தந்த சப்ஜெக்டுக்குத் தகுந்தமாதிரி மந்திரிகள் இந்த மந்திரிசபையில் அமைந்திருப்பது நம் தமிழ்நாட்டின் பாக்கியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு படி அரிசித் திட்டம். இது நல்லதொரு "போல்ட் ஸ்டெப்". ஏதோ எலெக்ஷன் பிராமிஸை நிறைவேற்றவில்லையே என்று காங்கிரஸ்காரர்கள் குறை சொல்வார்களே என்று இதைச் செய்யவில்லை என்று நினைக்கிறேன். மக்களுக்கு உடனடியாக நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் தைரியமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த பண நெருக்கடி காலத்தில், இன்று பத்திரிகைகளில் பார்க்கிறோம், இந்திய சர்க்காரின் பண நெருக்கடி பற்றி. சேலம் திட்டம் நான்காவது திட்டத்தில் இல்லை என்று சொல்கிறார்கள். ஒரு பக்கத்தில் இருபது கோடிக்கு நோட்டு அச்சடிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், பொருளாதார குழப்பத்திற்கு மத்தியில் வரவு செலவைச் சரிக்கட்ட கஷ்டப்படும் சமயத்தில் இந்த சர்க்கார் தைரியமாக ஐந்து கோடி ரூபாய் விழுங்கக் கூடிய ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக இவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது பட்டணங்களில் வசிக்கிறவர்களுக்கு, முனிசிபாலிடிகளில் வசிக்கிறவர்களுக்குத்தான் இப்போது இந்த ரேஷன் அரிசி. பழைய காங்கிரஸ் சர்க்கார் கொள்முதலை செய்தது மாதிரி செய்து கொண்டிருக்கும்போது அவர்கள் எங்கெங்கெல்லாம் ஒழுங்காக ஃபாமிலி கார்ட் ஸிஸ்டம், வில்லேஜ்களில் ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ் மூலம் எப்படி சப்ளை செய்தார்களோ அதை ரெஸ்டோர் செய்யவேண்டும். மந்திரிசபை வந்து மூன்று மாதங்களாகியும் பழைய அந்த இடங்களில் இன்னும் அரிசி சப்ளை செய்யாததால் கஷ்டமாகயிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரை ஒரு பக்கத்தில் ஜனங்கள் போற்றுகிறார்கள். ஒருபக்கம் தூற்றுகிறார்கள், எங்களைப் போன்ற சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஜவாப் சொல்ல ரொம்பவும் கஷ்டமாகயிருக்கிறது. விளம்பரம் வேண்டும், பத்திரிகைகளில் வரவேண்டும் என்றால்



எங்களுக்கெல்லாம் காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்து பேசத் தெரியாமல் இல்லை. உங்களுக்கு ஆங்காங்குள்ள செய்திகள் தினசரி நிறைய கிடைக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் வேரூன்றிய ஸ்தாபனமாக மூலை முடுக்குகளில் எல்லாம் பரவியிருக்கிறது. ஆகவே ஆங்காங்குள்ள ஆவலாதிகள் தெரியாமல் இருக்காது. பழைய காங்கிரஸ் சர்க்காருக்கு நல்ல பெயரை ஏற்படுத்தி நாம் கெட்ட பெயரை வாங்கிக்கொள்ளக் கூடாது. ஆகவே, இரண்டு மூன்று மாதங்களுக்காவது அவசரமாக, கூடிய சீக்கிரமாக, ஃபாமிலி கார்ட் திட்டத்தின் கீழ் ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ் மூலம் பழையபடி கிராமங்களில் உள்ள மக்களுக்கு அரிசி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதை இலகுவாக நினைக்காதீர்கள். மந்திரிசபை அளவில் இதைப்பற்றி பேசி ஒரு முடிவிற்கு வந்து உத்தரவனுப்ப வேண்டும். இரண்டு மூன்று மாதங்கள் சென்றால் பின்னர் வேண்டுமானால் அதைத் தள்ளி வைத்துவிடலாம். அப்போது அறுவடை வந்துவிடும். ஜனங்கள் அப்போது கஷ்டப்படாமல் வாங்கிக்கொள்வார்கள். இப்போது ஆடி கோடை வருகிறது. ஆகவே காபினட் கூட ஒரு மாதத்திற்குள் இது பற்றி முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததற்குக் காரணமே கடவுளின் சக்திதான், தெய்வீக சக்திதான். ஏற்கனவே ஒரு மகாநாடு போட்டார்கள். சிவபெருமான் தலைமையில் எல்லாக் கடவுள்களும் சேர்ந்து ஒரு கான்பரன்ஸ் போட்டார்கள், இந்திரபுரியில். எதற்காக அவர்கள் கூடினார்கள் என்றால் பழைய காங்கிரஸ் சர்க்கார் வோட்டு பிடிக்கும் மோகத்தில் கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்படி, குத்தகைதாரர்கள் விவசாயம் செய்வதில் குத்தகை பாக்கி இருந்தாலும் நில உடைமையாளர்கள் கேட்கக் கூடாது என்று மாரட்டோரியம் போட்டு விட்டார்கள். நம்பர் 8, திருமலைப் பிள்ளை ரோடில் யாரோ சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு போட்டு விட்டார்கள். மாரட்டோரியம் போட்டு குத்தகை பாக்கி கேட்பதற்கு இல்லை என்ற நிலை இருக்கிறது. அதனால் பெரிய நிலச்சுவான்தார்கள் பாதிக்கப்பட்டால் பரவாயில்லை. சிறிய நில உடைமையாளர்களைப் பார்த்தால் கஷ்டமாக இருக்கிறது. முன்பு ஃபேர் ரென்ட் கோர்டில் இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி வசூலிக்கலாம் என்ற நிலை இருந்தது. இப்போது அதையும் அபாலிஷ் செய்து விட்டார்கள். ஆகவே சிறு நிலச்சுவான்தார்கள் மாட்டிக் கொண்டார்கள். சின்னச் சின்னக் கோவில்கள் மாட்டிக் கொண்டு விட்டன. கோவில்களில் வழக்கமாக நடக்கக் கூடிய பூஜை காரியங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுவிட்டன. குத்தகை பாக்கியை வசூல் செய்ய வழியில்லை. கடவுள்கள் எல்லாம் சேர்ந்து கான்பரன்ஸ் போட்டார்கள்; 'including Mr. Vinayakam'.

**திரு. கே. விநாயகம்:** பாயின்ட் ஆப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். கடவுள்கள் எல்லாம் சேர்ந்து இந்திரபுரியில் மகாநாடு போட்டதாகவும் இவரும் போனதாகச் சொன்னார்கள். நான் அந்த மகாநாட்டிற்குப் போகவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**THIRU D. S. AUTHIMOOLAM:** Sir I mean Lord Vinayaga, the Eldest son of Lord Shiva.

ஆக, இந்த மகாநாட்டின் மூலம் அவர்கள் ஏகோபித்த ஒரு தீர்மானத்தைச் செய்தார்கள். இந்தத் தடவை காங்கிரஸை பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டும். கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் என்று சொல்லி குத்தகை பாக்கி வசூல் செய்ய முடியாமல் கோவில் காரியங்கள் எல்லாம் குந்தகமாகிவிட்டன. ஆகவே இவர்களை நீக்கிவிட்டு அறிஞர் அண்ணா தலைமையில் மந்திரிசபையை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் தீர்மானம் போட்டார்கள். அப்போது நாரதர் அவர்கள் அங்கு ஒரு பாயின்ட் ஃஆப் ஆர்டரை ரெயிஸ் செய்தார்கள். போயும் போயும் இவர்களை, இவர்கள் நாஸ்தீக முறையில் உள்ளவர்கள், தெய்வ பக்தி இல்லாதவர்களைக் கொண்டு மந்திரிசபை அமைத்தால் ஆனைப்பட்ட பக்தவத்சலமே இப்படி இடைஞ்சல் செய்தால் மேற்கொண்டு இவர்கள் ரொம்ப பண்ணிவிடக்கூடாதே என்று சொன்னார். அப்போது மகாவிஷ்ணு சமாதானம் சொன்னார்.

அவர்களை நாஸ்தீகர்கள் என்று சொல்கிறீர்களே, அவர்கள் இயற்கையை நம்புகிறவர்கள், அவர்கள் சத்தியத்தை நம்புகிறவர்கள் என்று அர்த்தமே தவிர அதற்காக அவர்களை கடவுள் விரோதிகள் என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கூறி அவர்கள் தலைமையில் மந்திரி சபையை அமைத்து வரும் காலத்தில் கோவில்களில் பூஜை காரியங்கள் நடக்க குத்தகை பாக்கிகள் ஒழுங்காகக் கிடைக்க அவர்கள் உதவி செய்வார் கள் என்று முடிவு எடுத்தார்கள். அந்த முடிவின் பேரில்தான் இந்த மந்திரிசபை வந்திருக்கிறது. ஆகவே இந்த குத்தகை பாக்கி விஷயத்தில் பெரிய நிலச்சுவான்தார்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் ஒரு ஏக்கர் அதற்குக் குறைவாக உள்ள நில உடைமையாளர்களிடம் அந்த பாக்கியை வைத்துக் கொள்ளக்கூடாது, கோவில்களுக்கு பாக்கியை வைத்துக்கொள்ளக் கூடாது என்ற வகையில் சட்டத்தைத் திருத்தி புதிதாக ஏதாவது காரியம் செய்துவிட வேண்டும்.

ஆகவே, அந்த பழைய ஃபேர் ரெண்டு கோர்ட்டுகளையும் ஏற்படுத்தினால் தான், இரண்டு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டி, மனு கொடுத்து வழக்காட வசதி யாக இருக்கும். இந்தக் காரியத்தைப் பொறுப்பாக கவனிக்கக் வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக விவசாயத்தைப் பொறுத்த வரையில், நமது விவசாய மந்திரி அவர்கள் ரொம்பவும் ஆர்வமும், துடிப்புமான மந்திரியாக அமைந் திருக்கிறார்கள். எல்லா மந்திரிகளும் அப்படித்தான். அதிலே இவர்கள் நேற்றுப் பேசிய பேச்சு ரொம்ப அற்புதமாக இருந்தது. அவர்கள் அந்தப் பக்கத்தில் இருக்கிற பொது மராமத்து மந்திரியைக் கொஞ்சம் "கெரோ" செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதற்காக என்று சொன் னால், நீர்ப்பாசன விஷயங்களில் போன வருஷத்திலே இருந்ததை விட இந்த வருஷம் சில தொகைகளைக் குறைத்திருக்கிறார்கள். கிணறுகள் மானியத்திற்கு போன வருஷத்தை விட இந்த வருஷம் இரண்டு கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். மற்றும் சிறு பாசன அபிவிருத்தித் திட்டங்களுக்கும் கொஞ்சம் தொகைகளைக் கூடுதலாக ஏற்பாடு செய்து, இந்தத் தண்ணீர் வசதிகள் சம்பந்தமான அணைக்கட்டுத் திட்டங்களை ஜரூராகச் செய்ய விவசாய அமைச்சரும் ஓரளவு பங்குகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போன வருஷம் எங்கள் ஜில்லாவிலே ஏரியல் ஸ்ப்ரேயிங் நடந்தது அது ரொம்ப பிரயோஜனமாக இருந்தது. அதன் மூலம் பயிர்ப் பாது காப்பு நடவடிக்கைகள் ரொம்பவும் இருந்து, விவசாயிகளுக்கு நல்ல மேனி கிடைத்தது. நான் நேற்றுப் பேச முடியாததால் இன்று சொல்லு கிறேன். ஏரியல் ஸ்ப்ரேயிங்க்குக்கு ராஜ்ய அளவில் தகுந்த நடவடிக்கை எடுத்து—ஏக்கருக்கு 10 ரூபாய் செலவு ஆகிறது என்று நினைக்கிறேன்— செலவை விவசாயிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ராஜ்ய அள வில் நம்முடைய விவசாய இலாகா நடவடிக்கை எடுத்து ஸ்ப்ரேயிங்குக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட மருந்து கம்பெனிக்காரர்களையும் மற்றவர்களையும் கலந்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய சட்டங்களை, சிறிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சட்டங்களைச் செய்ய வேண்டும். விவசாயம் சம்பந்தமான அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். விவசாயத்திற்கு முக்கியமாக வேண்டி யது தண்ணீர். எங்கள் ஜில்லாவில் உள்ள இரண்டு அணைக்கட்டுத்திட்டங் கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆற்று நீர்களையெல்லாம் டாப் செய்து விட்டோம் என்று 10 வருஷமாகப் பேசப்படுகிறது. எழுதப்படுகிறது. இரண்டு திட்டங்கள் இருக் கின்றன திருநெல்வேலி ஜில்லாவிலே. அதற்குத் தொகை ரொம்ப மீகர் அமவுண்ட் தான், ரோடு போட அல்லது குடிசை கட்டும் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கர்ணையாறு, ராம நதி ஆகிய இரண்டு திட்டங்களுக் கும் கணிசமான தொகை ஒதுக்கி இந்த நாட்டில் சுபிட்சமான முறையில் கொண்டு வருவதற்கு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இந்த மாதிரி சபை வந்து 120 நாட்கள் ஆகின்றன—எத்தனை நாட்கள் ஆகின்றன என்று சரியாகத் தெரியவில்லை—இது ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்தரியுங்கள். சீக்கிரத்தில் பழைய கவர்ன்மெண்டில் செய்த மாதிரி எல்லா இடத்திற்கும் அரிசி வினியோகம் செய்ய வேண்டும். முனிசிபாலிடி யில் இருக்கிற ஆட்கள்தான், பட்டணத்தில் இருக்கிற ஆட்கள்தான் பத்து மாதப் பிள்ளை என்று நினைக்காதீர்கள். கிராமத்தில் இருக்கிற மக்கள் கஷ்டப்படுகிறார்கள். வேண்டுமென்றால் உங்கள் கட்சியில் உள்ளவர் களை விசாரியுங்கள். இந்த மந்திரி சபை நல்ல முறையில் நடக்க வேண்டும். அதற்கு தெய்வீக பலம் இருக்கிறது. 'including Lord Vinayaka, the eldest son of Lord Shiva' என்று சொல்லி, வணக்கத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்போது பட்ஜெட் கூட்டம் முடிவு அடைந்து, கடைசியாக வந்திருக்கிற நிதி ஒதுக்க மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படு கிறேன்.

அதாவது ஏறக்குறைய 210 கோடி ரூபாயை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கையில் இன்றைக்கு எடுத்துக் கொடுக்கிறோம் என்று அர்த்தம். ஆகவே, இதைக் கொடுக்கக் கூடிய நேரத்திலே, இன்றைக்கு இருக்கக் கூடிய சர்க்கார் மிகவும் பொறுப்போடு, நல்ல முறையிலே ஏற்கனவே இருந்த சர்க்கார் எப்படி ஊதாரித்தனமாகச் செலவிட்டதோ அது போன்று செலவிடாமல், மக்களுக்குப் பலன் தரும் தன்மையில் செய்வார்கள் என்ற நம்பிக்கை யோடு இன்றைக்குப் பணத்தை எடுத்துக் கொடுக்கிறோம். அதற்காக வேண்டி நிதி ஒதுக்கப்படுகிறது என்பதுதான் பொருள். ஆகவே, இந்த நேரத்திலே ஏதோ ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கக் கூடிய மக்கள் ஏமாளிகளைப் போலத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள், ஏதோ ஏமாந்த வாக்கில் ஓட்டுப்போட்டதால் வந்து விட்டார்கள், ஆகவே பொதுமக்கள் ஏமாளிகள், அறிவில்லாதவர்கள் என்று அப்படிப் பார்க்கவில்லை. இதை யெல்லாம் ரொம்ப புத்திசாலித்தனமாக, கணக்குப் போட்டுத் தேர்ந் தெடுத்திருக்கிறார்கள். யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று, யாருக்கு பாடவேண்டுமென்று. இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தச் ர்க்காருக்கு மிகப் பெரிய அளவுக்குப் பொறுப்பு இருக்கிறது ன்று எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் ாங்கிரஸ் சர்க்கார். அந்த மத்திய சர்க்காரிடத்திலே எல்லாப் ிரச்சினைகளிலேயும், மக்களுக்கு ஆவன செய்ய வேண்டிய சின்னப் ிரச்சினையாக இருந்தாலும், பெரிய பிரச்சினையாக இருந்தாலும், எதிர்த்துப் ாராடிப் பெற வேண்டிய நிலை இருக்கிறது. இதற்குக் கொஞ்சமும் யங்கவேண்டிய அவசியம் கிடையாது. காங்கிரஸ்காரர்கள் மிரட்டினாலும் ி, சுதந்திராக் கட்சி எதிர்க்கக் கூடாது என்று சொன்னாலும் சரி— வர்கள் எதிர்க்கக் கூடாது என்று சொலல்வில்லை—நமக்கு இருக்கக்கூடிய ரட்டில், இந்த மாகாணத்திலிருந்து வசூல் செய்து கொண்டுபோகக் டிய பணத்திலிருந்து மேலும் அதிகப்படியாக ஒதுக்கப்பட வேண்டும் ன்ற அடிப்படையில் தான் கேட்கிறோம். ஆகவே, அதைப் பெறுவதன் லமாகத்தான் இங்கே இருக்கக் கூடிய மக்களுக்கு என்ன என்ன செய்ய வண்டுமோ அவ்வளவையும் கண்டிப்பாகச் செய்ய வேண்டிய நிலைமை ருக்கிறது. அதற்காக இந்தச் சர்க்கார் வெகு விரைவிலே வேலையில்லாத் ண்டாட்டத்தைப் போக்க தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும். அதே பான்று விலைவாசிகள், மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ல்லாப் பொருள்களின் விலைவாசியையும் கட்டுப்படுத்துவதற்கான தீவிர டவடிக்கையை எடுத்தாக வேண்டும். அதேபோன்று நிலச் சீர்திருத்தச் ட்டம், ஏற்கனவே இருந்த சர்க்காரால் லாண்ட் ஸீலிங் பில் என்ற பயரால் கொண்டுவரப்பட்ட சட்டம், எவ்வளவு நிலம் இருந்தாலும் அவர் ளே ஆண்டு அனுபவிக்கும் அளவுக்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டதே தைத் திட்டவட்டமாக ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கருக்கு மேல் இருக்கக் டாது என்ற அடிப்படையிலே திருத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போன்று இன்றைக்கு கலப்படம். விலைவாசிகள் உயர உயர பலவிதக் கலப்படங்கள். ஒரு கலப்படம் செய்துவிட்டு, அதில் ஏதோ பாய்ஸன் இருந்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னவுடனே கொலைக் குற்றம் போடப்படுகிறது. ஆனால், உரத்திலே உப்பு கலப்படம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள்களிலே மனிதன், பல வியாதிகளுக்கு ஆளாகும் கலப்படம் இருக்கிறது. இந்த விஷயத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு, கொலைக் குற்றம் சாட்டும் அளவுக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று லஞ்ச ஊழல் இன்றைக்குக் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் "இழுத்துக்கொண்டுவா நான் தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. லஞ்சத்தைப்பற்றிச் சொல்லக் கூடிய நபர் அப்படி இழுத்துக்கொண்டு வர முடியாது. வரவும் மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இது போன்ற விஷயங்களில், "இப்படி இருக்கிறது, இன்ன நிலைமை" என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதில் தீவிர கவனம் செலுத்திக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

படி அரிசி ஒரு ரூபாய் என்பதை எல்லாப் பிரதேசங்களிலும் போடுவதற்கான தீவிர முயற்சியை எடுத்தாக வேண்டும். இவ்வளவையும் இன்றைக்குச் சமாளிக்க வேண்டுமேயானால், இதற்காக தரிசு நிலங்களை, காட்டு இலாகாவுக்குச் சொந்தமான அந்த இலாகாவுக்கு உதவாத நிலமாக இருந்தாலும், வேறு தரிசு நிலமாக இருந்தாலும் விவசாயத்திற்கு உடனடியாகக் கொடுக்க முயற்சி செய்தாகவேண்டும்.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு மேலும் பொருளாதார வசதி ஏற்பட வேண்டுமென்றால், மது விலக்கை ரத்து செய்து பழையபடி கள்ளுக் கடைகளைக் கொண்டு வருவதன் மூலம் ஆண்டுக்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும். ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.
பிற் அதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை
பகல் இந்த நேரத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.
12-30

அதேபோன்று இப்பொழுது 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் ரூட்டுகளை சர்க்கார் எடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு படிப்படியாக எந்த அளவுக்கு எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 50 மைல்களுக்கு உள்பட்ட பஸ் ரூட்டுகளெல்லாம் கட்டணக் குறைவு கிடையாது. லாங் ரூட் பஸ்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டதால் தனிப்பட்டவர்களும் குறைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்துக்கு 5 பஸ்கள் என்று கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு நிலையை எடுப்பது மிகவும் நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாய அபிவிருத்தி என்று சொல்லக்கூடிய நேரத்தில், மனிதனுக்கு எவ்வளவு வசதியிருந்தாலும், காற்றும், தண்ணீரும் இல்லையென்று சொன்னால் அவன் எப்படி உயிர் வாழமுடியாதோ, அதேபோல் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்று சொன்னால் ஒன்றும் நடக்காது. ஆகவே, நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்குவதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய சிறிய டாம், பெரிய டாம் கட்டுவதற்கு எங்கெங்கு வசதிகள் உண்டோ, அங்கெல்லாம் டாம்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்தாக வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியாத்தம் தொகுதியில் மோர்தனா டாம் கட்ட வேண்டும் என்ற ஒரு பெரிய பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதுமாத்திரமல்ல, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய சிறு விவசாயிகளை பாதிக்கக்கூடிய, விவசாயத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய மோசமான ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.



கிணறு வெட்டுவதற்கு கொடுக்கக்கூடிய லோன் போதாது. குறைந்த பட்சம் ரூ. 4,000 சப்ஸிடி லோன் கொடுக்க வேண்டும். அல்லது அதைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வாங்கிக்கொடுப்பதற்கும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மாத்திரமல்ல. புல் டோஸர்ஸ், போன்ற ஏரிகளில் தூர் எடுக்கக்கூடிய நவீன கருவிகள், இயந்திரங்கள், டிராக்டர்கள், இன்னும் பாறை இருந்தால் துளை போடக்கூடிய கருவிகள், இதே போன்ற நவீனக் கருவிகளை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிக்கனத்தைக் கையாளக்கூடிய நமது சர்க்கார் கண்டிப்பாக கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் கிடைக்கும். ஏதோ மரப்பொம்மை கொலுவைப்போல, அங்கே பெரிய மனிதர்களை உட்காரவைத்து ஒரு அலங்கார கொலுவைப்போல அது இருக்கிறது. அந்தக் காரணத்தினால் பல ராஜ்யங்களில் கூட அதைக் கலைத்துவிட வேண்டும் என்று இன்றைக்கு முடிவு எடுக்க முயற்சி நடத்தப்பட்டு வருகிறது என்பது நம் எல்லோருக்குமே தெரிந்த விஷயம்.

தஞ்சை மாவட்டம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே அரிசி கிடைக்காமல் அதிகப்படியான விலைக்கு அரிசி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதே போன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர்—நேற்று மாலை போயிருந்தேன்—ஆகிய இடங்களில் ஒரு படி அரிசி ரூ. 2 க்கு மேல் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இவ்வளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தை தனி மாவட்டமாகப் பிரிக்கக்கூடிய நேரத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகப்படியாக நெல் சாகுபடியாகக்கூடிய செய்யாறு, வந்தவாசி, அரக்கோணம் ஆகிய பகுதிகளை காஞ்சிபுரம் மாவட்டத்தோடு சேர்ப்பதன் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தை பட்டினி போடக்கூடிய அளவுக்கு மோசமான நிலையில் கொண்டுபோய் விடக்கூடாது. எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு, எந்த அளவுக்கு அதை அமைக்க வேண்டுமோ அந்த அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, வீடு இல்லாதவர்களுக்கு, அரிஜனங்களுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பே, அப்பொழுதிருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், வீடு கட்டிக்கொள்வதற்கு தரிசு நிலங்களைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன். தனியார் இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது கோவில், மடத்திற்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும், அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த இடத்தை கண்டிப்பாக பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுத் தேர்தலுக்குப் பின்னால் முதன் முதலில் கொடுக்கப்பட்ட இந்த 1967–68ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஒட்டிய நிதி ஒதுக்கல் மசோதாவின் விவாதத்தில், விவாத இறுதி நாளான இன்றைக்கு கலந்துகொண்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சுமார் ஒரு மாத காலமாக எவ்வளவோ விவாதங்கள், பொது விவாதமும், பின்னால் மானியக் கோரிக்கைகளின் மீது விவாதங்களும் நடைபெற்றன. அப்படி நடைபெற்றிருந்தாலும் கூட, இன்னும் தேர்தல் ஜுரம் பூரணமாக தணிந்ததாகத் தெரியவில்லை என்ற நிலையைக்கூட உணர வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடத்தியபொழுது இருந்ததை விட இப்பொழுது கொஞ்சம் தேர்தல் ஜுரம் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இனிமேல் அதையெல்லாம் நீக்கி, இப்பொழுது

அதே போன்று இன்றைக்கு கலப்படம். விலைவாசிகள் உயர உயர பலவிதக் கலப்படங்கள். ஒரு கலப்படம் செய்துவிட்டு, அதில் ஏதோ பாய்ஸன் இருந்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னவுடனே கொலைக் குற்றம் போடப்படுகிறது. ஆனால், உரத்திலே உப்பு கலப்படம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள்களிலே மனிதன், பல வியாதிகளுக்கு ஆளாகும் கலப்படம் இருக்கிறது. இந்த விஷயத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு, கொலைக் குற்றம் சாட்டும் அளவுக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று லஞ்ச ஊழல் இன்றைக்குக் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் "இழுத்துக்கொண்டுவா நான் தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. லஞ்சத்தைப்பற்றிச் சொல்லக் கூடிய நபர் அப்படி இழுத்துக்கொண்டு வர முடியாது. வரவும் மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இது போன்ற விஷயங்களில், "இப்படி இருக்கிறது, இன்ன நிலைமை" என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதில் தீவிர கவனம் செலுத்திக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

படி அரிசி ஒரு ரூபாய் என்பதை எல்லாப் பிரதேசங்களிலும் போடுவதற்கான தீவிர முயற்சியை எடுத்தாக வேண்டும். இவ்வளவையும் இன்றைக்குச் சமாளிக்க வேண்டுமேயானால், இதற்காக தரிசு நிலங்களை, காட்டு இலாகாவுக்குச் சொந்தமான அந்த இலாகாவுக்கு உதவாத நிலமாக இருந்தாலும், வேறு தரிசு நிலமாக இருந்தாலும் விவசாயத்திற்கு உடனடியாகக் கொடுக்க முயற்சி செய்தாகவேண்டும்.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு மேலும் பொருளாதார வசதி ஏற்பட வேண்டுமென்றால், மது விலக்கை ரத்து செய்து பழையபடி கள்ளுக் கடைகளைக் கொண்டு வருவதன் மூலம் ஆண்டுக்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும். ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோன்று இப்பொழுது 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் ரூட்டுகளை சர்க்கார் எடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு படிப்படியாக எந்த அளவுக்கு எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 50 மைல்களுக்கு உள்பட்ட பஸ் ரூட்டுகளெல்லாம் கட்டணக் குறைவு கிடையாது. லாங் ரூட் பஸ்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டதால் தனிப்பட்டவர்களும் குறைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்துக்கு 5 பஸ்கள் என்று கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு நிலையை எடுப்பது மிகவும் நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாய அபிவிருத்தி என்று சொல்லக்கூடிய நேரத்தில், மனிதனுக்கு எவ்வளவு வசதியிருந்தாலும், காற்றும், தண்ணீரும் இல்லையென்று சொன்னால் அவன் எப்படி உயிர் வாழமுடியாதோ, அதே போல் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்று சொன்னால் ஒன்றும் நடக்காது. ஆகவே, நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்குவதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய சிறிய டாம், பெரிய டாம் கட்டுவதற்கு எங்கெங்கு வசதிகள் உண்டோ, அங்கெல்லாம் டாம்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்தாக வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியாத்தம் தொகுதியில் மோர்தனா டாம் கட்ட வேண்டும் என்ற ஒரு பெரிய பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதுமாத்திரமல்ல, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய சிறு விவசாயிகளை பாதிக்கக்கூடிய, விவசாயத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய மோசமான ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.



கிணறு வெட்டுவதற்கு கொடுக்கக்கூடிய லோன் போதாது. குறைந்தபட்சம் ரூ. 4,000 சப்ஸிடி லோன் கொடுக்க வேண்டும். அல்லது அதைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வாங்கிக்கொடுப்பதற்கும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மாத்திரமல்ல. புல் டோஸர்ஸ், போன்ற ஏரிகளில் தூர் எடுக்கக்கூடிய நவீன கருவிகள், இயந்திரங்கள், டிராக்டர்கள், இன்னும் பாறை இருந்தால் துளை போடக்கூடிய கருவிகள், இதே போன்ற நவீனக் கருவிகளை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிக்கனத்தைக் கையாளக்கூடிய நமது சர்க்கார் கண்டிப்பாக கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் கிடைக்கும். ஏதோ மரப்பொம்மை கொலுவைப்போல, அங்கே பெரிய மனிதர்களை உட்காரவைத்து ஒரு அலங்கார கொலுவைப்போல அது இருக்கிறது. அந்தக் காரணத்தினால் பல ராஜ்யங்களில் கூட அதைக் கலைத்துவிட வேண்டும் என்று இன்றைக்கு முடிவு எடுக்க முயற்சி நடத்தப்பட்டு வருகிறது என்பது நம் எல்லோருக்குமே தெரிந்த விஷயம்.

தஞ்சை மாவட்டம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே அரிசி கிடைக்காமல் அதிகப்படியான விலைக்கு அரிசி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதே போன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர்—நேற்று மாலை போயிருந்தேன்—ஆகிய இடங்களில் ஒரு படி அரிசி ரூ. 2 க்கு மேல் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இவ்வளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தை தனி மாவட்டமாகப் பிரிக்கக்கூடிய நேரத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகப்படியாக நெல் சாகுபடியாகக்கூடிய செய்யாறு, வந்தவாசி, அரக்கோணம் ஆகிய பகுதிகளை காஞ்சீபுரம் மாவட்டத்தோடு சேர்ப்பதன் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தை பட்டினி போடக் கூடிய அளவுக்கு மோசமான நிலையில் கொண்டுபோய் விடக்கூடாது. எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு, எந்த அளவுக்கு அதை அமைக்க வேண்டுமோ அந்த அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, வீடு இல்லாதவர்களுக்கு, அரிஜனங்களுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பே, அப்பொழுதிருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், வீடு கட்டிக்கொள்வதற்கு தரிசு நிலங்களைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன். தனியார் இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது கோவில், மடத்திற்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும், அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த இடத்தை கண்டிப்பாக பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பொதுத் தேர்தலுக்குப் பின்னால் முதன் முதலில் கொடுக்கப்பட்ட இந்த 1967–68ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஒட்டிய நிதி ஒதுக்கல் மசோதாவின் விவாதத்தில், விவாத இறுதி நாளான இன்றைக்கு கலந்துகொண்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சுமார் ஒரு மாத காலமாக எவ்வளவோ விவாதங்கள், பொது விவாதமும், பின்னால் மான்யக் கோரிக்கைகளின் மீது விவாதங்களும் நடைபெற்றன. அப்படி நடைபெற்றிருந்தாலும் கூட, இன்னும் தேர்தல் ஜுரம் பூரணமாக தணிந்ததாகத் தெரியவில்லை என்ற நிலையைக்கூட உணர வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடத்தியபொழுது இருந்ததை விட இப்பொழுது கொஞ்சம் தேர்தல் ஜுரம் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இனிமேல் அதையெல்லாம் நீக்கி, இப்பொழுது

அதே போன்று இன்றைக்கு கலப்படம். விலைவாசிகள் உயர உயர பலவிதக் கலப்படங்கள். ஒரு கலப்படம் செய்துவிட்டு, அதில் ஏதோ பாய்ஸன் இருந்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னவுடனே கொலைக் குற்றம் போடப்படுகிறது. ஆனால், உரத்திலே உப்பு கலப்படம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள்களிலே மனிதன், பல வியாதிகளுக்கு ஆளாகும் கலப்படம் இருக்கிறது. இந்த விஷயத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு, கொலைக் குற்றம் சாட்டும் அளவுக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று லஞ்ச ஊழல் இன்றைக்குக் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் "இழுத்துக்கொண்டுவா நான் தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. லஞ்சத்தைப்பற்றிச் சொல்லக் கூடிய நபர் அப்படி இழுத்துக்கொண்டு வர முடியாது. வரவும் மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இது போன்ற விஷயங்களில், "இப்படி இருக்கிறது, இன்ன நிலைமை" என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதில் தீவிர கவனம் செலுத்திக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

படி அரிசி ஒரு ரூபாய் என்பதை எல்லாப் பிரதேசங்களிலும் போடுவதற்கான தீவிர முயற்சியை எடுத்தாக வேண்டும். இவ்வளவையும் இன்றைக்குச் சமாளிக்க வேண்டுமேயானால், இதற்காக தரிசு நிலங்களை, காட்டு இலாகாவுக்குச் சொந்தமான அந்த இலாகாவுக்கு உதவாத நிலமாக இருந்தாலும், வேறு தரிசு நிலமாக இருந்தாலும் விவசாயத்திற்கு உடனடியாகக் கொடுக்க முயற்சி செய்தாகவேண்டும்.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு மேலும் பொருளாதார வசதி ஏற்பட வேண்டுமென்றால், மது விலக்கை ரத்து செய்து பழையபடி கள்ளுக் கடைகளைக் கொண்டு வருவதன் மூலம் ஆண்டுக்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும். ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.
பிற் அதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை
பகல் இந்த நேரத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.
12-30

அதேபோன்று இப்பொழுது 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் ரூட்டுகளை சர்க்கார் எடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு படிப்படியாக எந்த அளவுக்கு எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 50 மைல்களுக்கு உள்பட்ட பஸ் ரூட்டுகளெல்லாம் கட்டணக் குறைவு கிடையாது. லாங் ரூட் பஸ்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டதால் தனிப்பட்டவர்களும் குறைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்துக்கு 5 பஸ்கள் என்று கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு நிலையை எடுப்பது மிகவும் நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாய அபிவிருத்தி என்று சொல்லக்கூடிய நேரத்தில், மனிதனுக்கு எவ்வளவு வசதியிருந்தாலும், காற்றும், தண்ணீரும் இல்லையென்று சொன்னால் அவன் எப்படி உயிர் வாழமுடியாதோ, அதே போல் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்று சொன்னால் ஒன்றும் நடக்காது. ஆகவே, நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்குவதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய சிறிய டாம், பெரிய டாம் கட்டுவதற்கு எங்கெங்கு வசதிகள் உண்டோ, அங்கெல்லாம் டாம்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்தாக வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியாத்தம் தொகுதியில் மோர்தனா டாம் கட்ட வேண்டும் என்ற ஒரு பெரிய பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதுமாத்திரமல்ல, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய சிறு விவசாயிகளை பாதிக்கக்கூடிய, விவசாயத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய மோசமான ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.





கிணறு வெட்டுவதற்கு கொடுக்கக்கூடிய லோன் போதாது. குறைந்த பட்சம் ரூ. 4,000 சப்ஸிடி லோன் கொடுக்க வேண்டும். அல்லது அதைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வாங்கிக்கொடுப்பதற்கும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மாத்திரமல்ல. புல் டோஸர்ஸ், போன்ற ஏரிகளில் தூர் எடுக்கக்கூடிய நவீன கருவிகள், இயந்திரங்கள், டிராக்டர்கள், இன்னும் பாறை இருந்தால் துளை போடக்கூடிய கருவிகள், இதே போன்ற நவீனக் கருவிகளை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிக்கனத்தைக் கையாளக்கூடிய நமது சர்க்கார் கண்டிப்பாக கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் கிடைக்கும். ஏதோ மரப்பொம்மை கொலுவைப்போல, அங்கே பெரிய மனிதர்களை உட்காரவைத்து ஒரு அலங்கார கொலுவைப்போல அது இருக்கிறது. அந்தக் காரணத்தினால் பல ராஜ்யங்களில் கூட அதைக் கலைத்துவிட வேண்டும் என்று இன்றைக்கு முடிவு எடுக்க முயற்சி நடத்தப்பட்டு வருகிறது என்பது நம் எல்லோருக்குமே தெரிந்த விஷயம்.

தஞ்சை மாவட்டம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே அரிசி கிடைக்காமல் அதிகப்படியான விலைக்கு அரிசி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதே போன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர்—நேற்று மாலை போயிருந்தேன்—ஆகிய இடங்களில் ஒரு படி அரிசி ரூ. 2 க்கு மேல் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இவ்வளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தை தனி மாவட்டமாகப் பிரிக்கக்கூடிய நேரத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகப்படியாக நெல் சாகுபடியாகக்கூடிய செய்யாறு, வந்தவாசி, அரக்கோணம் ஆகிய பகுதிகளை காஞ்சீபுரம் மாவட்டத்தோடு சேர்ப்பதன் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தை பட்டினி போடக்கூடிய அளவுக்கு மோசமான நிலையில் கொண்டுபோய் விடக்கூடாது. எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு, எந்த அளவுக்கு அதை அமைக்க வேண்டுமோ அந்த அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, வீடு இல்லாதவர்களுக்கு, அரிஜனங்களுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பே, அப்பொழுதிருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், வீடு கட்டிக்கொள்வதற்கு தரிசு நிலங்களைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன். தனியார் இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது கோவில், மடத்திற்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும், அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த இடத்தை கண்டிப்பாக பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பொதுத் தேர்தலுக்குப் பின்னால் முதன் முதலில் கொடுக்கப்பட்ட இந்த 1967–68ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஒட்டிய நிதி ஒதுக்கல் மசோதாவின் விவாதத்தில், விவாத இறுதி நாளான இன்றைக்கு கலந்துகொண்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சுமார் ஒரு மாத காலமாக எவ்வளவோ விவாதங்கள், பொது விவாதமும், பின்னால் மான்யக் கோரிக்கைகளின் மீது விவாதங்களும் நடைபெற்றன. அப்படி நடைபெற்றிருந்தாலும் கூட, இன்னும் தேர்தல் ஜுரம் பூரணமாக தணிந்ததாகத் தெரியவில்லை என்ற நிலையைக்கூட உணர வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடத்தியபொழுது இருந்ததை விட இப்பொழுது கொஞ்சம் தேர்தல் ஜுரம் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இனிமேல் அதையெல்லாம் நீக்கி, இப்பொழுது

அதே போன்று இன்றைக்கு கலப்படம். விலைவாசிகள் உயர உயர பலவிதக் கலப்படங்கள். ஒரு கலப்படம் செய்துவிட்டு, அதில் ஏதோ பலபேர் இருந்து அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னவுடனே கொலைக் குற்றம் போடப்படுகிறது. ஆனால், உரத்திலே உப்பு கலப்படம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள்களிலே மனிதன், பல வியாதிகளுக்கு ஆளாகும் கலப்படம் இருக்கிறது. இந்த விஷயத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு, கொலைக் குற்றம் சாட்டும் அளவுக்குச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று லஞ்ச ஊழல் இன்றைக்குக் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் "இழுத்துக்கொண்டுவா நான் தீர்த்துவிடுகிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. லஞ்சத்தைப்பற்றிச் சொல்லக் கூடிய நபர் அப்படி இழுத்துக்கொண்டு வர முடியாது. வரவும் மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இது போன்ற விஷயங்களில், "இப்படி இருக்கிறது, இன்ன நிலைமை" என்று சொல்லக்கூடிய நேரத்தில் அதில் தீவிர கவனம் செலுத்திக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

படி அரிசி ஒரு ரூபாய் என்பதை எல்லாப் பிரதேசங்களிலும் போடுவதற்கான தீவிர முயற்சியை எடுத்தாக வேண்டும். இவ்வளவையும் இன்றைக்குச் சமாளிக்க வேண்டுமேயானால், இதற்காக தரிசு நிலங்களை, காட்டு இலாகாவுக்குச் சொந்தமான அந்த இலாகாவுக்கு உதவாத நிலமாக இருந்தாலும், வேறு தரிசு நிலமாக இருந்தாலும் விவசாயத்திற்கு உடனடியாகக் கொடுக்க முயற்சி செய்தாகவேண்டும்.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு மேலும் பொருளாதார வசதி ஏற்பட வேண்டுமென்றால், மது விலக்கை ரத்து செய்து பழையபடி கள்ளுக் கடைகளைக் கொண்டு வருவதன் மூலம் ஆண்டுக்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும். ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

பி.ப. 12-30

அதேபோன்று இப்பொழுது 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் ரூட்டுகளை சர்க்கார் எடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு படிப்படியாக எந்த அளவுக்கு எடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 50 மைல்களுக்கு உள்பட்ட பஸ் ரூட்டுகளெல்லாம் கட்டணக் குறைவு கிடையாது. லாங் ரூட் பஸ்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிட்டதால் தனிப்பட்டவர்களும் குறைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்துக்கு 5 பஸ்கள் என்று கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு நிலையை எடுப்பது மிகவும் நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாய அபிவிருத்தி என்று சொல்லக்கூடிய நேரத்தில், மனிதனுக்கு எவ்வளவு வசதியிருந்தாலும், காற்றும், தண்ணீரும் இல்லையென்று சொன்னால் அவன் எப்படி உயிர் வாழமுடியாதோ, அதே போல் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லை என்று சொன்னால் ஒன்றும் நடக்காது. ஆகவே, நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்குவதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய சிறிய டாம், பெரிய டாம் கட்டுவதற்கு எங்கெங்கு வசதிகள் உண்டோ, அங்கெல்லாம் டாம்களைக் கட்டுவதற்கு முயற்சி செய்தாக வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியாத்தம் தொகுதியில் மோர்தனா டாம் கட்ட வேண்டும் என்ற ஒரு பெரிய பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர்கள் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதுமாத்திரமல்ல, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய சிறு விவசாயிகளை பாதிக்கக்கூடிய, விவசாயத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய மோசமான ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.



கிணறு வெட்டுவதற்கு கொடுக்கக்கூடிய லோன் போதாது. குறைந்தபட்சம் ரூ. 4,000 சப்ஸிடி லோன் கொடுக்க வேண்டும். அல்லது அதைக் கொடுப்பதற்குப் பதிலாக, சர்க்காரே கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட்டுகள் வாங்கிக்கொடுப்பதற்கும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மாத்திரமல்ல. புல் டோஸர்ஸ், போன்ற ஏரிகளில் தூர் எடுக்கக்கூடிய நவீன கருவிகள், இயந்திரங்கள், டிராக்டர்கள், இன்னும் பாறை இருந்தால் துளை போடக்கூடிய கருவிகள், இதே போன்ற நவீனக் கருவிகளை மேலும் அதிகப்படுத்தவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிக்கனத்தைக் கையாளக்கூடிய நமது சர்க்கார் கண்டிப்பாக கவுன்சிலைக் கலைப்பதன் மூலம் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் கிடைக்கும். ஏதோ மரப்பொம்மை கொலுவைப்போல, அங்கே பெரிய மனிதர்களை உட்காரவைத்து ஒரு அலங்கார கொலுவைப்போல அது இருக்கிறது. அந்தக் காரணத்தினால் பல ராஜ்யங்களில் கூட அதைக் கலைத்துவிட வேண்டும் என்று இன்றைக்கு முடிவு எடுக்க முயற்சி நடத்தப்பட்டு வருகிறது என்பது நம் எல்லோருக்குமே தெரிந்த விஷயம்.

தஞ்சை மாவட்டம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கே அரிசி கிடைக்காமல் அதிகப்படியான விலைக்கு அரிசி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதே போன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர்—நேற்று மாலை போயிருந்தேன்—ஆகிய இடங்களில் ஒரு படி அரிசி ரூ. 2 க்கு மேல் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இவ்வளவையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தை தனி மாவட்டமாகப் பிரிக்கக்கூடிய நேரத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகப்படியாக நெல் சாகுபடியாகக்கூடிய செய்யாறு, வந்தவாசி, அரக்கோணம் ஆகிய பகுதிகளை காஞ்சீபுரம் மாவட்டத்தோடு சேர்ப்பதன் மூலம் வட ஆர்க்காடு மாவட்டத்தை பட்டினி போடக் கூடிய அளவுக்கு மோசமான நிலையில் கொண்டுபோய் விடக்கூடாது. எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு, எந்த அளவுக்கு அதை அமைக்க வேண்டுமோ அந்த அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, வீடு இல்லாதவர்களுக்கு, அரிஜனங்களுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பே, அப்பொழுதிருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், வீடு கட்டிக்கொள்வதற்கு தரிசு நிலங்களைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன். தனியார் இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது கோவில், மடத்திற்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்தாலும், வேறு எந்த இடமாக இருந்தாலும், அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த இடத்தை கண்டிப்பாக பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, பொதுத் தேர்தலுக்குப் பின்னால் முதன் முதலில் கொடுக்கப்பட்ட இந்த 1967–68ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஒட்டிய நிதி ஒதுக்கல் மசோதாவின் விவாதத்தில், விவாத இறுதி நாளான இன்றைக்கு கலந்துகொண்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சுமார் ஒரு மாத காலமாக எவ்வளவோ விவாதங்கள், பொது விவாதமும், பின்னால் மான்யக் கோரிக்கைகளின் மீது விவாதங்களும் நடைபெற்றன. அப்படி நடைபெற்றிருந்தாலும் கூட, இன்னும் தேர்தல் ஜுரம் பூரணமாக தணிந்ததாகத் தெரியவில்லை என்ற நிலையைக்கூட உணர வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடத்தியபொழுது இருந்ததை விட இப்பொழுது கொஞ்சம் தேர்தல் ஜுரம் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இனிமேல் அதையெல்லாம் நீக்கி, இப்பொழுது

இருக்கும்படியான சர்க்காருடைய திட்டங்கள் என்ன, அவைகளை மக்களுக்கு எந்த வகையிலே பயன்படக்கூடிய வகையிலே அமல்படுத்த வேண்டும், ஆளும் கட்சியினருடைய கொள்கையெல்லாம் என்ன, வாக்குறுதிகளெல்லாம் என்ன என்பவைகளை ஆராய்ந்து காரியங்களை நடத்திச் செல்வதற்கு நாம் முற்படுவோம் என்பதைச் சொல்லி, சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதன்முதலாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்ருல், இன்னும் பழைய ஆட்சியினுடைய குறைகளைப் பற்றி, அதாவது காங்கிரஸ் செய்தது தவறு என்று சொல்கிருர்கள், குற்றம் சாட்டுகிருர்கள். அதைப்பற்றி நான் பல முறை இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறேன். அப்படி குற்றச்சாட்டுகள் பல அமைச்சர்கள் பேரில் இருந்தாலும் சரி, அல்லது பழைய சர்க்கார் செய்த இன்னென்ன இடைஞ்சல் காரணமாகத் தான் இன்னென்ன காரியங்கள் தடைப்பட்டிருக்கின்றன என்ற நிலைமை இருக்குமென்று கருதினுலும் சரி, அதைப்பற்றி ஒரு அறிக்கையை தயாரித்து, அதன் மீது விவாதம் நடத்தினுல் மிகவும் நன்ருக இருக்கும். அப்படியில்லாமல் ஊதாரித்தனமாகச் சென்ற காலத்திய சர்க்கார் செலவழித்தார்கள் என்று கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. கோதண்டராமன் சொன்ஞர்கள். மற்றும் சிலரும் சொன்ஞர்கள். இந்தத் திட்டம் சரியாக இல்லை, அந்தத் திட்டம் சரியாக இல்லை என்று பொறுப்பு இல்லாமல் சொல்லிக்கொண்டு போவது நல்லது அல்ல. இப்பொழுது ஆளும் கட்சியாக நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். மக்களுடைய தீர்ப்புக்கு நான் அடிபணிந்து நடக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் கொடுத்த தீர்ப்பைப் பார்க்குமிடத்து, மக்களுடைய சக்தி யாரையும் மாற்றி அமைக்க முடியும் என்பது தெரிய வருகிறது. அந்த ஜனநாயக சக்தியை மதித்து நடக்கக்கூடிய நிலையிலே நாம் இருக்கிருேம். தேர்தல் காலத்தில் நாம் எப்படிப் பேசிக் கொண்டிருந்தோமோ அதேமாதிரி பாணியில் போய்க் கொண்டிருப்பது நல்லது அல்ல.

இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை என்ன? மத்திய சர்க்கார் உதவி இல்லாமல் மாநில சர்க்கார் ஆட்சி நடத்த முடியுமா? மத்திய சர்க்கார் வேறு ஒரு சர்க்கார், மாற்ருந்தாய் சர்க்கார் என்பதுபோல், அந்த நிலையில் இருந்து, எதற்கு எடுத்தாலும் மத்திய சர்க்காரினுல் தான் இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்ற முடியவில்லை, என்று அவர்களைக் காரணம் காட்டி ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சொல்லிக்கொண்டு வருகிருர்கள். மத்திய சர்க்கார் நிலை என்ன? இப்பொழுது இருக்கும்படியான நமது தேசத்தில் எந்த அமைப்பின் கீழ் நாம் செயல்படுகிருேம் என்பதை முதலில் தெரிந்துகொள்வது அவசியமாக இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது, அதனுடைய அதிகார வரம்பு என்ன என்பதைப்பற்றியெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதேமாதிரி மாநில சர்க்கார்களின் பொறுப்பு என்ன என்பதும் அதில் கூறப்பட்டிருக்கிறது. ஆனுல், மத்திய சர்க்காருடைய உதவி கொஞ்சம்கூட இல்லாமல் மாநில சர்க்கார் தனித்து இயங்கும்படியான நிலையிலே நம்முடைய பொருளாதார வசதி இருக்குமானுல் மத்திய சர்க்காரைப்பற்றி நாம் குறை சொல்லலாம். ரூ. 217 கோடி அளவிலுள்ள இந்த வரவு செலவுத் திட்டத்திலே மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு உதவியாக வருவது சுமார் ரூ. 75 கோடி. அந்த ரூ. 75 கோடியும் இந்தத் தொகையில் அடங்கியிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ரூ. 31 கோடி இன்கம்டாக்ஸ் மூலமாகவும், சென்டிரல் எக்சைஸ் வரி மூலமாகவும், ரூ. 25 கோடி மானியம் மூலமாகவும், மத்திய சர்க்கார் கொடுக்கும்படியான கடன்களை நாம் கொடுத்து நாம் வசூல் பண்ணும்படியான வட்டித் தொகை ரூ. 19 கோடி நமக்குக் கிடைக்கிறது, மத்திய சர்க்காரிடமிருந்து. அந்தப் பணத்தை எல்லாம் பெற்றுக் கொண்டு, ரூ. 217 கோடியில் ரூ. 75 கோடி வரைக்கும் மத்திய சர்க்காருடைய ஆதரவின் பேரில் பெற்றுக்கொண்டு, மத்திய சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னுல், பொது மக்கள் அதைப்பற்றி என்ன நினைத்துக்கொள்வார்கள்? எனவே, முதலில் இந்த அபிப்பிராயத்தை உங்கள் மனதிலிருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். அதுமாத்



வதன் மூலம் வேலை வாய்ப்பு நமக்குத்தான் ஏற்படுகிறது என்று பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. முன்பே சொல்லியிருக்கிறேன். மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்வதற்காக நான் வருத்தப்படுகிறேன். நம்முடைய மனதிலே மத்திய சர்க்காரும், நம்முடைய சர்க்காரும், இரண்டு சர்க்காரும் ஒரே சர்க்கார் தான், அந்த இடத்திலிருந்து உதவி பெற்றுக்கொண்டுதான் இருக்கிருேம் என்ற எண்ணம் வரவேண்டும். 16 மாநிலங்கள் இருக்கின்றன. மற்ற மாநில சர்க்கார்களைவிட நமக்குக் குறைவாகக் கிடைக்கிறது என்ருல், முதல் அமைச்சர் அவர்களுக்கு தன்னுடைய செல்வாக்கையும் தனித் திறமையையும், தமிழ் நாட்டு முதல் அமைச்சர் என்ற முறையில் உபயோகப்படுத்தி அதிகத் தொகையை பெறக்கூடிய சக்தி இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகையினுல் அவர்கள் சொன்ஞர்கள், இப்பொழுது நாங்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையை விட்டுவிட்டோம், தனி நாடு என்கிற நிலை வேண்டாம் என்று தீர்மானித்துவிட்டோம் என்று அதைச் சொல்லும் போது, முதல் அமைச்சர் திராவிட நாட்டுக் கோரிக்கையை விட்டுவிட்டாலும், அந்தக் கோரிக்கைக்கான அந்தக் காரியங்களை விட்டுவிடவில்லை என்று சொன்ஞர்கள். மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: காரணங்களை விட்டு விடவில்லை என்று சொல்லுகிருர்கள். காரணங்களை மட்டும் வைத்துக் கொண்டால் அது எந்த நிலையில் கொண்டு போய் விடும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேண்டாத மனைவி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பது போல ஆகிவிடும். ஆகவே, தயவு செய்து அந்தக் காரணங்களையும் நீக்க வேண்டியது அவசியம் என்று சொல்லுகிறேன்.

ஆளும் கட்சியில் இருந்தபோது, மாட மாளிகை, கூட கோபுரங்களில் இருந்தீர்கள், இப்பொழுது கஷ்டமாக இருக்கிறது என்கிருர்கள். நாங்கள் மாட மாளிகையில் இருக்கவில்லை. எப்பொழுதும் ஒரே நிலையில் தான் இருக்கிருேம். ஆகவே, வாதத்திற்காக வேண்டுமானுல் சொல்லலாம். இப்பொழுதும் நாங்கள் மக்களுக்குப் பணி புரியவேண்டும், அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், சுதந்திரத்தால் நாட்டு மக்களுக்கு நலம் உண்டாக வேண்டும், என்பதற்காகவே எங்களுடைய கட்சி எவ்வளவோ தியாகங்கள் செய்து வந்திருக்கிறது. இந்தத் தேர்தலில் தோற்றுவிட்டோம் என்று எங்களுக்கு மனச் சோர்வு கிடையாது. அது மக்கள் இஷ்டம். மக்களாகப் பார்த்து யாருக்கு ஆதரவு கொடுக்கிருர்களோ, யார் சர்க்காரை அமைக்கிருர்களோ அவர்களுக்கு ஆதரவு கொடுக்க அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பது தான் எங்கள் கட்சியின் நோக்கம். சொல்ல வேண்டியதைப் பகிரங்கமாக சொல்லுவதற்குத் தைரியம் எங்களுக்கு இருக்கிறது. காந்திஜி வழியில் வந்த நாங்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒவ்வொருவராக, இன்னின்ன காரியத்திற்காக எதிர்க்கிருேம் என்று சொல்லி எதிர்த்த சக்தி, திறமை பெருமை இருக்கிற காரணத்தால், மறைமுகமாக, பலாத்காரமாக, அல்லது வேறு விதமாகப் பேச வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கு இல்லை. இது வரையில் இல்லை, இனிமேலும் இருக்கப் போவதில்லை. அதே சமயத்திலே பேசும்போது, பேச்சுக்கள், பொறுப்பில் இருப்பவர்கள் பேசும்போது—பொறுப்பில் இல்லாத போது முன்னுல் எதை வேண்டுமானுலும் பேசிக் கொண்டு இருக்கலாம்—இப்பொழுதும் பழைய போக்கிலே போனுல் என்ன ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதல் அமைச்சர் சிறந்தவர்கள். அதே போல திறமையுள்ளவர்கள் இல்லை. அவர்களே ஒரு பேச்சைச் சொன்னுல், அந்தப் பேச்சிலே எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை உணர வேண்டும். பத்துத் தினங்களுக்கு முன் நடந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, அன்று போலீஸ் மானியத்தின் மீது பேசும்போது முதல் அமைச்சர் ஒரு கடிதத்தைப் படித்தார்கள். வருத்தப்படுகிறேன். அமைச்சர் கருணுநிதிக்கு மிரட்டல் கடிதம். அதற்கு ஒரு இலக்கணத்தையும் சொன்ஞர்கள். வெறும் கருணுநிதி என்று சொல்லி இருக்கிறது, ஆகவே, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் எழுதியிருக்கமாட்டார்கள் என்று சொன்ஞர்கள். அவையில் அதைப் படித்து விட்டார்கள். அப்படிப் படித்ததன் பலன் என்ன ஆயிற்று? ஐந்து, ஆறு கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன.

எழுதியிருப்பவர்கள் யார் என்பதை முதல் அமைச்சர் தெரிந்துகொள்ளலாம். அதோடு, ஒன்று சொல்லுவேன், அப்படிப்பட்ட கடிதங்கள் என்னவோ பெரிது அல்ல, பர்சனல் அசிஸ்டண்டே கிழித்துப் போட்டு விடுவார்கள். முதல் அமைச்சர் படித்ததன் பேரில், எனக்கு வந்த கடிதங்களை நான் படிக்கிறேன்.

1967 ஜூலை மாதம் 7-ம் தேதியன்று வந்த கடிதம் இது:

" கருத்திருமனே,

சட்டமன்றத்தில் எங்கள் முதல்வர் அண்ணாவிடம் அனாவசியமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டும், வெளிநடப்பு செய்தும், குழப்பம் விளைவித்துக் கொண்டு இருக்கிறாய். எங்கள் சொத்து கலைஞர் கருணாநிதி அவர்கள் 1967 ஜூலை 24-ல் சுட்டுக் கொல்லப்பட்டால் 1967 ஜூலை 25-ல் எங்கிருந்தாலும் சுட்டுக் (படுகொலை) கொல்லப்படுவாய்.

இது உறுதி."

இது ஃபோர்ட் செயின்ட் ஜார்ஜிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. அடுத்த கடிதம், வேறொருவர் எழுதியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிக் கடிதங்களை யெல்லாம் அவையில் வாசிப்பதாக இருந்தால், முன்னதாக பேரவைத் தலைவரிடம் காட்டி அவருடைய இசைவு பெறவேண்டும் என்று நடைமுறை இருக்கிறது. இருந்தாலும், தாங்கள் எதிர்க் கட்சித் தலைவர்......................

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இனி காட்டுகிறேன். இவற்றைத் தங்களிடமே கொடுத்துவிடுகிறேன்.

அடுத்த கடிதம் :

" கருத்திருமனுக்கு எச்சரிக்கை,

தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உயர்திரு. கருத்திருமன் அவர்களுக்கு எழுதிக் கொண்ட கடிதம்.

தமிழ் நாட்டின் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதியை 24-ந் தேதி சுட்டுவிடுவோம் என்று மிரட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு காங்கிரஸ்காரர்கள் துணிந்து கடிதம் எழுதுவதற்கு, எதிர்க் கட்சித் தலைவர் (கருத்திருமன்) தான் காரணம் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள்."

இந்த " பொது மக்கள் கூறுகிறார்கள் " என்கிற வார்த்தைகள் எப்படித்தான் வந்ததோ. ஆண்டவன் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

" சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற சில கூட்டங்களில் (கருத்திருமன்) மற்ற காங்கிரஸ்காரர்கள் பேசிய பேச்சுகள் தான், தி.மு. கழக ஆட்சியை எப்படியாவது கவிழ்த்தே தீரவேண்டும் என்றும் அதற்கு நம்மை நாம் இப்போதே தயார் செய்துகொள்ள வேண்டும் என்றும் பேசி இருக்கிறீர்கள். அன்று இருந்து தான் சென்னை நகரில் பல இடங்களில் தீப்பிடித்து எரிந்து கொண்டு இருக்கிறது. ஆகவே இந்தத் தீ விபத்துக்கு (கருத்திருமன்) நீயும் காங்கிரஸ்காரர்களும் தான் பொறுப்பு உடையவர்கள் ஆவீர்கள். சென்னை தீவிபத்துக்கும் அமைச்சர் கருணாநிதியைக் கொல்ல "......பெரும் பாவம், நினைத்திருந்தாலே பெரும் பாவம் ......"சதி நடந்திருப்பதற்கும் (கருத்திருமன்) தான் தலைமை தாங்கி சதிசெய்து காங்கிரஸ்காரர்களைத் தூண்டிவிட்டுச் செய்து இருக்கிறார். ஆகவே, இதற்கு நீ (கருத்திருமன்) தான் காரணம். தி.மு.க. ஆட்சிக்கும், தி.மு.க. தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அடுத்த வினாடி உன் நிலைமை என்ன என்பதை பொது மக்கள் தீர்மானித்து விடுவார்கள் என்பதைப் எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு "



அடுத்தபடியாக தலைவர் காமராஜருக்கு என் வழியாக எச்சரிக்கை விடுத்திருக்கிறார் ஒருவர் :

" எச்சரிக்கை.

கருத்திருமனே தயாராகச் சொல்லும் உனது தலைவர் காமராஜரை, வருகிற 24-ம் தேதி தலைவர் கருணாநிதி சுட்டுக் கொல்லப்பட்டால். 25-ஆம் தேதி உமது தலைவர் காமராஜர் எங்கு இருந்தாலும் சுட்டுப் பொசுக்கப்படுவார், என எச்சரிக்கிறேன்.

இப்படிக்கு,
தேசபக்தன்."

இந்த மாதிரி இன்னும் பல கடிதங்கள். இவற்றையும் சபாநாயகரிடம் கொடுக்கிறேன். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களுக்குப் பணி செய்யத்தான் வந்திருக்கிறோம். இந்த மாதிரி முடிவு ஏற்படும் என்றால், அதை நிச்சயமாக வரவேற்கிறோம், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். (காங்கிரஸ் கட்சி ஆரவாரம்) எங்களுடைய கடமையைச் செய்யும் காரியத்தில் எவ்வளவு நேர்ந்தாலும், எது வந்தாலும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வோம். அதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம். ஏதோ விளம்பரத்திற்காகச் சொல்லவில்லை. முதல் அமைச்சரவர்கள் சிறந்தவர்கள், மிக உயர்ந்தவர்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஒரு கடிதம் படித்தவுடன் அவர்கள் படித்தார்கள் என்கிற காரணத்தால் இப்படிப்பட்ட கடிதங்கள் எனக்கு வருகின்றன. தினம் வந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் இப்படிப்பட்ட நிலையை உண்டாக்கி யிருக்க வேண்டாம் என்று நினைத்துத் தான் இந்த சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

ஆகவே, பேசும் பேச்சுக்கள் வேறுவிதமான பலன்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. யாராக இருந்தாலும் சரி, நானாகவே இருந்தாலும் சரி, தவறு என்றால் கண்டித்து நல்ல ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும்.

இப்பொழுது இருக்கும் நிதி ஒதுக்கீடு மசோதாவைப் பொறுத்த வரையில், மானியங்களில் வந்த பேச்சுக்கள், சில பேச்சுக்கள், வெகு நன்றாக அமைந்தன. அதைப் பாராட்டத்தான் வேண்டும். குற்றத்தையே சொல்லிக் கொண்டு போவதிலே நியாயம் இல்லை. உதாரணமாக, போலீஸ் மானியத்திலே முதல் அமைச்சர் பேசிய பேச்சு மிகவும் ஆணித்தரமாகவும், நல்லவிதத்திலும் அமைந்தது. பொறுப்புள்ள பேச்சாகவும், அழகான பேச்சாகவும் இருந்தது. போலீஸ் இலாக்கா அரசியலுக்கும், அரசியல் தலையீட்டிற்கும் இடம் இல்லாமல் இயங்கும் என்றார்கள். அப்பேற்பட்ட முறையில் காரியங்கள் நிறைவேறினால், அப்படியே நடந்தால், கட்டாயம் சட்டமும் அமைதியும் நல்ல முறையிலே பாதுகாக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

பாக்கியுள்ள மானியங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், புரட்சி செய்து விட்டோம், புதுமை செய்துவிட்டோம் என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. புதுமை யில்லையா, புரட்சியில்லையா என்று கேட்டார்கள்? என்ன புதுமை செய்துவிட்டார்கள் ? எதிர்க் கட்சியில் இருந்தபோது, வரிகளைப் போட்டார்கள் என்று குறைபட்டார்கள். இப்பொழுது என்ன செய்திருக்கிறார்கள் ? முன்னே இருந்ததைவிட அதிகமாக்கியிருக்கிறார்கள். வேறு புது விதமான வரி இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். $2\frac{1}{2}$ சத விகிதம் இருந்த சேல்ஸ் டாக்சை 3 சத விகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். விவசாய வருமான வரியையும் போடப்போகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், தேவகோட்டையில் தம்பிடிக்குத் தம்பிடி என்று வட்டி போடுவதுபோல இருக்கிறது. அந்த வகையில் ஐந்து கோடி ரூபாயைத் தேடுகிறார்கள். காங்கிரஸ்காரனைவிட கெட்டிக்காரத்தனமாக நடந்திருக்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ள

லாம். நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னோம். புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று. ஆனால் இப்பொழுது சரி பாதிப் பேருக்குத் தான் அந்த வசதி கிடைக்கும் நிலைமையில் உள்ளது. 1,500. ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், 2,000 ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும் தான் இலவசக் கல்வி என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று தைரியமாகச் சொன்னார்கள். அவ்வாறே ரூபாய்க்கு ஒரு படி அரிசியும் போட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். சொன்ன காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற அவர்களின் நெஞ்சுரத்தை, தைரியத்தைப் பாராட்டுகிறேன். அவ்வாறு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டார்கள் என்று சொல்லும் போது, இந்த பட்ஜெட்டிலே எந்தெந்த இடத்திலே வெட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். கிராம மக்களின் வசதிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. லோன்ஸ் & அட்வான்ஸஸ் குறைக்கப்படுகிறது. எத்தனையோ வேலைகள், எத்தனையோ திட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்பொழுது இதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை வேறு பகுதியில் பணமாகக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் அதை வரவேற்கலாம். சென்னை, கோயமுத்தூர் ஆகிய இடங்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 5 கோடி ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. கோயமுத்தூர் என்னுடைய சொந்த மாவட்டமாயிருந்தாலுங் கூட, தமிழகம் பூராவும் இந்தத் திட்டத்தை, அதற்கு 15 கோடியோ, அல்லது 20 கோடியோ செலவானாலும் கூட அமுல் படுத்தி, அதனால் ஏற்படும் நஷ்டத்தை வேறு வகையிலே ஈடு செய்திருந்தார்களானால், பாராட்டியிருக்கலாம். வடக்கேயுள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். நீங்கள் மட்டும் சும்மா இருக்கிறீர்களே என்று கூறுகிறார்கள். முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியை உலகத் தலைவர்கள், நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்பொழுது நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது என்னென்ன செய்தீர்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. காலமும், நேரமும் வீணாகும். சட்டசபைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும், அப்பொழுது நீங்கள் சொன்னதெல்லாம். இப்பொழுது நாங்கள் இருப்பது போட்டி மனப்பான்மையோடு அல்ல. பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை அடித்துச் சொல்ல நாங்கள் இருக்கிறோம். நீங்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதற்குத்தான் நாங்கள் இருக்கிறோம். அவ்வாறு சட்டசபையிலும், வெளியிலேயும், பொதுக் கூட்டங்களிலேயும், பேச எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதுதான் ஜனநாயக உரிமை. அதை மறந்துவிட்டு, இப்படிப் பேசவேண்டாம், அப்படிப் பேசவேண்டாம் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் ஜனநாயகத்திற்கு ஆதரவு கிடைக்காத நிலை அமைந்துபோகும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலைகளில் மத்திய சர்க்காரின் ஆதரவையும், அன்பையும் பெற்றுத்தான் இந்தச் சர்க்கார் நடைபெறுகிறது. இதை மக்களிடத்திலே சொல்லும் தைரியம் இருக்கவேண்டும். அதைவிட்டு, காங்கிரஸ்காரர்கள் 500 டன் அரிசிதான் வைத்திருந்தார்கள், 400 கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதை இங்கே கேட்டால் இல்லை என்று மறுக்கிறார்கள். நாங்கள் கேள்வி கேட்டால், மெட்ராஸில்தான் இருந்தது என்று நாங்கள் சொன்னோம் என்கிறார்கள். இதற்கு ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ரூபாய்க்கு 8 கட்டு விறகு வேண்டுமென்று சொன்னான். கடைக்காரனும் சரியென்று ஒப்புக்கொண்டான். இவன் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு, எட்டு கட்டு விறகு கொடு என்றான். கடைக்காரன் எட்டு கட்டுகள் போட்ட ஒரு குச்சியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, எடுத்துக்கொள் என்றான். ரூபாயைக் கொடுத்தவன் எட்டு கட்டுகள் விறகு இல்லையே என்றான். கடைக்காரன், அதிலே எட்டு கட்டுகள் போடப்பட்டிருக்கிறது பார், தனித்தனியாக எட்டு கட்டுகள் என்று சொல்லவில்லையே என்று கூறினானாம். அதே போல நாங்கள் சென்னையிலேதானே இவ்வளவு என்று சொன்னோம், தமிழகம் பூராவும் என்று சொல்லவில்லையே என்று கூறுகிறார்கள். இது, அந்தக் கடைக்காரன் தனித்தனியாக எட்டுக் கட்டுகள் 'என்று சொல்லவில்லையே என்பதைப் போலத் தான் உள்ளது.



400 கோடி கடன் உள்ளது என்று சொல்லுகிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே இவ்வளவு முதலீடு, இவ்வளவு கடன் என்று சொல்லப்பட்டிருக்கும். அதிலே பயன் இருக்கிறதா இல்லையா என்பது எப்படிப் பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும். உதாரணமாக, வீடு, சொத்து, பூமி என்று ஒப்புவித்துவிட்டுச் செல்வார்கள், பின்னால் வருபவர்கள் அதைச் செவ்வையாக, சிறப்பாக உபயோகப்படுத்திக் கொள்பவர்களாக இருந்தால், அதைப் பொறுத்துத்தான் அந்தச் சொத்துக்கள் நல்ல முறையில் பலன் தரும். வீட்டிலே இது தவறு, அது தவறு என்று சொல்லிக் கொண்டில்லாமல் என்னென்ன அபிவிருத்திகள் செய்யலாம் என்று பார்த்து அபிவிருத்தி செய்தால் பலன்கள் கிடைக்கும். அது போலவே இருக்கும் நிதி நிலைகளை வைத்துக்கொண்டு நல்ல முறையிலே ஆட்சியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த நாள் தனிப்பட்ட முறையிலே கவனித்தாலும், எங்களுடைய கட்சி வரலாற்று முறையிலே கவனித்தாலும் நாங்கள் எல்லாம் வாழ் நாளிலே மிகவும் பொறுப்போடு கவனிக்க வேண்டிய முக்கிய நாளாகும். ஒரு மாநில அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சட்டமன்றத்திலே பெருவாரியான இடங்களைப் பெற்று அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே இந்த அரசினுடைய நிர்வாகத்திற்குத் தேவையான பெரும் பொறுப்பை, அதற்குத் தேவையான நிதி வசதியைச் சட்டமன்றத்தைக் கேட்டுப் பெறுவது என்ற ஒரு பெரிய காரியத்தின் இறுதிநாளாக இன்று அமைந்திருக்கிறது. இன்றையதினம் இந்த நாளினுடைய முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கும் நேரத்தில் எனக்கு நம்முடைய கனம் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, எடுத்துச்சொன்ன பல கருத்துக்களைவிட, தமிழ்நாட்டு மக்கள் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கும் புதிய பொறுப்பை, அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்திருக்கும் அளவு கடந்த நம்பிக்கையை, அவர்கள் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் பல்வேறு வகையான வசதிகளை, பல்வேறு வகையான நன்மைகளை, பல்வேறு வகையான நலங்களை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அறிவாற்றலையும், அதைச் செய்வதற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும், அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் மற்றவர்களிடத்திலிருந்து பெறக்கூடிய வாய்ப்புகள் நிரம்ப இருக்கவேண்டுமே என்ற எண்ணம்தான் என்னுடைய நெஞ்சத்தை அழுத்திக்கொண்டு இருக்கிறது. இதிலே, எதிர்க்கட்சியிலேயுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் குறைபாடுகள், குத்தல் பேச்சுக்கள், கிளறிவிடுவது இவைகளெல்லாம் எனக்கு இந்தப் பயத்தைக் குறைத்துக் கொள்ளப் பயன்படுகிறதே தவிர எனக்கு எரிச்சல் உண்டாக்கவில்லை. ஆனால், முதலிலே நான் இந்த அவையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நாங்கள் மேற்கொண்டுள்ள புதிய பொறுப்பை செம்மையான முறையிலே நிறைவேற்ற, பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற எங்களுக்கு எல்லாத் தரப்பு மக்களுடைய நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், வாழ்த்தும் நிரம்பக் கிடைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதுதான்.

ஒரு மாநிலத்தினுடைய ஆட்சிப்பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் உண்மையிலேயே எப்படி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம் என்பது பற்றி நம்முடைய காங்கிரஸ் நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கும் வியப்பைவிட எனக்கு அது விஷயத்தில் மிகுதியான வியப்பு உண்டு. பத்தாண்டுகளுக்கு முன்னால் சட்டமன்றத்திற்குள்ளே நாங்கள் வந்து சேர்ந்தோம். பத்தாவது ஆண்டிலே, இரண்டு முறைகள் சட்டமன்றத்தில் இடம் பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகிற அளவிற்கு நாட்டு மக்களின் பேராதரவுகிடைத்திருக்கிறது. மக்கள் எங்களிடத்தில் காட்டியிருக்கும் அன்பு உணர்ச்சி, ஆதரவு உணர்ச்சி வேறு பல கட்சிகளுக்குக் கிடைக்காத வகையிலும், தன்மையிலும் எங்களுககுக் கிடைத்திருக்கும் நேரத்தில் எனக்கு பெருமித உணர்ச்சி அல்ல, அடக்க உணர்ச்சி துவக்க நாளிலிருந்து அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

லாம். நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னோம். புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று. ஆனால் இப்பொழுது சரி பாதிப் பேருக்குத் தான் அந்த வசதி கிடைக்கும் நிலைமையில் உள்ளது. 1,500. ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், 2,000 ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும் தான் இலவசக் கல்வி என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று தைரியமாகச் சொன்னார்கள். அவ்வாறே ரூபாய்க்கு ஒரு படி அரிசியும் போட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். சொன்ன காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற அவர்களின் நெஞ்சுரத்தை, தைரியத்தைப் பாராட்டுகிறேன். அவ்வாறு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டார்கள் என்று சொல்லும் போது, இந்த பட்ஜெட்டிலே எந்தெந்த இடத்திலே வெட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். கிராம மக்களின் வசதிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. லோன்ஸ் & அட்வான்ஸஸ் குறைக்கப்படுகிறது. எத்தனையோ வேலைகள், எத்தனையோ திட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்பொழுது இதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை வேறு பகுதியில் பணமாகக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் அதை வரவேற்கலாம். சென்னை, கோயமுத்தூர் ஆகிய இடங்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 5 கோடி ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. கோயமுத்தூர் என்னுடைய சொந்த மாவட்டமாயிருந்தாலுங் கூட, தமிழகம் பூராவும் இந்தத் திட்டத்தை, அதற்கு 15 கோடியோ, அல்லது 20 கோடியோ செலவானாலும் கூட அமுல் படுத்தி, அதனால் ஏற்படும் நஷ்டத்தை வேறு வகையிலே ஈடு செய்திருந்தார்களானால், பாராட்டியிருக்கலாம். வடக்கேயுள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். நீங்கள் மட்டும் சும்மா இருக்கிறீர்களே என்று கூறுகிறார்கள். முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியை உலகத் தலைவர்கள், நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்பொழுது நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது என்னென்ன செய்தீர்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. காலமும், நேரமும் வீணாகும். சட்டசபைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும், அப்பொழுது நீங்கள் சொன்னதெல்லாம். இப்பொழுது நாங்கள் இருப்பது போட்டி மனப்பான்மையோடு அல்ல. பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை அடித்துச் சொல்ல நாங்கள் இருக்கிறோம். நீங்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதற்குத்தான் நாங்கள் இருக்கிறோம். அவ்வாறு சட்டசபையிலும், வெளியிலேயும், பொதுக் கூட்டங்களிலேயும், பேச எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதுதான் ஜனநாயக உரிமை. அதை மறந்துவிட்டு, இப்படிப் பேசவேண்டாம், அப்படிப் பேசவேண்டாம் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் ஜனநாயகத்திற்கு ஆதரவு கிடைக்காத நிலை அமைந்துபோகும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலைகளில் மத்திய சர்க்காரின் ஆதரவையும், அன்பையும் பெற்றுத்தான் இந்தச் சர்க்கார் நடைபெறுகிறது. இதை மக்களிடத்திலே சொல்லும் தைரியம் இருக்கவேண்டும். அதைவிட்டு, காங்கிரஸ்காரர்கள் 500 டன் அரிசிதான் வைத்திருந்தார்கள், 400 கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதை இங்கே கேட்டால் இல்லை என்று மறுக்கிறார்கள். நாங்கள் கேள்வி கேட்டால், மெட்ராஸில்தான் இருந்தது என்று நாங்கள் சொன்னோம் என்கிறார்கள். இதற்கு ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ரூபாய்க்கு 8 கட்டு விறகு வேண்டுமென்று சொன்னான். கடைக்காரனும் சரியென்று ஒப்புக்கொண்டான். இவன் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு, எட்டு கட்டு விறகு கொடு என்றான். கடைக்காரன் எட்டு கட்டுகள் போட்ட ஒரு குச்சியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, எடுத்துக்கொள் என்றான். ரூபாயைக் கொடுத்தவன் எட்டு கட்டுகள் விறகு இல்லையே என்றான். கடைக்காரன், அதிலே எட்டு கட்டுகள் போடப்பட்டிருக்கிறது பார், தனித்தனியாக எட்டு கட்டுகள் என்று சொல்லவில்லையே என்று கூறினானாம். அதே போல நாங்கள் சென்னையிலேதானே இவ்வளவு என்று சொன்னோம், தமிழகம் பூராவும் என்று சொல்லவில்லையே என்று கூறுகிறார்கள். இது, அந்தக் கடைக்காரன் தனித்தனியாக எட்டுக் கட்டுகள் 'என்று சொல்லவில்லையே என்பதைப் போலத் தான் உள்ளது.



400 கோடி கடன் உள்ளது என்று சொல்லுகிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே இவ்வளவு முதலீடு, இவ்வளவு கடன் என்று சொல்லப்பட்டிருக்கும். அதிலே பயன் இருக்கிறதா இல்லையா என்பது எப்படிப் பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும். உதாரணமாக, வீடு, சொத்து, பூமி என்று ஒப்புவித்துவிட்டுச் செல்வார்கள், பின்னால் வருபவர்கள் அதைச் செவ்வையாக, சிறப்பாக உபயோகப்படுத்திக் கொள்பவர்களாக இருந்தால், அதைப் பொறுத்துத்தான் அந்தச் சொத்துக்கள் நல்ல முறையில் பலன் தரும். வீட்டிலே இது தவறு, அது தவறு என்று சொல்லிக் கொண்டில்லாமல் என்னென்ன அபிவிருத்திகள் செய்யலாம் என்று பார்த்து அபிவிருத்தி செய்தால் பலன்கள் கிடைக்கும். அது போலவே இருக்கும் நிதி நிலைகளை வைத்துக்கொண்டு நல்ல முறையிலே ஆட்சியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த நாள் தனிப்பட்ட முறையிலே கவனித்தாலும், எங்களுடைய கட்சி வரலாற்று முறையிலே கவனித்தாலும் நாங்கள் எல்லாம் வாழ்நாளிலே மிகவும் பொறுப்போடு கவனிக்க வேண்டிய முக்கிய நாளாகும். ஒரு மாநில அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சட்டமன்றத்திலே பெருவாரியான இடங்களைப் பெற்று அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே இந்த அரசினுடைய நிர்வாகத்திற்குத் தேவையான பெரும் பொறுப்பை, அதற்குத் தேவையான நிதி வசதியைச் சட்டமன்றத்தைக் கேட்டுப் பெறுவது என்ற ஒரு பெரிய காரியத்தின் இறுதிநாளாக இன்று அமைந்திருக்கிறது. இன்றையதினம் இந்த நாளினுடைய முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கும் நேரத்தில் எனக்கு நம்முடைய கனம் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, எடுத்துச்சொன்ன பல கருத்துக்களைவிட, தமிழ்நாட்டு மக்கள் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கும் புதிய பொறுப்பை, அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்திருக்கும் அளவு கடந்த நம்பிக்கையை, அவர்கள் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் பல்வேறு வகையான வசதிகளை, பல்வேறு வகையான நன்மைகளை, பல்வேறு வகையான நலங்களை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அறிவாற்றலையும், அதைச் செய்வதற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும், அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் மற்றவர்களிடத்திலிருந்து பெறக்கூடிய வாய்ப்புகள் நிரம்ப இருக்கவேண்டுமே என்ற எண்ணம்தான் என்னுடைய நெஞ்சத்தை அழுத்திக்கொண்டு இருக்கிறது. இதிலே, எதிர்க்கட்சியிலேயுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் குறைபாடுகள், குத்தல் பேச்சுக்கள், கிளறிவிடுவது இவைகளெல்லாம் எனக்கு இந்தப் பயத்தைக் குறைத்துக் கொள்ளப் பயன்படுகிறதே தவிர எனக்கு எரிச்சல் உண்டாக்கவில்லை. ஆனால், முதலிலே நான் இந்த அவையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நாங்கள் மேற்கொண்டுள்ள புதிய பொறுப்பை செம்மையான முறையிலே நிறைவேற்ற, பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற எங்களுக்கு எல்லாத் தரப்பு மக்களுடைய நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், வாழ்த்தும் நிரம்பக் கிடைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதுதான்.

ஒரு மாநிலத்தினுடைய ஆட்சிப்பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் உண்மையிலேயே எப்படி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம் என்பது பற்றி நம்முடைய காங்கிரஸ் நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கும் வியப்பைவிட எனக்கு அது விஷயத்தில் மிகுதியான வியப்பு உண்டு. பத்தாண்டுகளுக்கு முன்னால் சட்டமன்றத்திற்குள்ளே நாங்கள் வந்து சேர்ந்தோம். பத்தாவது ஆண்டிலே, இரண்டு முறைகள் சட்டமன்றத்தில் இடம் பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகிற அளவிற்கு நாட்டு மக்களின் பேராதரவுகிடைத்திருக்கிறது. மக்கள் எங்களிடத்தில் காட்டியிருக்கும் அன்பு உணர்ச்சி, ஆதரவு உணர்ச்சி வேறு பல கட்சிகளுக்குக் கிடைக்காத வகையிலும், தன்மையிலும் எங்களுககுக் கிடைத்திருக்கும் நேரத்தில் எனக்கு பெருமித உணர்ச்சி அல்ல, அடக்க உணர்ச்சி துவக்க நாளிலிருந்து அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

லாம். நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னோம். புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று. ஆனால் இப்பொழுது சரி பாதிப் பேருக்குத் தான் அந்த வசதி கிடைக்கும் நிலைமையில் உள்ளது. 1,500. ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், 2,000 ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கும் தான் இலவசக் கல்வி என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று தைரியமாகச் சொன்னார்கள். அவ்வாறே ரூபாய்க்கு ஒரு படி அரிசியும் போட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். சொன்ன காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற அவர்களின் நெஞ்சுரத்தை, தைரியத்தைப் பாராட்டுகிறேன். அவ்வாறு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டார்கள் என்று சொல்லும் போது, இந்த பட்ஜெட்டிலே எந்தெந்த இடத்திலே வெட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். கிராம மக்களின் வசதிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. லோன்ஸ் & அட்வான்ஸஸ் குறைக்கப்படுகிறது. எத்தனையோ வேலைகள், எத்தனையோ திட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்பொழுது இதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை வேறு பகுதியில் பணமாகக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் அதை வரவேற்கலாம். சென்னை, கோயமுத்தூர் ஆகிய இடங்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 5 கோடி ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. கோயமுத்தூர் என்னுடைய சொந்த மாவட்டமாயிருந்தாலுங் கூட, தமிழகம் பூராவும் இந்தத் திட்டத்தை, அதற்கு 15 கோடியோ, அல்லது 20 கோடியோ செலவானாலும் கூட அமுல் படுத்தி, அதனால் ஏற்படும் நஷ்டத்தை வேறு வகையிலே ஈடு செய்திருந்தார்களானால், பாராட்டியிருக்கலாம். வடக்கேயுள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். நீங்கள் மட்டும் சும்மா இருக்கிறீர்களே என்று கூறுகிறார்கள். முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியை உலகத் தலைவர்கள், நிபுணர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்பொழுது நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது என்னென்ன செய்தீர்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. காலமும், நேரமும் வீணாகும். சட்டசபைக் குறிப்புகளைப் பார்த்தால் தெரியும், அப்பொழுது நீங்கள் சொன்னதெல்லாம். இப்பொழுது நாங்கள் இருப்பது போட்டி மனப்பான்மையோடு அல்ல. பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை அடித்துச் சொல்ல நாங்கள் இருக்கிறோம். நீங்கள் செய்யும் தவறுகளைத் திருத்துவதற்குத்தான் நாங்கள் இருக்கிறோம். அவ்வாறு சட்டசபையிலும், வெளியிலேயும், பொதுக் கூட்டங்களிலேயும், பேச எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதுதான் ஜனநாயக உரிமை. அதை மறந்துவிட்டு, இப்படிப் பேசவேண்டாம், அப்படிப் பேசவேண்டாம் என்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் ஜனநாயகத்திற்கு ஆதரவு கிடைக்காத நிலை அமைந்துபோகும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலைகளில் மத்திய சர்க்காரின் ஆதரவையும், அன்பையும் பெற்றுத்தான் இந்தச் சர்க்கார் நடைபெறுகிறது. இதை மக்களிடத்திலே சொல்லும் தைரியம் இருக்கவேண்டும். அதைவிட்டு, காங்கிரஸ்காரர்கள் 500 டன் அரிசிதான் வைத்திருந்தார்கள், 400 கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதை இங்கே கேட்டால் இல்லை என்று மறுக்கிறார்கள். நாங்கள் கேள்வி கேட்டால், மெட்றாஸில்தான் இருந்தது என்று நாங்கள் சொன்னோம் என்கிறார்கள். இதற்கு ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ரூபாய்க்கு 8 கட்டு விறகு வேண்டுமென்று சொன்னான். கடைக்காரனும் சரியென்று ஒப்புக்கொண்டான். இவன் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு, எட்டு கட்டு விறகு கொடு என்றான். கடைக்காரன் எட்டு கட்டுகள் போட்ட ஒரு குச்சியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, எடுத்துக்கொள் என்றான். ரூபாயைக் கொடுத்தவன் எட்டு கட்டுகள் விறகு இல்லையே என்றான். கடைக்காரன், அதிலே எட்டு கட்டுகள் போடப்பட்டிருக்கிறது பார், தனித்தனியாக எட்டு கட்டுகள் என்று சொல்லவில்லையே என்று கூறினானாம். அதே போல நாங்கள் சென்னையிலேதானே இவ்வளவு என்று சொன்னோம், தமிழகம் பூராவும் என்று சொல்லவில்லையே என்று கூறுகிறார்கள். இது, அந்தக் கடைக்காரன் தனித்தனியாக எட்டுக் கட்டுகள் 'என்று சொல்லவில்லையே என்பதைப் போலத் தான் உள்ளது.



400 கோடி கடன் உள்ளது என்று சொல்லுகிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே இவ்வளவு முதலீடு, இவ்வளவு கடன் என்று சொல்லப்பட்டிருக்கும். அதிலே பயன் இருக்கிறதா இல்லையா என்பது எப்படிப் பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் இருக்கும். உதாரணமாக, வீடு, சொத்து, பூமி என்று ஒப்புவித்துவிட்டுச் செல்வார்கள், பின்னால் வருபவர்கள் அதைச் செவ்வையாக, சிறப்பாக உபயோகப்படுத்திக் கொள்பவர்களாக இருந்தால், அதைப் பொறுத்துத்தான் அந்தச் சொத்துக்கள் நல்ல முறையில் பலன் தரும். வீட்டிலே இது தவறு, அது தவறு என்று சொல்லிக் கொண்டில்லாமல் என்னென்ன அபிவிருத்திகள் செய்யலாம் என்று பார்த்து அபிவிருத்தி செய்தால் பலன்கள் கிடைக்கும். அது போலவே இருக்கும் நிதி நிலைகளை வைத்துக்கொண்டு நல்ல முறையிலே ஆட்சியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த நாள் தனிப்பட்ட முறையிலே கவனித்தாலும், எங்களுடைய கட்சி வரலாற்று முறையிலே கவனித்தாலும் நாங்கள் எல்லாம் வாழ்நாளிலே மிகவும் பொறுப்போடு கவனிக்க வேண்டிய முக்கிய நாளாகும். ஒரு மாநில அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சட்டமன்றத்திலே பெருவாரியான இடங்களைப் பெற்று அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே இந்த அரசினுடைய நிர்வாகத்திற்குத் தேவையான பெரும் பொறுப்பை, அதற்குத் தேவையான நிதி வசதியைச் சட்டமன்றத்தைக் கேட்டுப் பெறுவது என்ற ஒரு பெரிய காரியத்தின் இறுதிநாளாக இன்று அமைந்திருக்கிறது. இன்றையதினம் இந்த நாளினுடைய முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கும் நேரத்தில் எனக்கு நம்முடைய கனம் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, எடுத்துச்சொன்ன பல கருத்துக்களைவிட, தமிழ்நாட்டு மக்கள் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கும் புதிய பொறுப்பை, அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்திருக்கும் அளவு கடந்த நம்பிக்கையை, அவர்கள் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் பல்வேறு வகையான வசதிகளை, பல்வேறு வகையான நன்மைகளை, பல்வேறு வகையான நலங்களை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அறிவாற்றலையும், அதைச் செய்வதற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும், அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் மற்றவர்களிடத்திலிருந்து பெறக்கூடிய வாய்ப்புகள் நிரம்ப இருக்கவேண்டுமே என்ற எண்ணம்தான் என்னுடைய நெஞ்சத்தை அழுத்திக்கொண்டு இருக்கிறது. இதிலே, எதிர்க்கட்சியிலேயுள்ளவர்கள் எடுத்துச்சொல்லும் குறைபாடுகள், குத்தல் பேச்சுக்கள், கிளறிவிடுவது இவைகளெல்லாம் எனக்கு இந்தப் பயத்தைக் குறைத்துக் கொள்ளப் பயன்படுகிறதே தவிர எனக்கு எரிச்சல் உண்டாக்கவில்லை. ஆனால், முதலிலே நான் இந்த அவையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நாங்கள் மேற்கொண்டுள்ள புதிய பொறுப்பை செம்மையான முறையிலே நிறைவேற்ற, பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற எங்களுக்கு எல்லாத் தரப்பு மக்களுடைய நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், வாழ்த்தும் நிரம்பக் கிடைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதுதான்.

ஒரு மாநிலத்தினுடைய ஆட்சிப்பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் உண்மையிலேயே எப்படி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம் என்பது பற்றி நம்முடைய காங்கிரஸ் நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கும் வியப்பைவிட எனக்கு அது விஷயத்தில் மிகுதியான வியப்பு உண்டு. பத்தாண்டுகளுக்கு முன்னால் சட்டமன்றத்திற்குள்ளே நாங்கள் வந்து சேர்ந்தோம். பத்தாவது ஆண்டிலே, இரண்டு முறைகள் சட்டமன்றத்தில் இடம் பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகிற அளவிற்கு நாட்டு மக்களின் பேராதரவுகிடைத்திருக்கிறது.மக்கள் எங்களிடத்தில் காட்டியிருக்கும் அன்பு உணர்ச்சி, ஆதரவு உணர்ச்சி வேறு பல கட்சிகளுக்குக் கிடைக்காத வகையிலும், தன்மையிலும் எங்களுககுக் கிடைத்திருக்கும் நேரத்தில் எனக்கு பெருமித உணர்ச்சி அல்ல, அடக்க உணர்ச்சி துவக்க நாளிலிருந்து அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் கட்சி அரசாள்வதற்கு முன்னுல் உள்ள வரலாறு
களும், அவர்களுக்குக் கிடைத்த தலைவர்களும், அவர்கள் நடத்திய
போராட்டங்களும் இன்று காங்கிரஸில் உள்ள பெரும்பாலானவர்களுக்குச்
சொந்தம் இல்லை ; பந்தம் இல்லை, பற்று இல்லை, பாசம் இல்லை.
தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு மட்டும்தான் இருக்கிறது.
இது எங்கள் வரலாறு, இது எங்கள் கட்சி, இவர்கள் எங்கள் தலைவர்கள்
என்று அவர்கள் சொல்லிக்கொள்ளுகின்ற அளவுக்கு, ஒரு பெருமித
உணர்ச்சி பெறத்தக்க பெரிய அளவிலே அவர்களுக்கு அமைந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் பத்து வருஷங்களுக்குள் சட்ட மன்றத்
திலே இடம் பெறத்தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதற்கு
முன்னுலே இருந்த வரலாற்றின் துணையைக் கொண்டு நாங்கள் பதவிக்கு
வந்தவர்கள் அல்லர். நாங்கள் பதவிக்கு வந்திருக்கிறேம் ; ஒரு வரலாற்
றையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறேம். இந்த ஒரு வேகத்தை நம்மு
டைய எதிர்க்கட்சித் தோழர்கள் உணருவார்களானுல், இவ்வளவு அதிக
மான அளவுக்கு எங்களைப் பற்றித் தாக்கிப் பேசலாம் என்ற எண்ணம்
அவர்களுக்கு வந்திருக்க முடியாது.

சாதாரணமாக வரலாறு சொல்லுவார்கள், ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர்
தெரு விளக்கிலே படித்துக்கொண்டே ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனுர் என்று
அதைப் போல, நாங்கள் ஏற்படுத்தி நடத்திக் கொண்டுவருகிற திராவிட
முன்னேற்றக் கழகம் எந்தவிதமான வசதிகளையும் வாய்ப்புகளையும் பெருத
நாளிலேயிருந்து, பொது மக்களிடத்திலே பெற்றிருந்த தொடர்ப
காரணமாகவே, இந்த நிலைமைகளுக்கு நாங்கள் வந்திருக்கிறேம் என்
பதை எண்ணிப்பார்க்கும் நேரத்தில், எப்படி ஜஸ்டிஸ் முத்துசாமி ஐய
எளிய நிலையிலேயிருந்து உயர்நீதிமன்றத்திற்கு வந்த பிறகும், அவர்கள்
உயர்நீதி மன்றத்திலே அமர்ந்திருந்த நீதிபதிகளிலேயே மிகச் சிலாக்கிய
மானவர்கள் என்று பெயர் எடுத்தாரோ, அப்படிப்பட்ட ஒரு நற்பெயர்
எடுக்க வேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இயற்கையாக இருக்கிறது.

எங்களுக்கு அந்த நற்பெயர் கிடைக்க வேண்டுமானுல், எல்லாக் கட்சி
களினுடைய ஒத்துழைப்பும் எங்களுக்கு நிச்சயமாகத் தேவை. எல்லாக
கட்சிகளினுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல ; அதிகாரிகளினுடைய ஒத்து
